கல்கி



KALKI அக்டோபர் 28, 1956 4 அணா



கொண்டாடிக் குதூகலிக்கும் நேரம் இதோ...

கவலைகள் யாவையும் உதறிவிட்டுக் களித்து இன்புறும் நேரம்
இதோ... முத்துக் கோத்ததுபோலக் கலகலப்பாகக்
காட்சியளிக்கும் வரிசை வரிசையான தீபாலங்காரங்களால்
வீட்டை விளங்கச் செய்திடும் நேரம் இதோ.
உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அறுசுவை உணவு
படைத்து விமரிசையான விருந்து நிகழ்த்தும் நேரம்
இதோ... கறி, கூட்டு, வடை, பாயசம், ஜாங்கிரி, குலோப்
ஜாமூன், லட்டு—எல்லாமே புஷ்டியளிக்கும் தூய டால்டா
வில் தயாரித்தவை. ஆம், இதோ இத் தீபாவளி தினத்தன்று.
இன்ப நாட்களின் குதூகலத்தைப் பூரணமாக அனுபவிக்க
விரும்பும் உங்களுக்கு டால்டா உதவி புரியட்டும்.

டால்டா பிராண்ட் வனஸ்பதி

10 பவுண்டு*, 5 பவுண்டு*, 2 பவுண்டு*, 1 பவுண்டு,
½ பவுண்டு டின்களில் விற்கப்படுகிறது

*இரட்டை மூடி உடைய டின்கள்



HVM. 284-50 TM

மலர் 16
இதழ் 13

கல்கி

பொருளடக்கம்

ஐப்பசி 12

அக்டோபர் 28, 1956

கவர்ச்சிகரமான **பின்னி**யின் சில்க் புடவைகளை—
அநேகமாக எல்லோரும்

வெங்கடேஷ் வஸ்திராலயாவில்

வாங்குகிறார்கள்

உங்களுக்குத் தேர்ந்தெடுக்க பல்வேறு நிறங்களும், நிறபேதங்களும், டிஸைன்களுமுள்ள அநேக திணுசுகள் எங்களிடம் உள்ளன.

வீண் கால விரயமின்றி சிறந்த புடவைகளையே வாங்க விரும்பும் பெண்மணிகள் எப்பொழுதும், மக்களின் நன்மதிப்பும் பெற்ற வெங்கடேஷ் வஸ்திராலயாவிலேயே வாங்குகிறார்கள். நாங்கள் ஸ்டாக் செய்யும் ஆயிரக்கணக்கான பின்னித் துணி ரகங்களில் உங்களைப் பிரமிக்க வைக்கும் பல்வேறு திணுசு ஸில்க் புடவைகள் உள்ளன.


புன்முறுவலுடன் துரித சேவை புரியக் காத்திருக்கும் வெங்கடேஷ் வஸ்திராலயாவின் விநயமுள்ள சிப்பந்திகள் உங்கள் தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்வார்கள். இதனால்தான், சௌகரியமானவையும், உன்னத ரகம் வாய்ந்தவையுமான ஸில்க் புடவைகளை மதராஸில் அநேகமாக எல்லோரும் வெங்கடேஷ் வஸ்திராலயாவிலேயே வாங்குகிறார்கள்!

நாங்கள் பின்னியின் துணிகளையே ஸ்டாக் செய்கிறோம்.
அவை சிறந்தவையென உங்களுக்குத் தெரியும்.



வெங்கடேஷ் வஸ்திராலயா

ஷோரூம்கள் : ஹைக்கோர்ட்டுக்கு எதிரில்
மற்றும் 2, தம்புச்செட்டித் தெரு, மதராஸ் 1



தீபாவளியை முன்னிட்டு பொதுஜனங்களின் சௌகரியத்திற்காக
எங்கள் ஷோரூம்கள் 28-10-56 ஞாயிற்றுக்கிழமை திறந்திருக்கும்



மலர் 16 | தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற | துன்முகி௵
இதழ் 13 | தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | ஐப்பசி 12

திருத்தணிப் பிரச்னை

சென்னை ராஜ்ய சர்க்கார் பத்து மாதங்களுக்குமுன் இந்திய சர்க்காருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதற்கு இத்தனை மாதங்களாகியும் பதில் வரவில்லையே, இன்னமும் பதில வரவில்லையே என்று தமிழரசுக் கழகத்தின் தலைவர் திரு ம. பொ. சி. பெரும் கிளர்ச்சி செய்தார். அதன்பயனாக இப்போது பந்த் அவர்களிடமிருந்து பதில் வந்தது. மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாக முடிந்தது.

“ஆந்திர – சென்னை எல்லைப் பிரச்னையை நவம்பருக்குப் பிறகு ஏற்படப் போகும் தென் மண்டலச் சபை கவனிக்கும்” என்று பந்த்ஜி சொல்லிவிட்டார். இதைச் சொல்லப் பத்து மாதங்கள் தாமதித்திருக்க வேண்டியதில்லை.

நமது சென்னை சர்க்காரோ இது ஒரு சிறிய பிரச்னை என்றே எண்ணுகிறார்கள் போல் தோன்றுகிறது. சிறிய பிரச்னையாக இருந்தால் இதை நல்ல முறையில் முன்பே தீர்த்திருக்கலாம் அல்லவா? தீர்க்காதது நமது சென்னை ராஜ்ய சர்க்காரின் தவறாகும். நமது ராஜ்ய மந்திரிகள் இப்பிரச்னையைத் தில்லி சர்க்காருக்குச் சரியாக எடுத்துச் சொல்லி யிருந்தால் இப்பிரச்னை எத்தனையோ நாட்களுக்குமுன்பு வெகு எளிதில் முடிந்திருக்கும்.

பிரச்னையைச் சற்றுச் சுருக்கமாக நினைவுபடுத்திக் கொள்வோம்.

ஒருகாலத்தில் திருத்தணி, புத்தூர் முதலிய பகுதிகள் வடஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த, அதாவது வேலூர் கலெக்டர் ஆபீசுக்கு அடங்கிய பகுதிகளாக இருந்தன.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் திருத்தணி, புத்தூர், முதலிய தாலூக்காக்களையும் கடப்பை ஜில்லாவிலிருந்து சில தாலூக்காக்களையும் சேர்த்து வெறும் நிர்வாக வசதிக்காகச் சித்தூர் என்ற ஒரு ஜில்லாவைச் சிருஷ்டித்தனர். மொழியைப்பற்றி உண்டாக்கப்பட்ட பிரிவு அல்ல.

மொழி அடிப்படையில் ஆந்திர ராஜ்யம் பிரிக்கப்பட்டபோது, தர்ம நியாயமான முறையில் இரு சர்க்கார் அதிகாரிகளும் பேசித் தங்கள் எல்லைகளை வகுத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

தர்ம நியாயமான முறை எது? பள்ளிக்கூடம் கலைந்ததும் அந்தந்தப் பிள்ளைகள் அவரவர்கள் வீட்டுக்கு வந்து சேர்வதுபோல. சித்தூரில் சேர்க்கப்பட்ட தமிழ் தாலூக்காக்கள் வடஆற்காடுக்குத் திரும்பி வரவேண்டியது நியாயம். மொழி அடிப்படையில் இரு ராஜ்யங்கள் அமையும்போது சித்தூர் ஜில்லா கலைக்கப்பட்டுப் பழையபடி திருத்தணியும், புத்தூரும் வடஆற்காடு ஜில்லாவிலும் மற்ற தாலூக்காக்கள் அவை முன்பிருந்த ஜில்லாவிற்கும் போயிருக்க வேண்டும். இப்படிச் செய்வதை விட்டு விட்டு ஆந்திர மந்திரிகள் மைசூர் ராஜ்யத்தை அடுத்த ஹோசூர் விஷயத்தை எடுத்துக் கொண்டு, போட்டிச் சவால் ஒன்று கிளப்பிக் குட்டையைக் குழப்பிப் பிரச்னையைத் தீர்க்காமற் கலைந்தனர். மண்ணாசையினால் இப்படி நேர்ந்தது.

இந்திய சர்க்காராவது ஒரு கமிட்டியையோ அல்லது மத்தியஸ்தரையோ நியமித்து இந்தப் பிரச்னையை முடித்திருக்க வேண்டும்; அவர்களும் அப்படிச் செய்யத் தவறி விட்டார்கள்.

ஒரு கஷ்டமும் ஒரு கமிட்டியும் இல்லாமல் வெறும் ஜனத்தொகைக் கணக்கைப் பார்த்தே எந்தப் பகுதியில் தமிழ் மக்கள் அதிகமாக இருக்கிறார்களோ அந்தப்

பகுதியைத் தமிழ் நாட்டுக்கும், ஆந்திரர்கள் அதிகமாக உள்ள பகுதிகளை ஆந்திர நாட்டுக்கும் பிரித்துக் கொடுத்திருக்கலாம்.

திருத்தணி தாலூக்காவிலும் புத்தூரில் ஒரு பகுதியிலும் தமிழர்களின் ஜனத் தொகை சந்தேகமற்ற வகையில் பெரும் தொகுதியாக இருக்கிறபடியால் இவ்வாறு சொல்லுகிறோம்.

இவ்வளவு சுலபமாகச் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் சென்னை சர்க்காரும் மத்திய சர்க்காரும் காலம் கடத்தி விட்டார்கள். இதனால் திருத்தணியிலும் மற்ற இடங்களிலும் தமிழர்கள் பல அநியாயங்களுக்கு உள்ளாயினர். ஒரு பஞ்சாயத்துச் சபையின் ரேடியோவை ஆந்திர சர்க்கார் தூக்கிக் கொண்டு போய் விட்டனராம். காரணம், அந்த ரேடியோ பெட்டியிலிருந்து திருச்சி நிலைய நிகழ்ச்சி தமிழில் வெளி வந்து கொண்டிருந்ததுதான்! திருத்தணி பஞ்சாயத்தைக் கலைத்து விட்டதற்கும் தமிழே காரணமாக இருந்தது.

மொழி அடிப்படையில் பிரிந்து நிற்கும் ராஜ்யங்களிடையே ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும் என்பது மண்டல கவுன்ஸில்கள் நியமனத்தின் நோக்கம். ராஜ்யங்களின் பொருளாதாரங்களை ஒன்று சேர்த்து முன்னேற வழி வகைகள் காண்பது மண்டல சபை ஏற்பாட்டின் கருத்து. மண்டல கவுன்ஸிலில் சௌஜன்யமும் சுமுகமும் நிலவாமற் போவதற்கு உண்டான வழி எது உண்டோ அதை இப்போது பந்த்ஜி செய்து விட்டார். இப்படி ஆரம்பத்திலேயே ஒரு சண்டையைக் கிளப்பி விட்டால் மண்டலச் சபை யுத்தகளமாக நீடித்துப் போகும்!

இந்த விஷயத்தில், குறுகிப்போன ராஜ்யத்தை வைத்துக் கொண்டு வாழும் தமிழ் மக்களின் உணர்ச்சியைப் புரிந்து கொள்ளாது பந்த்ஜி அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இந்த அறிக்கை தமிழ் மக்களுக்கு ஏற்கனவே ஏற்பட்டுள்ள அதிருப்தியை அதிகப்படுத்தி, மத்திய சர்க்காரிடமும் அகில இந்திய காங்கிரஸிடமும் அதிருப்தியை வளர்க்கும்.

கைத்தறிப் பிரச்னை

சென்ற வாரம் பத்திரிகைகளில் எழு பத்தி கொட்டை எழுத்துத் தலைப்பிட்டு ஓர் செய்தி வெளியாகியிருந்தது.

அந்தச் செய்தியைப் படித்தவர்களில் பலர்,- நெசவுத் தொழிலாளர்களின் குடும்ப நிலை தெரியாதவர்கள், 'ஆகா! நமது இந்திய சர்க்காருக்குத்தான் கைத்தறி நெசவாளர்களிடம் எவ்வளவு பரிவு!' என்று வியந்து மூர்ச்சை போட்டு விழுந்திருப்பார்கள்!

'கைத்தறி நெசவாளர்களுக்காகப் பாரத சர்க்கார் பதினைவரை லட்ச ரூபாய் கடன் உதவி தரப்போகிறார்களாமே! கூட்டுறவுச் சங்கங்களில் முன்பே சேர்ந்திருந்தாலும் சரி, இப்போதுதான் சேர்ந்தவர்கள் என்றாலும் சரி, எந்தவிதமான பாகுபாடும் பார்க்காமல் தலைக்கு ரூ. 300 கடன் தரப்போகிறார்களாமே!' என்று மலைத்திருப்பார்கள்.

ஏழைகள் கடன் வாங்கிய உடனே அதைத் தீர்ப்பதற்கு வழியில்லாமல் வரவர குடும்ப நிலை கெட்டுப் போவது உலகறிந்த விஷயம். யாருக்குக் கடன் கொடுத்தாலும் அன்றாடம் தொழில் செய்து ஜீவிக்கும் ஏழை மக்களுக்குக் கடன் கொடுக்கலாகாது. கொடுத்தால் அவர்களை வலையில் சிக்க வைப்பதாகும்.

இந்தக் கடன் உதவியைப் பெற்றுச் சந்தோஷப்பட வேண்டியவர்கள் சந்தோஷப் படுவதாகக் காணோம். கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்துள்ள ஒரு சிலருக்குக் கடனுதவி என்ற பெயரில் லஞ்சம் கொடுத்துக் கைத்தறிகளுக்குப் போட்டியாக மின்சாரத்தறிகளை உண்டாக்கப் பார்க்கிறார்கள் என்றே ஏழைக் கைத்தறியாளர்கள் கருதுகிறார்கள்.

கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்தவர்கள் தவிர, அவற்றில் இடம் பெறாத லட்சக்கணக்கான குடும்பங்கள் கைத்தறியில் நெசவுசெய்து பிழைத்து வருகிறார்கள்.

வேஷ்டி, சேலைகளில் மில்களின் போட்டியைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு அதைச் செய்யாமல் நூற்றுக்கணக்கான புதிய சிறிய 'மில்'களை உண்டாக்கித் தொல்லையுண்டாக்கத் திட்டம் போட்டிருப்பது பெரிய தவறு. மில் போட்டியினால் கைத்தறிகள் வேலையில்லாமல் கிடக்கின்றன. வியாபார வசதி ஏற்பட, ஏற்பட நெசவுக் குடும்பங்களில் ஓடாமல் கிடக்கும் தறிகள் ஓடத் தொடங்கிவிடும். தற்சமயம் தறிகள் ஓடாததற்குக் காரணம் சர்க்காருடைய மில் துணிக்கு உதவும் கொள்கையே. பதிவுச் சட்டம் ஏற்படுத்தித் தறிகளின் கணக்கைக் குறைப்பதில் பயனில்லை.


மத்திய சர்க்காரின் விசைத் தறிக் கொள்கையை ஆந்திர சர்க்கார் பலமாக எதிர்த்து, "தங்கள் ராஜ்யத்தில் விசைத்தறியைப்புகுத்த முடியாது" என்று மறுத்து விட்டார்கள்.

ஆந்திர ராஜ்யத்தை விடத் தமிழ் நாட்டில் நெசவாளர்களின் எண்ணிக்கை மிக அதிகம். இருப்பினும் சென்னை சர்க்கார் இது விஷயமாகத் தைரியமாக வேலை செய்யாமல் இருக்கிறது. ஒருவேளை, பிடிவாதம் பிடிக்கும் மத்திய சர்க்காரிலுள்ள தமிழ் மந்திரிக்கும், நம்முடைய முதன் மந்திரிக்குமுள்ள பரஸ்பர நட்பின் காரணமாக உண்டான தாட்சிண்யத்தில் இந்த நெசவாளர் பிரச்னை அகப்பட்டுக் கொண்டு தீராமல் இருக்கிறதோ?

லட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வு ஊசலாடிக் கொண்டிருக்கும்போது நம்முடைய மந்திரி சபை தாட்சிண்யத்துக்குக் கட்டுப்படலாகாது.


ஆந்திர சர்க்காரைப் பின்பற்றிச் சென்னை சர்க்கார் கைத்தறி சம்பந்தமாகத் தன் கொள்கையைத் திட்டவட்டமாகச் சொல்லாவிடில் காங்கிரஸுக்குக் கைத்தறியாளர்களின் வோட்டுக்கள் கிடைப்பது மிகவும் துர்லபம். வோட்டுக்களுக்காகவாவது செய்ய வேண்டியதைச் செய்வார்களாக. இல்லாவிடில் இங்கும் அங்கும் சுயேச்சை அபேட்சகர்களுக்கு வோட்டுகள் போய்ச் சேர்ந்து காங்கிரஸ் கட்சிக்கு நஷ்டம் உண்டாகும்.

ஒளி பரவுகிறது!



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஒரு அபேட்சகராக நிற்கும் ஸ்டீவன்சன் ஹைட்ரஜன் குண்டு சோதனைகளை நிறுத்த வேண்டும் என்பதைத் தமது தேர்தல் திட்டமாகக் கொண்டுள்ளார்.

கண்ணிருந்தும்....



அமெரிக்கத் தேர்தலில் ஜலஜ குண்டு!

"**மா**னிட வர்க்கம் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத காற்றையும் நீரையும் பாழ்படுத்தி விஷமாக்கும் (ஹைட்ரஜன்) ஜலஜ குண்டு சோதனைகளை நிறுத்துங்கள்" என்று ராஜாஜி சென்ற ஒரு வருஷத்துக்கு மேலாக இடைவிடாமல் கூறி வருகிறார். உலகப் புகழ் பெற்ற பல விஞ்ஞானிகளும் அதே கருத்தை வற்புறுத்தியுள்ளனர். ஆனால், இந்த அரிய உபதேசம் வல்லரசுத் தலைவர்களுடைய செவிகளில் விழவில்லை. இந்தக் கொடிய சோதனைப் போட்டியில் முன்பு அமெரிக்காவும் ருஷ்யாவும் மாத்திரம் ஈடுபட்டு வந்தன. இப்போது பிரிட்டனும் சோதனைகளை நடத்தத் தொடங்கி விட்டது. மேற்படி ராட்சத குண்டுகளின் அழிக்கும் சக்தியை இப்படியே எல்லையின்றிச் சோதனை செய்து கொண்டு போனால், அணுகுண்டு யுத்தம் வராமலேயே மானிட வர்க்கம் அழிந்து விடலாம்.

ஆனால், அத்தகைய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படாது என்பதற்கான முதல் அறிகுறி இப்போது தோன்றியிருக்கிறது.

அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகளின் சிருஷ்டியில் வல்லரசுகளுக்குச் சட்டாம்பிள்ளை ஸ்தானம் வகிக்கும் அமெரிக்காவில், வரப்போகும் ஜனாதிபதி தேர்தலுக்கு ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ அட்லய் ஸ்டீவன்சன் ஓர் அபேட்சகராக நிற்கிறார். ரிபப்ளிகன் கட்சியைச் சேர்ந்தவரும் தற்போதைய ஜனாதிபதியுமான ஜெனரல் ஐஸன்ஹோவரை எதிர்க்கிறார். பெரிய தேர்தல் யுத்தம்.

ஹைட்ரஜன் குண்டு சோதனையை நிறுத்தி விட வேண்டும் என்பதை ஸ்டீவன்சன் தமது தேர்தல் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகக் கொண்டிருக்கிறார். ஆனால், மேற்படி சோதனையை நிறுத்தினால் குடிமுழுகிப் போய் விடுமென ஜெனரல் ஐசன்ஹோவரும் அவரது கட்சியினரும் கூக்குரலிடுகின்றனர்.

பிற நாட்டை எதிர்பார்க்காமலேயே அமெரிக்கா ஹைட்ரஜன் குண்டு சோதனையை நிறுத்திவிட வேண்டும் என்றும், அதற்குப் பிறகும்கூட ருஷ்யா சோதனை செய்யுமாயின் அமெரிக்கா மறுபடியும் ஹைகுண்டு சோதனையை ஆரம்பித்து விடலாமென்றும் ஸ்டீவன்சன் கூறுகிறார். ஐஸன்ஹோவர் கோஷ்டியினர் இந்தயோசனையை ஏற்கவில்லை.

தேர்தலில் தாம் வெற்றிபெற்றால் முதல் அலுவலாக ஹை-குண்டு சோதனையை நிறுத்தப் போவதாக ஸ்டீவன்சன் உறுதி கூறியுள்ளார். தேர்தலில் ஸ்டீவன்சன் வெற்றி பெற்றால், அது பாரத நாட்டின் கொள்கைக்கு மகத்தான வெற்றியாகும்.

அமெரிக்க நாட்டிலுள்ள நல்லவர்கள் இந்த அணுகுண்டு பிரச்னை ஒன்றையே வைத்து ஸ்டீவன்ஸனுக்கு வெற்றி தோற்றுவிக்கக் கூடும்.

ஓயாத நினைவு!

அவள் நெற்றிக்குத் திலகமிட்டுக் கொள்ள வேண்டும் என்று தன் கையில் சாந்துக் கிண்ணத்தை எடுத்தாள்! விரலில் சாந்தைக் கூட எடுத்து விட்டாள். அதற்குள் சிந்தை வேறு எங்கோ சென்று விட்டது. விரலில் எடுத்த சாந்து நெற்றி வரை போகவில்லை.

அப்படி அவள் உள்ளத்தைக் கவர்ந்து விட்ட விஷயம்தான் என்ன? இதோ மகாகவி பாரதியார், சொல்வதைக் கேளுங்கள்: கண்ணன் மேல் காதல் கொண்ட ஒரு பெண்ணின் நிலையிலிருந்து தமிழகக் கவிஞர் பாடுவதைப் பாருங்கள்.

"ஓய்வு மொழிதலுமில் லாமல்—அவன்
உறவை நினைத்திருக்கும் உள்ளம்"

இன்னும் ஒருவாரம் போனால் தீபாவளித் திருநாள். தமிழ் கூறும் நல்லுலகில் பல இளம் பெண்கள், ஓவியர் கனு தேஸாய் இவ்வார அட்டைச் சித்திரத்தில் சித்திரித்திருக்கும் நிலையில் இருப்பார்கள்! அவர்கள் உள்ளமும் 'ஓய்வும் ஒழிதலுமின்றி'ப் பற்பல இன்ப நினைவுகளில் ஈடுபட்டிருக்கும் அல்லவா!

'கல்கி' நேயர்களுக்கு ஒரு அறிவிப்பு

திருக்கோவிலூரில் கல்கி ஏஜன்ஸி மாற்றம்

திருக்கோவிலூரில் இதுவரை திரு ஜி. ஏ. கோவிந்தசாமி பேரில் இருந்த 'கல்கி' விற்பனை ஏஜென்ஸியை அக்டோபர் 7-ந் தேதி இதழுடன் ரத்து செய்து விட்டோம்.

எனவே திருக்கோவிலூரில் உள்ள 'கல்கி' நேயர்களும், விற்பனையாளர்களும் அங்கு நமது புதிய ஏஜெண்டான திரு டி. ஜெகந்நாதன் (C/o திரு வி. ஆர். ஸ்ரீநிவாசன், நியூஸ் ஏஜெண்ட், திருக்கோவிலூர்) அவர்களிடமிருந்தே தங்களுக்குத் தேவையான 'கல்கி' பிரதிகளை வாங்கிக் கொள்ளக் கோருகிறோம்.

மானேஜர், 'கல்கி' காரியாலயம், கீழ்ப்பாக்கம், சென்னை-10

அன்பார்ந்த நேயர்களுக்கு

"எங்கே தீபாவளி மலர்?" "தீபாவளி மலர் எங்கே?" என்று அதிகாரக் குரல் கேட்டது. நாலாபுறமும் திரும்பிப் பார்த்தோம். ஒருவரையும் காணுமல் ஒரு கணம் திகைத்து நின்றபோது 'படீர்' என்று கதவைத் திறந்து கொண்டு 'திடீர்' என்று தமது வாகனத்துடன் உள்ளே நுழைந்தார் ஸ்ரீ விநாயகப் பெருமான்.

உள்ளே வந்த பிறகு இன்னும் சற்று அதிகாரக் குரலில் "தீபாவளி மலர் எங்கே?" என்று உரிமையுடன் கேட்டார்.

தீபாவளி மலரை அவர் பாதகமலங்களில் சமர்ப்பித்து, "விக்கினம் இல்லாமல் மலர் வெளியாவதற்குத் துணைபுரிந்த தங்களுக்குப் பரிபூரண நன்றி" என்றோம்.

"நன்றி இருக்கட்டும்!" என்று கூறிக் கொண்டே "ஆஹா! அற்புதம்! அற்புதம்! அபாரம்!" என்றார்.

"மலரைப் பார்க்காமலேயே அற்புதம், அபாரம் என்கிறீர்களே?"

"பார்த்து விட்டுத்தான் சொல்கிறேன்—அட்டைப் படத்தை! அம்மா, கற்பனைவளைந்த காரிகையும் அவள் காதலை நாடிவந்து நிற்கும் மன்னனும் இந்திர ஜால மகேந்திர ஜால விந்தைகள் புரியும் அந்த அணங்கின் அதிசயமான அந்தப்புரமும் தெரிகிறதே!"

"தங்கள் ஆசீர்வாதம்!"

விநாயகப் பெருமான் தீபாவளி மலரைப் புரட்டிக் கொண்டே சொல்கிறார்:—

"ஆகா! கனு தேசாயின் முகப்புப்படம் தானே? நினைத்தேன். இந்த மலர் ஒரே படமயம், வர்ணமயமாய் இருக்கும் போலிருக்கிறதே! சிற்பம் காட்டும் சித்திரங்கள், சிந்தாமணிக் கதைச் சித்திரங்கள், ராமாயணக் காட்சிகள், பாரதத் திருவிழா, சரித்திரக் காட்சிகள் எல்லாம் இருக்கின்றனவே? சபாஷ்! கனு தேசாய், மணியம், ராஜூம், சிட்னிஸ், ரெலாக், ரதி, விஜயா, ஜமால், ராஜீ— இத்தனை பேரின் ஓவியங்களா? சக்கைப் போடு போடுகிறதே! அடே! இது என்ன? அபரிமிதமான கார்ட்டூன்கள், ஏராளமான ஹாஸ்யச் சித்திரங்கள்—விஜி, சாமா, உமா, சிராம், ரதன் இவர்களுடைய சித்திரங்களா? எல்லாம் பிரமாதமாக இருக்கின்றனவே!"



"ஆமாம், ஸ்வாமி! இந்த மலரில் கார்ட்டூன்களும், ஹாஸ்யச் சித்திரங்களும் பிரமாதம்தான்! எல்லாம் அவ்விடத்து...."

"அது இருக்கட்டும். எல்லிஸ் ஆர். டங்கனுடைய விலங்குகளின் விந்தை உலகமும், கிராம நடனங்களும், பாவர் பகுதியும் பிரமிப்பை அல்லவா ஊட்டுகின்றன."

"சந்தோஷம்! தாங்களே பிரமித்தால் பிறகு கேட்க வேண்டியதில்லை."

"இதோ! நம் நாட்டின் தேசியத் தலைவர்களின் படம், சுயராஜ்யத்துக்காகப் பெரும் தியாகங்கள் செய்த தலைவர்களின் திருவுருவங்கள், விநோபாஜி தமிழ் மக்களுக்காகத் தமிழிலேயே ஆசீர்வாதம் செய்து எழுதியிருக்கும் படம், அவருடைய பாரத நாட்டின் சரித்திரப் பிரசித்தி பெற்ற பாத யாத்திரைக் காட்சிகள், ராய் சௌத்ரியின் ஏழு தேசபக்தர்களின் வீரத் திரு உருவச் சிலைகள் அடேயப்பா! அபாரமாயிருக்கின்றன!"

"இன்னும் எவ்வளவோ பெரியோர்களின் படங்களையும் சரித்திர நிகழ்ச்சிகளையும் போட வேண்டும், ஸ்வாமி! அடுத்த மலரில்...."

"இந்தத் தீபாவளி மலரைப் பற்றியல்லவா கேட்கிறேன். சித்திரப் பகுதிகளே இவ்வளவு சிறப்பாயிருக்கும்போது, விஷயங்களும் அப்படித்தானே இருக்கும்?"

"கேட்பானேன், காந்தி மகான் விநோபாஜியைப் பற்றி எழுதியிருக்கும் மகத்தான கட்டுரையும், ராஜாஜி எழுதியிருக்கும் கதையுமே போதும், இந்த மலரைச் சிறப்பிப்பதற்கு. ராஜாஜியின் கதை உபநிஷதக் கதை மாதிரி அமைந்திருக்கிறது."

"இன்னும்?"

"இன்னும் இலக்கியக் கட்டுரைகள், அரசியல் கட்டுரைகள், நகைச்சுவைக் கட்டுரைகள், உள்ளத்தை உருக்கும் கதைகள், சிரிப்பு வருவிக்கும் கதைகள், நாடகங்கள், கவிதைகள் ஒன்றுக்கும் குறைவில்லை. பேராசிரியர் 'கல்கி'யின் பாட்டைப் பாடிக் கொண்டே இருக்கலாம். ரஸிகமணி டி. கே. சி.யைப் பற்றி எஸ். மகராஜன் எழுதியிருக்கும் கட்டுரை நம்மை ரஸிகமணியுடன் தமிழ்நாடு முழுவதற்குமே அழைத்துச் சென்றுவிடும். நிதிக் கமிஷன் தலைவர் கே. சந்தானம், நிதிமந்திரி சுப்பிரமணியம், விவசாய மந்திரி பக்தவத்சலம், பேராசிரியர் அ. சீநிவாச ராகவன், குன்றக்குடி அடிகள், தனிநாயகம் அடிகள் ஆகியோரின் கதைகளும், கட்டுரைகளும் மலரின் விசேஷ அம்சங்களாக விளங்குகின்றன. இவை தவிர, தலை சிறந்த எழுத்தாளர்கள், அதிலும் பிரசித்தி பெற்ற பல பெண் எழுத்தாளர்கள் மலரில் கதைகளும் கட்டுரைகளும் எழுதி மணம் ஊட்டியிருக்கிறார்கள்."

"ரொம்ப சந்தோஷம். நான் சாவகாசமாகப் படித்துக் கொள்கிறேன்" என்று கூறிக் கொண்டே சரியாகப் பைண்டு கூடச் செய்யாத 'கல்கி' தீபாவளி மலரை எடுத்துக் கொண்டு ஸ்ரீ விநாயகப் பெருமான் விடுவிடென்று நடந்தார்.

"ஸ்வாமி, ஒரு வார்த்தை!" என்றோம். விநாயகப்பெருமான் திரும்பிப் பார்த்தார்.

"மலரை உருவாக்குவதற்கு இரவு பகல் என்று பாராமல் உற்சாகத்துடன் உழைத்த எல்லாருக்கும், மலருக்கு விளம்பரங்கள்

வழங்கிச் சிறப்பித்த தொழில் அதிபர்களுக்கும் தாங்கள் ஆசீர்வாதம் செய்யவேண்டும்.''

விநாயகர் ஒருதரம் புன்முறுவல் புரிந்துவிட்டு, '' அப்படியே ஆகட்டும் '' என்று தமது நீண்ட துதிக்கையைத் தூக்கி ஆசீர்வதித்தார்.

** ** **

அருமை நேயர்களுக்கு ஒரு விண்ணப்பம். பெரிய அளவில் உயர்ந்த காகிதத்தில் மூன்று ரூபாய் விலையில் மலரை வெளியிட்டிருக்கிறோம். எத்தனையோ வசதிக் குறைவால் லட்சக்கணக்கான வாசக நேயர்களுக்கு வேண்டிய மலர்களை அச்சடிக்க முடியவில்லை. ஆகையால் பலருக்கு மலர் கிடைக்காமல் போகலாம். மலரைப் பெற்ற நேயர்கள் தங்கள் தீபாவளி மலரை இதர நேயர்களுக்கும் கொடுத்து மகிழ்ச்சியில் கலந்து கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம்.

கல்கி நேயர்கள் அனைவருக்கும் நமது தீபாவளி வாழ்த்துக்கள். வணக்கம் —ஆசிரியர்

சினிமாவுக்குக் கட்டுப்பாடு!


இலங்கை அரசாங்கத்தின் தனிச் சிங்களச் சட்டத்துக்கு இருந்து வரும் கட்டுப்பாடான எதிர்ப்பைக் குலைக்கவும் தமிழ்ப் பகுதிகளில் சிங்களத்தை ஒரு இஷ்ட பாடமாகப் புகுத்தவும் சில தமிழர்களே மறைமுகமாகச் சதி செய்து வருகிறார்களாம். இந்தச் சதி வேலைகளை முறியடித்துச் சிங்கள எதிர்ப்பைக் கடுமையாக்க வேண்டு மென்றும் சிங்கள பாஷையைப் போதிக்கும் தமிழ்ப் பிரதேச பள்ளிக் கூடங்களைப் பகிஷ்கரிக்க வேண்டு மென்றும் தமிழ் அரசுக் கட்சி இவ்வாரம் நடத்திய ஒரு அவசரக் கூட்டத்தில் தீர்மானித்திருக்கிறது. தனிச் சிங்களச் சட்டத்தைச் சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கும் வரையில் தங்களுடைய எதிர்ப்புப் போராட்டத்தைத் தளர்த்தக் கூடாதென்றும் அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

இலங்கையி லிருந்து நிர்ப்பந்தத்தின் பேரில் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லும் ஸ்ரீ தாஸ் என்பவருக்கு நடந்த ஒரு பிரியா விடை உபசாரக் கூட்டத்தில் ஸ்ரீ எஸ். தொண்டமான் பேசியபொழுது ஒரு முக்கியமான பிரச்னையைப் பொதுஜனத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இலங்கையில் சாசுவதமாக வசித்து இந் நாட்டுப் பிரஜாவுரிமைக்கு மனுக் கொடுத்திருப்பவர்களைப் பற்றி மட்டும் தான் இலங்கை இந்திய அரசாங்கங்கள் விசேஷ கவனம் செலுத்திப் பேசுகின்றனவே தவிர இலங்கையில் இந்தியப் பிரஜைகளாக இருந்து வரும் பல ஆயிரம் இந்தியர்களின் பிரச்னைகளில் எவரும் கவனம் செலுத்தவில்லை யென்றும், கவனிப்பாரற்றிருக்கும் இந்தியப் பிரஜைகள் படிப்படியாக இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்பட்டு வருகிறார்களென்றும் ஸ்ரீ தொண்டமான் சொன்னார். இலங்கை அரசாங்கம் இலங்கைப் பிரஜைகளுக்குச் சலுகை காட்டக் கடமைப் பட்டிருக்கிறது. ஆயினும் பல்லாண்டுகளாக இலங்கையில் வசித்துவரும் இந்தியப் பிரஜைகளை அந்நியர்களாக மதிப்பதோ அல்லது அவர்களுக்குப் பாதகமான காரியங்கள் செய்வதோ நியாயமாகாது. புதிதாகக் குடியேறுவோர் விஷயத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பல ஆண்டுகளாக இலங்கையிலேயே வசிப்பவர்கள் விஷயத்தில் எடுப்பது எப்படி நீதியாகும் என்பதே ஸ்ரீ தொண்டமானின் கேள்வி.

இலங்கையில் வெளி தேச சினிமாப் படங்கள் இறக்குமதியாவதைக் கட்டுப்படுத்தி 'கோட்டா' முறை ஏற்படுத்த வேண்டும். சிங்கள சினிமாப் படங்கள் இந்தியாவில் தயாரிக்கப்படுவதைத் தடை செய்ய வேண்டும். பிரபல சினிமாப் பட உற்பத்தியாளராகிய ஸ்ரீ எஸ். எம். நாயகம் சொல்லி யிருக்கும் மேற்கண்ட இரு யோசனைகளையும் இலங்கையிலிருக்கும் இதர சினிமாப்பட உற்பத்தியாளர்களும் தியேட்டர் முதலாளிகளும் ஏகோபித்து எதிர்த்திருக்கிறார்கள். சிங்கள சினிமாப் படங்களை இலங்கையைத் தவிர வேறு நாடுகளில் காட்ட முடியாதாகையால் கண்மூடித்தனமாக ஏராளமான சினிமாப்படங்களைத் தயாரிப்பதற்கில்லை. வருடத்துக்குச் சுமார் பத்து சிங்கள சினிமாப் படங்களே உற்பத்தியாவதால் அவற்றை இலங்கை முழுவதிலும் வருட முழுவதிலும் காட்டுவதற்கில்லை. தவிர இலங்கையில் சிங்களம் பேசுவோர் மட்டும் வசிக்கவில்லை. மற்ற மொழிகள் பேசுவோர்களும் இருக்கிறார்கள். தமிழ் ஆங்கில சினிமாப் படங்களைப் பார்ப்பவர்கள் சிங்களப் படங்களைப் பார்ப்பதுமில்லை. இந்த நிலைமையில் வெளி தேச சினிமாப்பட இறக்குமதியைக் கட்டுப்படுத்த நினைப்பது அபத்தமானது. இக் கட்டுப்பாடு ஏற்பட்டால் எழுபத்து ஐந்து சத விகித தியேட்டர்களை மூட வேண்டி ஏற்படும். நூற்றுக்கணக்கானவர்கள் வேலைகளை இழக்கவும்நேரிடும். இவ்வாறுசிங்கள சினிமாப் பட உற்பத்தியாளர்களும் தியேட்டர் முதலாளிகளும் தெரிவித்திருக்கிறார்கள். —ரஜனி

கதர் வாங்குங்கள்

தீபாவளி விற்பனையை முன்னிட்டும், பொதுமக்களின் சௌகரியத்துக்காகவும் அகில பாரத சர்வசேவாசங்கக் கதர் வஸ்திராலயம் (65/66 ராட்டன் பஜார்) 28-10-56 ஞாயிற்றுக்கிழமையும், கிளை கதர் வஸ்திராலயம் (242, சைனாபஜார்) வார விடுமுறை நாளான 30-10-56 செவ்வாய்க்கிழமையும் விற்பனைக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கும். எல்லாக் கதர் அன்பர்களும் தீபாவளிக்குக் கதர் வாங்கி உடுத்தக் கோருகிறோம்.



இதுவரையில் : 'பிப்பா செல்கின்றாள்' என்ற ஆங்கிலக் கவிதை நாடகத்தின் முதற் காட்சி : அஸாலோ நகரத்துப் பட்டு ஆலைத் தொழிலாளியான இளம் பெண் பிப்பா, புதுவருஷ விடுமுறை நாளை இன்பமாகக் கழிப்பதற்கு எண்ணி, உறுதியான கடவுள் நம்பிக்கையோடு, காலை வெய்யிலில் பாடிக் கொண்டு செல்கிறாள்.

இரண்டாம் காட்சி : முதல் நாள் இரவில், ஆலை முதலாளியான கிழவன் லூக்காவை, அவன் மனைவி ஆதிமாவும் அவள் காதலன் ஸிபால்டும் சேர்ந்து கொலை செய்து விடுகிறார்கள். பொழுது விடிகிறது. ஆனால் இவர்கள் நெஞ்சிலே இருள். 'கிழவன் தொலைந்தான், நல்ல வேளை' என்பது ஆதிமாவின் எண்ணம். கொலை பாதகச் சூழ்விலிருந்து அவளை இது விடுவிக்க வில்லை ; ஸிபால்டோ செய்வது அறியாமல் தடுமாறுகிறான்.

* * *

கொலை பாதகம் என்ற பேயின் கோரைப் பல் ஸிபால்டின் நெஞ்சில் அழுந்தி, ரண வைத்தியன் கத்தியைப் போல், புரையோடிய பகுதிகளைப் பிய்த்து எறிகிறது. உள்ளே, நெஞ்சின் ஆழத்தில் புதைந்து காமப் பிளவையால் மூடப்பட்டு, அழிந்து கொண்டிருந்த நல்லுணர்ச்சி மெல்ல வெளி வருகிறது. வந்து, பாதகம் உழுது புண்ணாக்கிய நெஞ்சிலே, புளிப்பாகப் பரவுகிறது. ஸிபால்ட் கதறுகிறான் :

'லூக்காவின் உப்பைத் தின்றேன். அவன் தந்த துணியால் மானத்தைக் காத்தேன். அவன் பணத்தால் பருத்தேன். ஆனால், கடைசியில் என்ன செய்து விட்டேன் ? காதல், காதல், காதலுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்வதாகக் கதைகளிலே வரும் இலட்சியக் காதலர்கள் இப்படியா பாபம் இழைக்கிறார்கள் ?

'ஆம், லூக்கா எனக்கு உயிர்ப்பிச்சை அளித்தான். இல்லாவிட்டால் செத்து மடிந்திருப்பேன். என் துரோகத்தை அவன் பழித்தால் என்ன, என்னை வைதால் என்ன, பயமுறுத்தினால் என்ன, என்னை என்னதான் செய்தால் என்ன, அவனுக்கு உரிமை இல்லையா ?

'ஆதிமா, உன் முகத்தையும், ஒளி புரளும் உன் தோளையும், மார்பையும், உன் அழகு முழுவதையுமே இழந்து விடுவேன், நடந்ததைத் திருத்த முடியுமானால். கொலையா, ஆம், உலகத்தையே கொலை செய்ய நான் தயார், லூக்கா மாத்திரம் உயிர்பெற்று எழுவதானால். நான்...நான்...'

இப்படியாகக் கொலையின் பயங்கரத்தில் அழுந்தும் ஸிபால்டை, பழைய காதலனை, பெண் தசையிலே மயங்கி, அதற்காக எதையும் செய்ய, தன் ஆன்மாவையே விலை பேசத் துணிந்து நின்ற பழைய ஸிபால்டாக, மாற்ற முற்படுகிறாள் ஆதிமா. ஸிபால்டின் பேரில் உள்ள அன்பினாலா இதைச் செய்கிறாள்? இல்லை. தன் வலைக்குள்ளே வந்த மீன் இப்போது வெளியே செல்லத் துடிக்கிறது. வலையை இறுக்குகிறாள், அவ்வளவுதான். தன் இச்சைக்கு ஈடு தரும் ஒரு கருவியே ஸிபால்ட், அதை இழப்பதா? இந்தக் கொலையின் மூலமாக, அது நிரந்தரமாகத் தன்னுடையது ஆகிவிடும் என்றல்லவா எண்ணினாள் ? இப்போது...? ஆதிமாவின் சுயநலமும், இச்சையும் பேசுகின்றன ; ஆனால், தம்மை இனங் காட்டிக் கொள்ளாமல் மறைத்துக் கொண்டு, அன்பின் குரலில் பேசுகின்றன. ஸிபால்டை மறுபடியும் காமச் சுழலில் அழுத்தி, மிருக உணர்ச்சிக்கு அடிமைப்படுத்த எண்ணுகின்ற ஓநாய்,



தன் இயல்பை மறைத்து, காதலின் தேன்குரலில் பேசுகிறது:

'இங்கே பார், ஸிபால்ட், உன்னை முன்னைவிட அதிகமாகவே நேசிக்கிறேன், ஆம், என்னை நிமிர்ந்து பார், இந்த... இந்தக் குற்றம் புரிந்ததற்காகவே, நடந்ததை — பச்சையாகச் சொல்கிறேனே, இந்தக் கொலையை — உன்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லையா? கூசுகிறாயா? அப்படியானால் அதை ஒதுக்கிவிடு. மனத்திலிருந்து கீழே தள்ளிவிடு. பாதகமா, மிகப் பெரிய பாதகமா? இருக்கட்டுமே. அது தந்த இன்பங்களை எண்ணிப் பார். எண்ணும் போது நாம் ஒன்றும் அவற்றை அதிக விலை கொடுத்து வாங்கி விடவில்லை என்பது தெரியும். வா, நாம் நம்முடைய காதல் உலகத்துக்குப் பறந்து போய் விடுவோம். அந்த உலகத்தின் உச்சியிலிருந்து பார்த்தால் ... இது... இது...கண்ணுக்கே தெரியாது. நேற்றிரவு நடந்ததை மாத்திரம் ஏன் எண்ணுகிறாய்? அதற்கு முன்? நான் முதன் முதலில் என் உள்ளத்தைத் திறந்து காட்டினேனே, அந்த நாள் நினைவில் இல்லையா? சோலையுள்ளே நடுப்பகலின் அமைதி. தேனைத் தேடி அலைந்த ஒரே ஒரு தேனீ மாத்திரம் முனகிக் கொண்டிருந்தது. அதுவும் தன் முனகலைச் சரேலென நிறுத்தி ஊமை ஆகியது. எங்கே சென்றது அது? பூ ஒன்று அசைந்தது. அந்த மலர்க் கிண்ணிக்குள் புகுந்து மோனத்தில் ஒடுங்கியதோ தேனீ? மது வெள்ளம், மதுவெள்ளம், அதில் மூழ்கிய தேனீ! நான் பேசினேன்...காதல்!'

இச் சொற்கள், ஸிபால்டை, கொலையின் இரத்த வாடை வீசுகின்ற புழுக்கத்திலிருந்து, இன்பப் பெருவாளியாகக் காட்சிதந்த உடற்போதைக்குத் திருப்புகின்றன. அவனும் பழைய நினைவுகளில் ஆழ்கிறான். ஆதிமாவின் அழகு, இளமை, இவற்றைப் பருகியது, தேனீயைப்போல் தன்னை மறந்தது, இவற்றையெல்லாம் மனத்தால் தொட்டுத் தொட்டுப் பார்க்கிறான். ஆதிமாவின் குரலும், அதில் வீசும் காமப் புயலும், கண்முன்னே பளிச்சிடும் அவள் பெண்மையும், அவனை எங்கேயோ தூக்கிச் செல்கின்றன. இன்ப உலகம், அதன் ராணிதான் இந்த ஆதிமா.

அவள் நீண்ட கூந்தலை அவிழ்த்து, அதையே ஒளிமுடியாக அவளுக்குச் சூட்டுகிறான் ஸிபால்ட்.

இன்பவாசலில் நிற்பதாக இப்போது அவனுக்குத் தோன்றுகிறது. அது நரகத்தின் வாசல், தர்மம் அதர்மம் என்ற பகுத்தறிவை அழித்து, உள்ளத்தைக் கல்லாக்கி, ஆன்மாவை மீளாத பாதாளத்தில் தள்ளப் பதறும் பேயின் வாய் அது என்பது அவனுக்குத் தெரியவில்லை. ஓரக்காவைக் கொலை செய்தது தவறு என்று மனச்சாட்சி சிறிது பேசத் தலைப்பட்டதே, அது இப்போது ஒய்ந்து எங்கேயோ புதைந்து கொண்டது.

'நீயே என் ராணி. என் உயிர் உன் ஏகபோக உரிமை' என்று குழறிய வண்ணம், ஆதிமாவின் கூந்தலைக் கோதுகிறான். அவள் விழியில் வெற்றிக் களிப்பு படர்கிறது. இருவரும், நரக விளிம்பிலே தள்ளாடுகிறார்கள். அடுத்த கணம் விழுந்து விடுவார்கள். பிறகு உய்வு இல்லை.

வெளியிலிருந்து, களங்கமற்ற உள்ளத்தோடு பாடிச் செல்கின்ற பிப்பாவின் குரல் வருகிறது:

வசந்தருதுவிலே தோய்ந்தது வருடம்;
வைகறை தோய்ந்தது பகலும்;
இசைந்தநாழிகை மூன்றிலே காலை;
இளம் பனிமுத்து அகன் மலைமேல்;
விசைத்தது சிறையினை வானம்பாடி;
விரிந்த முட்புதரிலே நத்தை;
இசைந்தனன் தனது வானிலே இறைவன்;
யாவையும் நல்ல இவ்வுலகில்.

உள்ளே, சவுக்கண்டியில், இரு ஆன்மாக்களை விழுங்கக் கைநீட்டிக் கொக்கரித்து நின்ற காமம், பயம், தசை உணர்ச்சி, இவை மெல்லப் பின்வாங்குகின்றன. ஸிபால்டின் உள்ளத்திலிருந்து அவனையும் அறியாமல் ஏதோ ஒன்று சொல்லாகப் பாய்ந்து வருகிறது.

'கடவுள் இருக்கிறான்! காதில் விழுந்ததா, ஆதிமா? பேசியது யார், நீயா?'

ஆத்மா: நான் இல்லை, அதோ போகின்ற அந்த ஏழைச் சிறுமி, எங்கள் பட்டு ஆலையில் வேலை செய்பவள். இன்று விடுமுறை. வருஷத்துக்கு ஒரு முறை நாங்கள் அளிக்கும் விடுமுறை. எங்கள் பட்டு ஆலைகளுக்குள்ளே போய்ப் பார்த்திருக்கிறாயா? பத்து ஆலைகள், எல்லாம் இப்போது உனக்குச் சொந்தம். அதோ, அவள் குனிந்து நம் தோட்டத்திலே உதிர்ந்த பூ எதையோ பொறுக்குகிறாள். என்ன, உரக்கப்பேசு, அவள் காதிலே விழாது. என்ன சொல்கிறாய், ஸிபால்ட்?

ஸிபால்ட்: என்னை விட்டுவிடு. போ, போ; உன் ஆடையைத் திருத்திக் கொள். இந்த அலங்கோலத்தை — உன் தோளை — மறைத்துக் கொள்.

ஆத்மா: ஸிபால்ட்?

ஸிபால்ட்: ஆமாம், உன் முகத்திலே பூசிய பவுடரையும் சாயத்தையும்

எல்லா சோதனைகளிலும்
தேர்ச்சி பெற்ற
ஆதர்ச டூத் பிரஷ்
இன்றே வாங்குங்கள்-
அதன் குணங்
களை தெரிந்து
கொள்ளுங்கள்



எல்லா
கடைகளிலும்
கிடைக்கும்

Aryan

இந்தியாவிலேயே மிக்க
அநுபவம் வாய்ந்த டூத் பிரஷ்
தயாரிப்பவர்கள்

பம்பாயிலுள்ள தென்னிந்தியர்களுக்கு
எமது தீபாவளி வாழ்த்துக்கள்

இன்று முதல் எங்களிடம் தமிழ், தெலுங்கு, மலையாளம் முதலிய பாஷைகளில் உங்களுக்கு விருப்பமுள்ள எல்லா இசைத் தட்டுகளும் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

RECORDS
The - Twin
DEPOT

KERMANI BUILDING
SIR PHIROZSHA MEHTA ROAD
FORT, BOMBAY

Grams : TWINVOICE Phone : 255081



பாவுஸேரி பெனிபிட் சிட் பண்டு
(பிரைவேட்) லிமிடெட்

ரு. சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414 ... மதராஸ்-5
தந்தி: 'EVERMANS'... போன் : 85834

சேரக் கடைசி தேதி: 7-11-1956 ... முதல் ஏலத் தேதி 10-11-1956

25 மாதங்கள் | **மாதாந்திர சீட்டுகள்** (2-வது சனிக்கிழமை ஏலங்கள்) | **25 அங்கத்தினர்கள்**

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ. 10/-	ரூ. 250/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்பிரமணியம், மானேஜிங் டைரக்டர்

டெல்லி கிளை ஆபீஸ் விலாசம் : B. 6, பிளாக் III
டெல்லி-ஆஜ்மீரி கேட் ஸ்கீம், புது டெல்லி-1

எங்கள் சேவை உங்களுக்குத்தேவை

அழித்துவிடு. உன்னைக் காணச் சகிக்கவில்லை. விஷமாக இருக்கிறது.

ஆதிமா : அட பாவி !

ஸிபால்ட் : தெய்வமே, எங்கே இவள் அழகு? மனத்தை அள்ளும் ஒயில் இவளிடம் இருந்ததே! அவ்வளவும் வற்றிவிட்டது, துளிக்கூட இல்லாமல் சுவறிவிட்டது. முகத்திலே சதை தொங்குகிறது, பிண்டமாய். பொருளற்ற மாமிசப் பிண்டமாய், இரண்டாய்ப் பிளந்த புருவமும், குழிகள் விழுந்த முகவாயும் ...கூந்தல்—ஜீவ களை ஒளிர்ந்த கூந்தல்—இப்போது மெல்ல மெல்ல ஊசலாடுகிறது, உயிரற்ற வலையாய்.

ஆதிமா : ஸிபால்ட், ஸிபால்ட், எங்கே என்னிடம் பேசு. என்னைப் பற்றி... என்னைப் பற்றி ஏன் பேசுகிறாய்?

ஸிபால்ட் : அந்த வட்ட முகம், அழகொளி வீசிய அந்தச் சந்திரன், கோணலோ குறியோ இல்லாமல் செம்மாந்த அந்த எழில்—உடைந்து விட்டது, எல்லாம் உடைந்து நொறுங்கிவிட்டது.


ஆதிமா : நன்றிகெட்ட பதரே, வஞ்சகப்புழுவே, பயங்கொள்ளியே...பிச்சைக்கார நாயே, என் அடிமையாய்க் கிடந்து காலை நக்கிய பொய்யே, போ, போ, என்னை விட்டுப் போ. போய் உலகத்தார் முன் என்னைக் காட்டிக் கொடு. அதுதானே உன் எண்ணம்? தெரிகிறது, நீ ஒரு பொய், தின்று, குடித்துக் கொழுத்து ஆண் மகனைப் போல நடக்கும் வஞ்சகப் பொய்.

ஸிபால்ட் : அட கடவுளே, இந்தப் பொன் தோளின் உள்ளே இரத்தம் ஓடவில்லை. இது பேயின் தோள் என்பது எனக்கு ஏன் முன்பே தெரியவில்லை?

ஆதிமா : என்னை வெறுக்கிறாயா, ஸிபால்ட், வெறுக்கவா செய்கிறாய்?

ஸிபால்ட் : இவளுக்கும் வெற்றியா? பாபத்தின் மூலமாக எப்படி என்னை மயக்கினாள்? வரம்பற்ற மிகுதியினாலேயே பாபம், புண்ணியத்தை விட உயர்ந்ததாகக் காட்டிக் கொள்ள முடியுமா? இல்லை, இல்லை, அந்த ஏழைப் பாட்டாளிச் சிறுமியின் குரல் எல்லாவற்றையும் நேராக்கி விட்டது. நான் நரகத்தில் விழுந்து விட்டேன்; எனக்கு மீட்சி இல்லை. இருந்தாலும், நன்றாகத் தெரிகிறது, எது உயர்ந்தது, சுயமையா ஒழுக்கமா, தூய்மையா, காமவெறியா, இயற்கையா, பகட்டா, இவற்றில் எது உயர்ந்தது என்பது துலாம்பரமாகத் தெரிகிறது...நரக வேதனை, நரக வேதனை, வேதனையில் அழுந்து, ஸிபால்ட், நன்றாக அழுந்து. இதுதான் உன் பெருமை, நீ செய்த பாபந்தானே, அதற்கான தண்டனைதானே!...பெண் மிருகமே, உன்னை நான் வெறுக்கிறேன். நீ தொலைந்து போ, நாசமாய்ப் போ! இறைவன் இருக்கிறான், இறைவன் இருக்கிறான், இறைவன் இருக்கிறான்.

ஆதிமா : ஸிபால்ட், என்னை...என்னை ...உன்னை ஒன்றும்செய்துகொள்ளாதே. கொல்வதானால் என்னைக் கொன்றுவிடு. குற்றம் முழுவதும் நான் செய்தது. இந்தப் பாதகம் என் செயல், அவ்வளவும் என்செயல். என்னைக் கொன்றுவிடு. பிறகு, பிறகு வேண்டுமானால், உன்னைக் கொன்றுகொள்: நான் சொல்வதைக் கேள். என்றாவது ஒரு நாள், தற்கொலை செய்து கொள்ளத்தான் எண்ணினேன். பொறு,பொறு, விழுந்துவிடப் போகிறாய். என் மார்பில்



சாய்ந்து கொள். சாய்ந்து கொள்வதால், பெண்ணென்று என்னை எண்ண வேண்டாம், நேசிக்க வேண்டாம். ஸிபால்ட், என் அன்பே, இங்கே பார்.. இருவரும் இறந்து விடுவோம்!

ஸிபால்ட் : என்ன சொல்கிறாய்? புரியவில்லை, என் அறிவு முழுகிவிட்டது. எனக்குத் தெரிவதெல்லாம்...உள்ளே, என் உள்ளே ஏதோ கணத்திற்கொரு தரம் சுழன்று படுவேகமாக விரைகிறது. அணையை உடைத்து வெள்ளம் போல் ஏதோ பாய்கிறது, படுகுழியை நிரப்ப விரையும் கடல்போல்..அதோ, கருங்கடல், நெருப்புக் கடல், என் உள்ளே..ஐயோ, அதன் ஓயாச்சுழல்கள்!

ஆதிமா : ஆண்டவனே, என்னை மன்னிக்க வேண்டாம். நான் எப்படியானல்



என்ன? இவனை, இந்த உயிரை உன் கருணையால் அணைத்துக் கொள்.


'பிப்பா செல்கின்றாள்' என்ற நாடகத்தின் இரண்டாம் காட்சி இங்கே முடிவடைகிறது. ஆதிமாவும், ஸிபால்டும் பாதகம் இழைத்தவர்கள்; இச்சையின் வசப்பட்டுச் சோரமும், கொலையும் புரிந்த பாவிகள். என்றாலும், இப்போது அவர்களுக்கும் உய்வுண்டு என்ற எண்ணம் நம் நெஞ்சில் அரும்புகிறது. கொலை செய்யத் தூண்டிய பழைய காமவெறியில், கொலைக்குப் பிறகும் அவர்கள் மறுபடியும் வீழ்ந்திருந்தால்... அதைச் செய்யும் தறுவாயில், நரகக் குழியின் விளிம்பில்தான் அவர்கள் நின்றார்கள். ஆனால் காக்கப் பெற்றார்கள். ஸிபால்ட் வேதனைத் தீயிலே வேகிறான், உண்மைதான். ஆனால் அந்தத் தீ அவன் கொடுமைகளைச் சுட்டெரித்து அவனை மறுபடியும் மனிதனாக்கவல்ல பிராயச்சித்த நெருப்பின் முதல் வீச்சு. அதுபோலவே ஆதிமாவும், 'நான், என் இளமை, என் அழகு, என் இச்சை, என் காதலன்' என்ற சிறையிலிருந்து, ஸிபால்டின் துடி துடிப்பைக் கண்டதன் மூலம் விடுபடுகிறாள். தன்னை மறந்து, அவனைப் பற்றி — மற்றொரு உயிரைப் பற்றி எண்ணுகிறாள். இறைவன் கருணையைத் தனக்காக இல்லை, மற்றொரு 'ஆன்மாவுக்காக வேண்டுகிறாள். அவளுக்கும் இனி உய்வு உண்டு.

இறைவன் இருக்கிறான், எங்கேயோ இல்லை, வானம்பாடி சிறை விரிக்கும் வானவெளியில், பனித்துளி முத்துக்கள் மின்னும் மலை மார்பில், நத்தை ஊர்கின்ற முட்செடியில், இங்கே இந்த மண்ணிலேயே இருக்கிறான். மனித வாழ்வின் தீராத சாபமெல்லாம் இந்த உணர்வால் தீர்கிறது. மனிதன் தீமையைச் செய்கிறான். அதில் அழுந்தி இருள் நரகம் ஒன்றைச் சிருஷ்டி செய்கிறான். ஆனால் இந்தத் தீமை, கவிச் சக்கரவர்த்தி கம்பர் சொன்னபடி, 'தீமையில்லாத் தீவினை!' இதிலிருந்து 'இறைவன் இருக்கிறான்' என்ற உணர்வு நம்மை ஈடேற்றுகிறது.

இதுதான், ஆங்கிலக் கவிஞன் ராபர்ட் பிரௌனிங் 'பிப்பா செல்கின்றாள்' என்ற கவிதை நாடகத்தின் இரண்டாம் காட்சியின் மூலமாக நமக்குத் தரும் செய்தி. மற்றையக் காட்சிகளும் இதையே பல்வேறு கோணங்களிலிருந்து வற்புறுத்துகின்றன. அதையெல்லாம் காண இப்போது நேரமில்லை. காண வேண்டியதைக் கண்டுவிட்டோம்:

இசைந்தனன் தனது வானிலே இறைவன்
யாவையும் நல்ல இவ்வுலகில் (தொடரும்)


"உங்கள் பற்களை பாதுகாருங்கள்!"
விஸ்டம் பல் வைத்தியர் எப்படி என்று கூறுகிறார்
உங்கள் பற்களை சரியான சமயத்தில் துலக்குவது மிகவும் முக்கியம். துலக்கிய உடன் மறுபடியும் சாப்பிட்டால் உங்கள் 'விஸ்டம்' டூத் ப்ரஷ் புரிந்த அரும் பணியும் வீணே....
ஒவ்வொரு தடவை உணவருந்திய பிறகு தான் சரியானசமயம். துலக்குவதற்கு இனிப்பு பண்டங்களை புசித்திருந்தால் உடனே சுத்தம் செய்ய வேண்டும்.
பல பேர் முதல் ஆகாரத்திற்கு முன் பல் துலக்குகிறார்கள். இது தவறு. முதல் ஆகாரத்திற்குப் பின்னர் துலக்குவதுதான் சிலாக்கியமானது. அவ்வழியில் பற்கள் பகல் சாப்பாடுவரை சுத்தமாயிருக்கும்.
இரவில் படுக்கப்போகு முன் பற்களை துலக்குங்கள் காலை முதல் ஆகாரம் புசிக்கும் வரை பற்கள் சுத்தமாயிருக்கும்.
உங்கள் பற்களை ஆரோக்கியமாய் வையுங்கள். இரவிலும் காலையிலும் விஸ்டம் ப்ரஷினால் துலக்குங்கள்! துலக்க சுலபமாயிருக்க அதன் சிறிய தலை மற்றும் வளைந்த கைப்பிடிகளைப் பால் வாயில் மூலை முடுக்குகளிலும் புகுத்தலாம்; அதன் விறைப்பான நைலான் குச்சங்கள் பல இடுக்குகளில் நுழையும். பொருத்தமான வடிவம் கொண்ட விஸ்டம் டூத் ப்ரஷை உபயோகியுங்கள்!
காலாகாலத்தில் உங்கள் பல் வைத்தியரை காணுங்கள்
Wisdom REGD.
நீடித்து உழைக்கும் டூத் ப்ரஷ்
SIA


எங்கப்பா எவ்வளவு
நல்லவர்!
எவ்வளவு பாக்யசாலி குழந்தை! அவன்
தகப்பனர் எப்பொழுதும் ஜான்ஸன்ஸ்
பேபி பவுடர் வாங்கி வருகிறார். என்ன
மென்மை! என்ன குளுமை! அந்தக்
குழந்தையின் சருமத்திற்கு எவ்வளவு
இனிமையானது!
Johnson's
ஜான்ஸன்ஸ் பேபி பௌடர்
Johnson's
BABY
POWDER
இலவசம்: குழந்தை பராமரிப்பு புத்தகத்
தின் இலவச பிரதிக்கு எழுதுங்கள். பெற்
றோர்களுக்கு வேண்டிய அநேக விஷயங்கள்
இதில் அடங்கியுள்ளன. சுலபமாகப்படித்து
புரிந்து கொள்ளும்படியான இங்கிலீஷ்
பாஷையில் எழுதப்பட்டுள்ளது.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்
பி.ஓ. பாக்ஸ் 1976, டிபார்ட்மெண்ட் 20T
பம்பாய்
JB 3024

காந்தி கிராமத்தில்



எஸ்.வி.எஸ்.

சென்றவாரத் தொடர்ச்சி

காந்தி கிராமத்தின் அன்றாட நிகழ்ச்சிகள் இறை வணக்கத்துடன்தான் ஆரம்பமாகின்றன. அந்த விதி முறைக்குச் சற்றும் பழுதில்லாமல் பிரார்த்தனைக் கூட்டத்துக்குத்தான் ராஜாஜி முதன் முதலில் அழைத்துச் செல்லப்பட்டார். காந்தி கிராம பிரார்த்தனைக் கூட்டம் காந்திமகான் வகுத்த முறையில், சர்வமத சமரச முறையில் அமைந்திருந்தது. தமிழ்ப் பாடல்கள், வடமொழி சுலோகங்கள், கிறிஸ்தவ வேதம், குர் ஆன் ஷரீப், ராமநாம பஜனை எல்லாம் அதில் இடம் பெற்றிருந்தன. பிரார்த்தனை முடிந்த பிறகு ராஜாஜி சில வார்த்தைகள் கூறினார்.

''இப்பொழுது அருமையான பக்திப் பாடல்கள் கேட்டோம். நமது நாயன்மார்கள், ஆழ்வார்கள் மற்ற மத பக்தர்கள் அனைவரும் தங்கள் உள்ளுணர்ந்த பக்தி நிலையில் நின்று அருமையாகப் பாடியிருக்கிறார்கள். மேலும் அந்தப் பாக்களைப் பல நூற்றாண்டுகளாகப் பாடிப் பாடி வந்திருக்கிறோம். அதனால் அப் பாக்களில் ஒரு சக்தியே ஏற்பட்டிருக்கிறது. இதுவே அவர்கள் நமக்களித்த செல்வம். இந்தச் செல்வத்தை வைத்துக் கொண்டு புதுச் செல்வத்தை வளர்க்க வேண்டும். வீட்டை இடித்து விட்டால் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும். முன்னோர்களின் அநுபவச் செல்வத்தை வைத்துக் கொண்டு நாம் நம்முடைய அநுபவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். வீட்டுப் பாத்திரங்களைத் தினம் தேய்த்துச் சுத்தம் செய்வதுபோல் உள்ளத்தின் அழுக்கை நீக்கிச் சுத்தம் செய்யும் முறை பிரார்த்தனை'' என்று அரிய சொற்பொழிவாற்றினார்.

பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் பிறகு மீண்டும் ராஜாஜி தமது இருப்பிடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மணி சரியாக 9-30 ஆகியிருந்தது. அங்கு சென்றதும் ''அடுத்த நிகழ்ச்சி என்ன?'' என்று கேட்டார் ராஜாஜி.


''சரியாகப் பத்து மணிக்கு ஆதாரக் கல்வி ஆசிரியர் மகாநாடு நடைபெறும். அதில் ஆதாரக் கல்வியில் மிகுந்த பற்றுள்ள ஸ்ரீமன் நாராயண் பேசுவார். பிறகு யாராவதும் கேள்வி கேட்டால் பதில் சொல்லுவார். முடிவில் நீங்கள் ஏதாவதும் பேசவேண்டும்'' என்றார் திரு ராமச்சந்திரன்.

''பத்து மணிக்குத்தானே, சரி, நான் சற்றுப் படுக்கிறேன்''' என்றார்.

ரயிலில் ராஜாஜியினால் சரியாகத் தூங்க முடியவில்லை. அதனால் அவருக்கு நல்ல அலுப்பு. அது கண்களில் நன்றாகத் தெரிந்தது. ராஜாஜி படுத்துக் கொள்ளப் போவதாகச் சொன்னவுடன் அவர் அறைக் கதவைச் சாத்திவிட்டு அறை வாசலில் கூடியிருந்தவர்களைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று அப்புறப்படுத்தி விட்டுச் சென்றார் ஸ்ரீ ராமச்சந்திரன். சரியாகப் பத்து மணிக்கு மீண்டும் வந்தார். ராஜாஜி அறைக் கதவு திறக்கப்படவில்லை. ''ராஜாஜி தூங்குகிறார்கள் போலிருக்கிறது. நான் தொந்தரவு செய்யவில்லை. மகாநாட்டின் நடுவில் வந்து கலந்து கொண்டால் கொள்ளட்டும். இல்லையெனில் வேண்டாம்'' என்று என்னிடம் சொல்லிக் கொண்டே ராஜாஜி அறைக்குச் சென்று மெள்ளக் கதவைத் திறந்தார். அவ்வளவுதான்! திரு ராமச்சந்திரனுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது! அறை வாசலில் ராஜாஜி கூட்டத்துக்குப் புறப்படத் தயாராக நின்று கொண்டிருந்தார்!

ஆதாரக் கல்வி ஆசிரியர்கள் மகாநாடு பத்து மணிக்குத் தொடங்கியது. ஸ்ரீ ருத்ரப்பசாமி தலைவர்களை வரவேற்றுப் பேசினார். பிறகு திரு ஜி. ராமச்சந்திரன் ஆதாரக் கல்வி







சம்பந்தமாக நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளை விளக்கினர். அதை நல்ல தமிழில் ஸ்ரீமதி சௌந்தரம் மொழி பெயர்த்தார். ''நாட்டில் இன்று பெருவாரியாக ஆதாரக் கல்விப் பள்ளிக்கூடங்கள் நடைபெறுகின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களில் அவசியமான கருவிகளோ, மூலப் பொருள்களோ இடையாது. இதற்குக் காரணம், ஆதாரக் கல்வி என்றால் என்ன என்பது தெரியாத கல்வி இலாக்காவின் மேல் அதிகாரிகளிடம் இதன் நிர்வாகம் ஒப்படைக்கப் பட்டிருப்பதுதான். ஒரு கல்வி இலாக்கா டைரக்டர் தமது ஆதாரக் கல்விப் பயிற்சி சாலைகளுக்குப் 'பருத்தி வேண்டுமென்று' பருத்தி விளையாத பிரதேசமெல்லாம் தேடினாராம்! அதனால் இன்றைய நிலையில் ஆதாரக் கல்வி என்னவென்ற பயிற்சி, சர்க்கார் அதிகாரிகளுக்கு முதலில் கொடுக்க வேண்டும்'' என்று கூறினர்.

ஸ்ரீமன் நாராயண் ஆதாரக் கல்வி சம்பந்தமாகத் தமக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தைக் கூறினர்.

போபாலில் ஒரு ஆதாரக் கல்விப் பள்ளிக்கூடத்துக்குச் சென்றிருந்தாராம். அந்தப் பள்ளியின் கட்டடம் வெகு நேர்த்தியாக இருந்தது. தரை மிக வழுவழுப்பாகச் சலவைக் கல் பதித்த மாதிரியிருந்ததாம். ''ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளிக்கூடத்துக்கு இவ்வளவு உயர்தரமான கட்டடமா?'' என்று எண்ணி வியந்து நிர்வாகிகளைக் கேட்டார். அந்தப் பள்ளி நிர்வாகிகள், ''மத்திய சர்க்காரிலிருந்து ஒரு பெரிய மந்திரி வந்து

முதல் நாள் விழாக் காட்சிகள். மேலே இடது ஓரம் கதர் குல்லாய் அணிந்து உட்கார்ந்திருப்பவர்தான் ஸ்ரீ டிரெக். விழாத் தலைவர் ஸ்ரீ கணேசய்யர். ஸ்ரீமதி சௌந்தரம். ஸ்ரீமதி டிரெக். கீழேயுள்ள மற்றப் படங்கள் காந்தி கிராமத்தைச் சேர்ந்த குழந்தைகளின் பல்வேறு விளையாட்டுக்கள்.


முன்பு
" என் உடைகள் சீக்கிரமாகக் கிழிந்துவிட்டன !"
இப்போது
" என் உடைகள் சுத்தமான வாஷ்வெல் பார் சோப்பை உபயோகிப்பதால் அதிக வெண்மையாக இருப்பதுடன் அதிக நாள் நீடித்து வருகின்றன.
நூறு சத விகிதம் சுத்த எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட வாஷ்வெல் பார் சோப், உடைகளில் அழுக்குகள் அடையாமல் தடுப்பதற்கு உத்தரவாதமாக இருப்பதுடன், அடிக்காமலும் கசக்காமலும் உடைகள் முற்றிலும் சுத்தமாக வெளுக்கும்படி செய்கின்றன.
எனவே, வாஷ்வெல் சோப் உங்களுடைய உடைகளை நன்றாக வெளுப்பதுடன் நீடித்த காலம் உழைக்கவும் உதவியாக இருக்கிறது.
கேரளா
வாஷ்வெல்
பார் ஸோப்
WASHWELL BAR SOAP
கேரளா சோப் இன்ஸ்டிட்யூட்
கோழிக்கோடு
சென்னை சர்க்கார் கைத்தொழில் & வியாபார இலாக்காவின் ஒரு பகுதி

இந்தப் பள்ளியைத் திறப்பதாக இருந்தது! அதற்குத் தகுந்தபடி எங்கள் கட்டடத்தை வைத்துக் கொள்ள வேண்டாமோ!'' என்று பதில் சொன்னார்களாம். எப்படி இருக்கிறது கதை! பொதுவாக நாட்டில் ஆதாரக் கல்வியின் பொருள் என்ன என்று சர்க்காரும் புரிந்து கொள்ளாமல் பயிற்சிப் பள்ளிக் கூட நிர்வாகஸ்தர்களும் புரிந்து கொள்ளாமலே ஆதாரக் கல்வி நடைபெற்று வருகிறது என்பது தான் அன்று புலனாயிற்று!



ஸ்ரீமதி வைத்தியநாதய்யருடன் ராஜாஜி பேசுகிறார்.

இந்த நிலைக்குக் காரணம் ராஜாஜி தமக்கே உரிய முறையில் விளக்கினார். ''முன் காலத்தில் கிழக்கேயிருந்து கிறிஸ்தவ மதம் இங்கிலாந்துக்குச் சென்றது. இங்கிலாந்து அரசர் தாம் அந்த மதத்தைத் தழுவினார். 'அரசரே கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்; நாமும் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்' என்று மக்கள் அத்தனை பேரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். அதே போல் காந்திமகான் 'ஆதாரக் கல்வி' என்று ஒரு புதுமுறைக் கல்வித் திட்டத்தை வகுத்தார். இதன் மூலம், கல்வி, தொழில், பண்பாடு மூன்றும் பெறக்கூடிய கல்வியாக அமைத்தார். 'சரி காந்தி சொன்ன திட்டமா? அதை நாம் ஏற்க வேண்டியதுதான்' என்று ஏற்றுக் கொண்டு விட்டோம். நாம் சிந்திக்காமலே ஏற்றுக் கொண்டதால் இப்போது பல கஷ்டங்களை அனுபவிக்கிறோம். ஆனால் உண்மையில் ஆதாரக் கல்வியில் மாணவனின் தகுதிக்காக உயர்நிலைப் பள்ளியின் படிப்பையோ கல்லூரிப் படிப்பின் தரத்தையோ குறைக்க வேண்டும் என்று வற்புறுத்துவது தவறு. ஆதாரக் கல்வியில் பயின்ற மாணவன், பண்பாடும் தொழிலும் கற்றிருப்பதுடன், இப்பொழுது வெளியில் நடைபெறும் எந்த உயர்நிலைப்பள்ளி மாணவனுக்கும் தாழ்ந்தவனல்ல என்ற நிலையை யுண்டாக்க வேண்டும். அந்த அளவுக்கு ஆதாரக் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும்'' என்றார்.

இப்பொழுது மணி பிற்பகல் பன்னிரண்டுக்கு மேலாகிவிட்டது. அவரவர்கள் சாப்பிட்டு விட்டு ஓய்வெடுத்துக் கொள்ளட்டும். நாம் ஒரு முறை காந்திகிராமத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம்.

திண்டுக்கல்லுக்கு யாராகிலும் போனால் மறக்காமல் சிறுமலைப் பழம் வாங்கி வருவார்கள். அவ்வளவு ருசியான மலைப் பழத்தைத் தரும் சிறுமலை பார்வைக்கு மிக ரம்மியமாக இருக்கிறது. அந்தச் சிறுமலையின் அடிவாரத்திலேதான் சுமார் மூந்நூறு ஏக்கர் விஸ்தீரணமுள்ள பொட்டலில் ஸ்ரீமான் ஜி. ராமச்சந்திரனும் ஸ்ரீமதி சௌந்தரம் அவர்களும் காந்திமகான் கற்பனையில் உதித்த லட்சிய கிராமத்தைச் சிருஷ்டிக்கக் குடியேறினார்கள். ஆனால் இன்று அந்த இடத்தைப் பார்ப்பவர்கள், 'இந்த இடமா பொட்டலாகக் கிடந்தது!' என்று நம்ப மறுக்கும் அளவுக்கு எங்கு பார்த்தாலும் பசுமையும் குளுமையுமாகக் காட்சி யளிக்கிறது. அத்துடன் இன்று காந்தி கிராமம், தான் மட்டும் காந்திமகான் கற்பனையில் கண்ட லட்சிய கிராமமாகத் திகழாமல், நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமமுமே லட்சிய கிராமமாக்குவதற்கு வேண்டிய பல்வகைப்பட்ட கிராமச் சேவகர்களையும் சேவிகைகளையும் தயாரிக்கும் பெரும் பணியையும் மேற்கொண்டிருக்கிறது.

இன்று மத்திய சர்க்கார் ஸ்தல அபிவிருத்தித் திட்டம், கிராம அபிவிருத்தித் திட்டம் என்று பல திட்டங்கள் வகுத்துக் கிராமங்களின் அபிவிருத்திக்காகப் பல கோடி ரூபாய்கள் செலவழிக்கிறார்கள் அல்லவா? அந்தப் பணியைச் சீரிய முறையில் செய்வதற்கான உத்தியோகஸ்தர்களைத் தயாரிக்கும்பணியை இந்தக் காந்தி கிராமம் மேற் கொண்டிருக்கிறது. அதனால்தான் இன்றைய பாரதத்தில் ''மதுரை மீனாட்சியம்மனைக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?'' என்று வடநாட்டார் ஒருவரைக் கேட்டால் ''மீனாட்சியம்மனைப் பற்றியும் கேள்விப் பட்டிருக்கிறேன். அதற்குமேல் மதுரைக்குப் பக்கத்தில் காந்திகிராமம் என்று ஒரு நல்ல ஸ்தாபனம் இருப்பதையும் கேள்விப் பட்டிருக்கிறேன்'' என்று சொல்வார்கள். அவ்வளவு பிரசித்தி அடைந்துவிட்டது காந்தி கிராமம், சென்ற ஒன்பதாண்டுகளாகச்செய்து வந்த நற்பணியினால்! இந்தப் புகழ் இந்தியாவுக்குள் மட்டும் ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறீர்களா? இல்லை. உலகமெல்லாம் பரவியிருக்கிறது. இதோ பாருங்கள், யாரோ வருகிறார்களே? இவர் எந்த ஊர்க்காரர்? எகிப்து தேசக்காரர். அவர் பெயர் ஏ. ஏ. எல். ஷபோரி. அவர் எகிப்தில் ஒரு பள்ளி ஆசிரியர். பாரதத்தில் நடைபெற்று வரும் கிராம அபிவிருத்தித் திட்டத்தில் பயிற்சி பெற வந்திருக்கிறார்.

அவருக்கு இன்று ராஜாஜியைக் கண்டதில் அளவு கடந்த மகிழ்ச்சி. சூயஸ் பிரச்னையில் ராஜாஜி அவரது தேசத்தின் பக்கமாக நின்று அகில உலகத்தின் கவனத்தையே கவர்ந்தார் அல்லவா?

இவர் தவிர ஆப்கானிஸ்தான், இராக், ஸிரியா, லெபனான், பர்மா, டிரினிடாட், மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய பல தேசங்களிலிருந்தும்காந்தி கிராமத்துக்குச்சென்ற சில ஆண்டுகளில் பலர் விஜயம் செய்து பயிற்சியும் புது அனுபவமும் பெற்றுச் சென்றிருக்கின்றனர்.

இப்படிக் காந்தி கிராமம் உலகத்தின் நோக்கையே தன் பக்கமாகக் கவர்ந்துள்ளது.

இவ்வளவு புகழும், உலகத்தின் கவனத்தையும் பெற்ற இந்தக் காந்தி கிராமத்தில் என்னதான் நடக்கிறது என்ற ஆவல் உங்களுக்கு இயல்பாகவே ஏற்படலாம். இதோ சொல்லி விடுகிறேன். காந்திகிராமத்தில இருபத்தொரு ஸ்தாபனங்கள் உள்ளன. ஒரு வயது, இரண்டு வயது அனாதைக் குழந்தைகளை வளர்ப்பது முதல் பி. ஏ., எம். ஏ. படித்தவர்கள், உத்தியோகத்தி விருப்பவர்கள் ஆகிய பலரும் பயிற்சி பெறுகிறார்கள். ஆகவே, ஸீனியர் பேஸிக் ஸ்கூல், போஸ்ட் பேஸிக் ஸ்கூல், பேஸிக் டிரெயினிங் ஸ்கூல், சேவிகாசிரமம், கிராம வைத்திய சேவை, கிராம சேவகர்கள் பயிற்சி முகாம், சமுதாயக் கல்விப் பயிற்சி முகாம், விவசாய–பால் பண்ணை, கிராமக் கைத் தொழில்கள், காதி வஸ்திராலயம், சர்வோதயக் கூட்டுறவுச் சங்கங்கள், ஹிந்தி பவனம், கிராம சர்வகலாசாலை,—இப்படிப் பல ஸ்தாபனங்கள் நடத்தி வருகிறார்கள். இந்த ஸ்தாபனங்களின் பெயர்களிலிருந்தே அவை என்ன என்ன காரியங்கள் செய்கின்றன என்பது புரியும். இங்கு சாந்தி சேனை யிருக்கிறது. இந்தச் சாந்தி சேனையி விருப்பவர்கள் காந்தி கிராமத்தில் பயிற்சி பெறுபவர்களே. இவர்கள் காலையில் எழுந்து பெருக்குவது முதல் கக்கூஸ் சுத்தப் செய்வது வரையுள்ள அத்தனை காரியங்களையும் செய்து விடுவார்கள். ஆகவே காந்தி கிராமத்தில் வேலைக்காரர்கள் என்பவர் கிடையாது. எல்லாரும் வேலைக்காரர்கள்! எல்லாரும் எஜமானர்கள்!

இந்தக் காந்தி கிராமத்திலுள்ள ஸ்தாபனங்களில் ''கிராம சர்வகலாசாலை'' இந்த ஆண்டில் தொடங்கப் பெற்ற ஒரு ஸ்தாபனம். இந்த ஆண்டு ஆகஸ்ட் 17ம் தேதி ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரபிரசாத் துவக்கி வைத்தார். இந்தச் சர்வகலாசாலையின் லட்சியங்கள் மிக உயர்தரமானவை. எப்படி இது உருவாகி எம் முறையில் பணியாற்றப் போகிறது என்பதை எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்து வருகிறார்கள். இந்தச் சர்வகலாசாலைக்கு ஆசிரியர்களாக வாய்த்திருப்பவர்கள் அவரவர் துறையில் மிகுந்த அனுபவம் பெற்றவர்களாதலால் திரு ஜி. ராமச்சந்திரன் அவர்களுடைய இம்முயற்சி வெற்றி அடையும் என்றே நம்புகிறேன்.


இத்தனை அருமையான பணிகள் புரிந்து வரும் மாபெரும் ஸ்தாபனத்தின் ஒன்பதாவது ஆண்டு விழாவில் கலந்துகொள்ளத் தில்லியிலிருந்து காங்கிரஸின் பொதுக் காரியதரிசி ஸ்ரீமன் நாராயண் ஆகாய விமானத்திலும் ரயிலிலும் வந்தது மிகவும் பொருத்தமானதுதான் என்பது நன்றாகத் தெரிந்தது.


அன்று மாலை காந்தி கிராமத்தின் ஒன்பதாவது ஆண்டு விழா மிகப் பெரிய மேடை அமைக்கப்பட்டு வெகு அழகாக நடைபெற்றது. இரு கண் பார்வையையும் இழந்த திரு திருப்பதி மெய்யுருகப் பிரார்த்தனை கீதம் பாட விழா தொடங்கியது. நண்பர் திரு சீனிவாசன் அறிக்கை வாசித்தார். பிறகு ஸ்ரீமன் நாராயண் தமது பேருரையை நிகழ்த்தினார். அந்தப் பேருரையில் சர்வோதயக் கொள்கையை விரிவாக விளக்கினார். சர்வோதயம் என்பது அஹிம்ஸா உருவத்தில் வரும் கம்யூனிஸம் என்று சிலர் சொல்வது தவறு என்பதை விளக்கினார். ''இன்று கம்யூனிஸ்ட் கட்சிக் கொள்கைக்கும் முதலாளித்துவத்துக்கும் முரண் இருப்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் நாளை கம்யூனிஸத்துக்கும் சர்வோதயத்துக்கும்தான் போராட்டமாக இருக்கும்'' என்றார் ஸ்ரீமன் நாராயண்.

அடுத்தாற்போல் பேசிய ராஜாஜி இன்றையக் காங்கிரஸின் நிலையைப் பற்றி வெகு விரிவாக விளக்கினார்.

''முப்பது ஆண்டுகளுக்கு முன் காங்கிரஸ்காரர் என்றால் அஹிம்சாவாதி, நேர்மையானவர், சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவர் என்ற எண்ணம் பொதுவாக எல்லாரும் கொண்டிருந்தார்கள். இன்று இவ்வளவு பண்புகளும் இழந்த, மாறுபட்ட சுபாவம் கொண்டவரே காங்கிரஸ்காரர் என்ற உணர்ச்சி பொது மக்களிடையே நிலவுகிறது.

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் கூடிய திரளான கூட்டம்.





விடுமுறைப் பயணமா?
28°
Agfa
Isopan
இன்பகரமான விடுமுறை நாட்களை
ஞாபகமூட்டிக் கொள்ள உங்களுடன் ஆக்பா
ஐஸோபான்-F பிலிம் சுருள்கள் சிலவற்றை
எடுத்துச் செல்லுங்கள். உலகப் பிரசித்திப் பெற்ற
இந்த போட்டோ பிலிம் உங்கள் படங்களை
மிகத் தெளிவாக எடுக்கும். எந்த அளவிற்கு
வேண்டுமாயினும் பெரிதாக்க முடியும்.
Agfa ஐஸோபான்-எப்
சிறப்பாக போட்டோப் பிடிக்க துரிதமான, நுட்
பகிரெயினுள்ள பாங்க்ரோமாடிக் பிலிம்.
இலவசம்: ''ஆக்பா போட்டோ காலரி'' என்று பெயருள்ள படங்கள் கூடிய சஞ்சிகையை எந்த ஆக்பா டீலரிடமாவது இலவசமாக வாங்கிப் படித்து போட்டோக்களை விருத்தி செய்து கொள்ளுங்கள்.
ஆக்பா இந்தியா பிரைவேட் லிட்.
பம்பாய் - புது டில்லி - கல்கத்தா - மதராஸ்

இதை நான் சொல்லுகிறேன் என்றால் சந்தோஷத்தினலா சொல்லுகிறேன், மிகுந்த வருத்தத்தோடு சொல்லுகிறேன். இந்த நிலையை மாற்றிக் காங்கிரஸ் தன் பழைய செல்வாக்கையும் உயரிய நிலையையும் அடையக் காங்கிரஸுக்கு நல்ல எதிர்க் கட்சி அமைய வேண்டும்!'' என்று வற்புறுத்திக் கூறினார்.

ராஜாஜி அன்று நிகழ்த்திய பிரசங்கம் உள்ளம் உருகும்படி அமைந்திருந்தது.

ராமநாம சங்கீர்த்தனத்துடன் அன்றைய விழா வெகு அழகாக முடிந்தது.

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு மதுரைக்குப் புறப்படுவதாக இருந்தது. ஆனால் திரு ஜி. ராமச்சந்திரன், ''எங்கள் கிராம வைத்தியப் பகுதியை மட்டும் பார்த்துவிட்டுப் புறப்பட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். ராஜாஜி ''சரி!'' என்று ஒப்புக்கொண்டார். எந்த வேளையில் ஒப்புக் கொண்டாரோ தெரியவில்லை. காந்தி கிராமத்திலுள்ள அத்தனை நிர்மாண வேலை ஸ்தாபனங்களையும் ஒன்றன் பின் ஒன்றாக ராஜாஜி பார்க்கத் தலைப்பட்டு விட்டார்!

சரியாக 10–30 மணிக்குக் காந்தி கிராமத்தை விட்டு ராஜாஜி மதுரைக்குப் புறப்பட்டார். காந்தி கிராமத்திலிருந்து மதுரை முப்பது மைல் தூரம். இந்த முப்பது மைல் தூரமும், ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் ஒத்துழைப்பினால் பல கிராமங்களில் குடி தண்ணீர் வசதி, பள்ளிக்கூடங்கள், வைத்திய சாலைகள், பிரசவ விடுதிகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. ராமநாதபுரம் ஜில்லாவில் ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன் புயலில் அவதியுற்றவர்களுக்குத் தாமும் தம் ஆசிரம சேவிகைகளுமாகச் செய்ய நேர்ந்த அரும் சேவைகளைப் பற்றிப் பெருமிதத்தோடு சொல்லிக் கொண்டு வந்த போது மெய் சிலிர்த்தது. ஸ்ரீமதி சௌந்தரம் போல் இன்னும் சில பெண்மணிகள் முன் வந்து விட்டார்களானால் தமிழகத்தின் ஒவ்வொரு கிராமமும் அறிவும் சுபிட்சமும் ஒளி வீசும் கிராமமாகத் திகழும்.

* * *

மதுரை என்று நினைத்தால் அதன் முடிசூடா மன்னராகத் திகழ்ந்த மதுரை வைத்தியநாதய்யர் நினைவுதான் யாருக்கும் வரும். ராஜாஜிக்குத் துணைநின்றுதேசத்துக்குகந்தபல நற்காரியங்கள் புரிந்தார். ஹரிஜனங்களுக்கு வைத்தியநாதய்யர் செய்த தொண்டும் காங்கிரஸ் ஊழியர்களுக்குத் தமது இல்லத்தை 'அடையா நெடுங்கத'வாக வைத்திருந்த பண்பும் யாருக்குத்தான் நினைவு வராது. ராஜாஜி அன்று பிற்பகல் வைத்தியநாதய்யர் இல்லத்துக்குச் சென்று அவரது மனைவியாருக்கும், புதல்வருக்கும் ஆறுதல் மொழிகள் கூறினார்.

தமிழகம் நன்றிமறவாத நாடு என்ற நல்ல பெயர் உண்டு. எனினும் மதுரையில், வைத்தியநாதய்யர் ஞாபகார்த்தம் எழுப்ப யாரும் முயற்சி எடுக்கவில்லை.

மதுரைக்கு வைத்தியநாதய்யர் புரிந்துள்ள சேவையை நினைக்கும்போது அவர் பெயரால் ஒரு பெரிய அன்னசத்திரம் நிறுவுவதே அவருக்குச் சிறந்த ஞாபகச் சின்னமாக விளங்கும்



வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்த கைத்தறி நெசவாளர் சங்கக் காரியதரிசியும், திண்டுக்கல் பஜனை கோஷ்டி சாமியாரும்.

என்று ராஜாஜி அபிப்பிராயப் பட்டார். தமிழக மக்களின் பேருதவி கொண்டு இக் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும்.

காந்தி கிராமம் வரை ராஜாஜி வருகிறார்கள் என்பதை அறிந்த மதுரையிலுள்ள கல்லூரி மாணவர்கள் அனைவரும், தங்களுக்கு ''மொழிப் பிரச்னை'' சம்பந்தமாக விளக்கம் தர வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அவர்கள் அழைப்புக் கிணங்க அமெரிக்கன் கல்லூரியில் பேச ஒப்புக் கொண்டார். அன்றையப் பேச்சில் ராஜாஜி சந்தேகத்துக்கு இடமின்றி, நமது ராஜ்யத்தின் ஆட்சி மொழியும் கல்லூரியில் போதனா மொழியும் தமிழாகத்தான் இருக்கவேண்டுமென்றும், மத்திய அரசாங்கத்தினிடமோ, வேறு ராஜ்யங்களுடனோ தொடர்பு வைத்துக் கொள்ள உதவக் கூடிய மொழி ஆங்கிலமாக இருக்க வேண்டும் என்றும் மிகத் தெளிவாகக் கூறினார். சுமார் ஒன்றரை மணி நேரம் ராஜாஜி பேசினார். அமெரிக்கன் கல்லூரியின் அந்தப் பெரிய ஹால் முழுதும் மக்கள் நிரம்பி வழிந்தனர். வெளியிலும் தெருவிலும் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி நின்று கேட்டார்கள்.

அன்றிரவு சென்னைக்கு ரயில் ஏறும்போது ஒரு மாபெரும் கூட்டம் மதுரை ஜங்ஷனில் கூடிவிட்டது — ராஜாஜியை வழியனுப்ப. ரயில் புறப் படத் தொடங்கியதும், ''ராஜாஜி வாழ்க! தட்சிணப் பிரதேசம் வாழ்க!'' என்று விண்ணதிரக் கோஷமிட்டனர். தமிழ் மக்கள் தட்சிணப் பிரதேசக் கருத்தை முழுதும் விட்டு விடவில்லை என்பது எனக்குச் சற்று ஆறுதல் அளித்தது!

வண்டி வேகமாக நகர ஆரம்பித்துவிட்டது. வழியனுப்ப வந்த கூட்டத்தைத் தாண்டி ரயில் பிளாட்பாரத்தை விட்டு வெளியேறும் சமயம் ஒருவர் ரயிலுடன் கூடவே ஓடிவந்து, ''தாங்கள் குறைந்த பட்சம் நூறு வயதாகிலும் வாழ்ந்துவிட வேண்டும்!'' என்று நெஞ்சம் தழுதழுக்கக் கூறினார். ராஜாஜி சிரித்துக் கொண்டே ''நில்லுங்கள்!'' என்றார். எனக்கு அந்த நண்பரின் பேரன்பே உள்ளத்தில் இப்போதும் மேலோங்கி நிற்கிறது!

பரிவு

ஏ.எஸ்.ராகவன்

வாசலில் கடுமையான மழை பெய்து கொண்டிருந்தது. மாலையில் ஆரம்பித்த மழை எட்டு மணிக்குத்தான் ஓய்ந்தது. வாசலிலுள்ள பூவரச மரத்தின் இலைகளிலிருந்து நீர் சொட்டிக் கொண்டிருந்தது. அநேகமாக வீட்டுக்குள்ளும் அதே நிலைதான். இருக்கிற பாத்திரங்களையும் வாளியையும் வைத்து ஒரு விதமாகச் சமாளித்தாள் அமிர்தம். வாசல் திண்ணையில் வந்து சாக்கைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள். பூவரச மரத்தின் நீர்த் துளிகளைப் போல அவள் கண்களிலிருந்தும் நீர் சுரந்து உருண்டது.

முத்துவுக்கு இதெல்லாம் வேடிக்கையாக இருந்தது. மழை நீரில் கையை நீட்டி நீட்டிப் பிடித்தான். பாத்திரங்களில் கையை விட்டு அலைந்தான், வீட்டுக்குள் ஒழுகுகிறதே என்கிற விசாரம் அவனுக்கு. பையனுக்கோ, வெளியில் போக வேண்டிய அவசியமின்றி, உள்ளேயே மழை கொட்டுகிறதே என்கிற மகிழ்ச்சி!

"அட, பாழாய்ப் போகிறவனே! காய்ச்சல் வந்து என் உயிரை எடுக்கவா?" என்று கூறியவள் ஆத்திரத்தில் அவன் முதுகில் ஒரு அறை கொடுத்தாள்.

சுருண்டு விழுந்தான் முத்து. அடி பலமாகப் பட்டு விட்டது போலும்! எட்டு வீடு கேட்க 'வீல்' என்று அலற ஆரம்பித்து விட்டான். அமிர்தம் சாதாரணமாக அவனை அடித்ததே இல்லை. அவனைச் செல்லமாகத்தான் வளர்த்தாள். ஆனால் அப்போதிருந்த மன நிலையில் அவளுக்குக் குழந்தைப் பாசத்தையும் மீறி உள்ளூற வேறொரு கலக்கம், பொங்கிக் கொண்டிருந்தது.

"எழுந்திருடா!..."

"அப்பா வரட்டும் சொல்கிறேன்..."

"நல்லாச் சொல்லு: மழையிலே அளைஞ்சா உடம்புக்கு ஆகுமா?"

அவன் அழுகையை நிறுத்தவே இல்லை. இந்தச் சமயம் பார்த்து மழையில் சொட்டச் சொட்ட நனைந்துகொண்டு உள்ளே நுழைந்தான் சிங்காரம். "ராசாப் பயல் ஏன் அழுகிறான்?" என்று அமிர்தத்தைக் கேட்டான்.

"அழுவதைத் தவிர வேறு என்ன வேலை அவனுக்கு?" என்றாள் அவள்.

"இல்லேப்பா! அம்மா முதுகிலே ஓங்கி அடிச்சுட்டா பாரு, எப்படி இருக்குது?" முத்து முதுகைக் காட்டிப் புகார் செய்தான்.

"ஏய், பிள்ளை முதுகு அப்பளமா இருக்குது! எதுக்காக இப்படிப் போட்டுக் கொலை செய்தாய்?" என்று கத்தினான் சிங்காரம்.

"மழையிலே அளையறான். வீடு தொப்பலா ஒழுகுது. நிற்க இடம் இல்லே. இவனுக்குச் சந்தோஷம்!"



பையனை அடித்தது கூட உரைக்கவில்லை சிங்காரத்துக்கு. வீடு முழுவதும் தொப்ப லாக இருக்கிறதென்று அமிர்தம் சொன்னது தன்னைக் குத்திக் காட்டத்தான் என்று எண்ணிக் கொண்டான்.

'' ஏன், உங்க ஆயா கட்டிப் போட்டிருக்கிற அரமனைக்குப் போகிறதுதானே? என் வீடு இப்படித்தான் இருக்கும். இருக்க விருப்ப மிருந்தால் இரு. இல்லாட்டிப் போய் விடு'' என்று சீறினன்.

'' எங்க ஆயா கட்டிப் போட்டிருந்தால் நான் ஏன் இப்படி இருக்கிறேன்?'' என்றாள் அமிர்தம். அவளுக்கும் ரோஷம் இருக்காதா?

'' என்ன, எதிர்த்துப் பேசுகிறாய்?''

'' சரி. சரி. சாப்பிடுங்க.''

'' எனக்கு வேண்டாம் ''

'' இப்பொழுதுஎன்ன சொல்லிவிட்டேன்?''

'' வர வர உனக்குத் திமிர் அதிகமாகத் தான் போச்சு. போனால் போவுது, போனால் போவுதுன்னு போகிறேன். பாரு. அது தப்பு. ஒவ்வொருத்தன் குந்த இடம் இல்லாமல் தவிக்கிறான். உனக்கு இந்த வீட்டிலே கால் தரிக்க மாட்டேங்குது? வேறே எவனையாவது பணக்காரனைப் பார்த்துக் கட்டிக்கிட்டிருக் கிறதுதானே?''

'' என்னுங்க இது?''

'' உன் நீலித்தனமெல்லாம் நம்மகிட்டே வைக்கக்காதே. எனக்குச் சோறுவேண்டாம்னு வேண்டாம். பேசாமல் போ'' என்று சீறி விழுந்து அவளைப் பிடித்துத் தள்ளினன் சிங்காரம். மூலையில் போய் விழுந்தாள் அமிர்தம். விர்ரென்று வெளியே போய்விட் டான் அவன். தள்ளாடி மெள்ள எழுந்தாள் அமிர்தம். முத்து என்ன செய்வதென்று தெரி யாமல் மூலையில் நின்று அவளையே விழித்துப் பார்த்தான். அவனைப் பார்த்ததும் ஆத்திரம் பொங்கியது அமிர்தத்துக்கு. அப்பனுக்குச் சொல்லிக் கொடுக்க இப்பொழுதே கற்றிருக் கிறான் பிள்ளை! இவ்வளவும் இவனால்தானே?

''இங்கே வாடா..''

''ஊஹூம்.''

''வருகிறாயா, உதை கேட்குதா?''

''மாட்டேன், போ..''

''அப்பனைப் போலத்தானே நீயும் இருப்பாய்!'' என்றாள் அமிர்தம்.



முத்து வாசலுக்கு ஓடி விட்டான். மழை பெய்து தரை மெழுகி விட்டது போலப் பள பளத்தது. கூரையிலிருந்து சொட்டிக்கொண் டிருந்த நீர் தெரு விளக்கின் ஒளியில் முத்து முத்தாகப் பளிச்சிட்டது. பயம் மெல்ல மறைய, அந்த அழகையே அனுபவித்தான் முத்து. மெல்லக் கையை நீட்டினன். ஜில் என்றிருந்தது. அவனுக்கு ஆனந்தம் பிடிபட வில்லை. ''அம்மோவ்!..'' என்று குரல் கொடுக்க வாயைத் திறந்தான்; சப்தம் வெளி வரவில்லை. தொண்டைக்குள்ளேயே அமுங்கிப் போய் விட்டது.

சிறிது நேரம் அங்கேயே நின்று கொண்டி ருந்தான். பிறகு மெள்ள உட்புறம் தலை நீட்டினன். அவள் அதே இடத்தில் சுருண்டு படுத்திருந்தாள். தலைக்கு நேராக மழை நீர் சொட்டிக் கொண்டிருந்தது. ''உள்ளே போகலாமா, வேண்டாமா?'' என்று யோசனை. மறுபடியும் உதை விழுமோ என்கிற பயம். ஆனால் அம்மா அப்படிப் படுத்திருக்கிறாளே என்கிற கவலை வேறு.


அடிமேல் அடி வைத்து அவள் அருகில் சென் றான். அவன் வந்ததை அவள் கவனித்ததாகத் தெரிய வில்லை. குனிந்து முகத்தைப் பார்த் தான். மழை ஜலமா, கண்ணீரா? அவனுக் குப் புரியவில்லை. கண் சிவந்திருந்தது. அம்மா அழுகிறாள்!

''அம்மா.. அம்மா..!''

அவள் பதில் பேசவில்லை.

தன் கைகளால் அவள் முகத்தை வருடினன் முத்து. ''ஏன் அம்மா அழுகிறாய்?''

அமுக்கிக் கொண்டிருந்த தடை பெயர்ந்து பாசம் பெருகி விட்டதைப் போல அவள் ஒரு முறை குமுறினாள். அடுத்த கணம் அவனை வாரி அணைத்துக் கொண்டு, ''ராசாப் பயலே!



நினைவுக் கெட்டாத காலம் முதல்-மிகப்பழைய காலத்து டங்கார கொட்டுகளிலிருந்து அதுவே பரிஷ்காரமாய் நாதம், லயம், நிறைந்த சங்கீதமாக மாறின காலம் வரை— மனிதர்கள் தன்னுடைய எண்ணங்களை, இன்னிசை, நாட்டியத்தின் மூலமாக வெளிப்படுத்துகிறார்கள். இன்னிசையும், நடனமும் மக்களின் அழிவில்லா பாரம்பரை சொத்து. பிரபஞ்சத்தையே மயக்கி, உருக்கி, ஆகர்ஷிக்கும் தன்மை அதனிடத்தில் உள்ளதால், எத்தேசத்தினருடனும் ஓர் வகை பந்தம் ஏற்படுத்திக் கொள்ள ஹேதுவாக இருக்கும். இசையைப் போலவே பொதுப்பட்ட குறிகோள்களும் ஒன்றுபட்ட முயற்சிகளும், ஒருவர் மற்றவருடன் தொடர்பை அதிகரிக்கச் செய்யக்கூடியது. நம் நாட்டின், சுபிக்ஷத்தை பெருக்கச் செய்ய, இது போன்ற மனப்பான்மைகள், ஏகோபித்த பிரயாசைகளும் பாரத தேசத்தில் முக்கிய ஸ்தானம் வகிக்கிறது. ஒன்றுபட்ட முயற்சிகளின் அபிவிருத்தியினால், பாரத தேச முன்னேற்றத்திற்கு எங்கள் பெட்ரோலியம் பொருள்களின் இடைவிடா சப்ளை-உயர்ந்த சங்கீதத்திற்கு தாளக்கட்டுடன் ஸ்ருதி போதம் இல்லாமை எவ்வளவு முக்கியமோ அதுபோன்ற குணம் நிறைந்த ஒரு அனுகாரக சக்தி.



ஸ்டான்வாக் — வளர்ச்சிக்கென்றே நிற்கும் பெயர்

ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி (யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்காவில் இணைக்கப்பெற்று, கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

PSTV(

உன்னே அடித்ததற்கு இது வேணும்டா, எனக்கு!'' என்றாள்.

''அப்பா ஏன் அம்மா சாப்பிடாமல் போய் விட்டாங்க?''

''பசி இல்லையாம்.. போயிட்டாங்க!''

''அப்பாவுக்குப் பசிக்கவே பசிக்காதா?''

''ஊஹூம்.''

''எனக்குப் பசிக்குதே!''

''நீ குழந்தை.. அதனாலே பசிக்குது.... சாப்பிடுகிறாயா?''

''உனக்குப் பசிக்குதா, அம்மா?''

''இல்லேயடா..''

''போம்மா. உனக்குப் பசிக்கல்லே, அப்பாவுக்கும் பசிக்கல்லே..எனக்கு மட்டும்?.. அம்மா, எனக்கும் பசிக்கல்லேம்மா..''

அவள் விம்மினாள்.

''அம்மா..''

''என்னடா ?''

''நான் இனிமேல் மழையிலே போகமாட்டேன், அம்மா...!''

அவள் இறுக அணைத்துக் கொண்டாள் அவனே. அப்படியே தூங்கிப் போனான் முத்து. அவனைப் பாயில் விட்டு விட்டுத் தான் வாசல் திண்ணைக்கு வந்தாள் அமிர்தம்.

திடீரென்று தன் கணவனுக்கு அத்தனை கோபம் ஏன் வந்தது என்று அவளுக்குப் புரியவில்லை. சில நாட்களாகவே அவன் காரணமில்லாமல் சீறி விழுந்து கொண்டிருந்தான். இன்று அவளை அடிக்கிற வரை ஆகிவிட்டது.

தன்னை உதறி மூலையில் எறிந்ததை நினைத்தால் அமிர்தத்தால் பொறுக்க முடியவில்லை. பிறந்தது முதல் பட்ட கஷ்டங்களுக் கெல்லாம் விடிவு வந்து விட்டது என்று நினைத்திருந்தவளுக்கு மறுபடியும் இந்தச் சோதனையா? சிங்காரத்துக்கு அவளுடைய முழு வரலாறும் தெரியும். அன்போடுதான் இருந்தான். ஆனால் கொஞ்ச நாட்களாக அவன் வீட்டுக்குச் சரிவர வருவதில்லை. கேட்டால் எரித்து விடுகிறமாதிரி பார்ப்பான். கை கழுவியதும் கழுவாததுமாக ஓடி விடுவான். குழந்தையைச் சீராட்டுவதுகூட நின்று விட்டது. மேல வீட்டு மருதிதான் ரகசியமாகச் சொன்னாள். ''ஏ, அமிர்தம்! உன் புருஷன் இப்பொழுதெல்லாம் ஒருமாதிரி இருக்குதே.. கவனிக்கிறாயா? போக்கிரிகளோடு சேர்ந்து ரங்கு ஆடுகிறதாம்....''

'ரங்கு' என்றால் என்ன என்று அமிர்தத்துக்குத் தெரியாது. மருதிதான் விளக்கினாள். சீட்டைக் கலைத்துப் போடுவார்களாம். அதைப் பார்க்காமலேயே காசை வீசி எறிய வேண்டுமாம். அதிர்ஷ்டம் இருந்தால் நிறையப் பணம் சேரும். சிங்காரம் இதுவரையில் 'கோட்டை' விட்டானே தவிர, பிடித்ததாகத் தெரியவில்லை. அவளே சொன்னாள்.

''உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள் அமிர்தம்.

''என் புருசனும் அங்கே பழியாகக் கிடந்திருக்கிறாரு....சண்டை போட்டுக் கூட்டி வந்தேன். அப்பொழுதுதான் பார்த்தேன், உன் புருசனும் அங்கே இருந்தாரு! அட, நல்ல மனுசன் இப்படிப் பாழாய்ப் போகிறாரேன்னு உன்னிடம் சொல்கிறேன் அமிர்தம் புத்தியாகப் பிழைச்சுக்கோ!''

மருதி சொன்னது உண்மைதான் போலிருக்கிறது! சிங்காரம் அந்த இடத்துக்கா போக வேண்டும்!

இன்றும் நஷ்டம் போலிருக்கிறது! அது தான் அத்தனை கோபம் அவருக்கு வந்து விட்டது. காசை இப்படிக் கரியாக்குவதற்குப் பதிலாகக் கூரையாவது வேயலாம்! தீபாவளி வேறு வருகிறது. மனைவியை உதைக்கத் தெரிகிறது! இந்தப் 'புத்தி' அவருக்கு இல்லையே!

அமிர்தத்துக்கு மெல்லப் பழைய நினைவெல்லாம் வந்தது.

அவளுக்குப் பதினொன்று வயது. ஒரு நாள் இப்படித்தான் மழை பெய்து ஓய்ந்திருந்தது. இரவு மணி ஏழு இருக்கும். வேலை முடிந்து சம்பளப் பணத்துடன் மாமன் வீடு நோக்கி நடக்கிறாள். வளைந்து வளைந்து சென்ற செம்மண் பாதை முடிவில்லாது நீள்வது போலிருந்தது. இந்தப் பாதையோடு போய் ஐயனார் கோவிலுக்கு அருகில் பிரிந்து, குறுக்குப் பாதை வழியாகக் கிராமத்துக்குப் போக வேண்டும். மூன்று மைல்களுக்கு மேலிருக்கும். வயல் வரப்புகளூடே நடக்க வேண்டும். பணத்தைக் கொடுத்து விட்டு உடனே திரும்பியாக வேண்டும். காலையில் வேலைக்குப் போயாக வேண்டுமே!

நினைவு தெரிந்த நாள் முதலாக அமிர்தத்துக்கு அந்தப் பாதையும், வயல் வெளியும், மாமா, மாமியின் கண்டிப்பும் வாழ்வின் புரியாத புதிர்களாகவே இருந்தன. அவளைப் பெற்றவள் எப்போது கண்ணை மூடினாளோ அவள் அறியாள். அவளை வளர்த்துச் சோறு போட்டதெல்லாம் மாமன்தான். தவம் கிடந்து சாப்பிட்ட சோறு. அமிர்தம் அதற்கு வஞ்சகம் எண்ணியதில்லை. உழைத்து உழைத்துக் கொண்டு போய்க் கொடுத்து விடுவாள். காலணா கூட அவள் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஒரு தடவை, ஒரே ஒரு தடவை தான், தப்பாசையால் பொரி கடலை வாங்கித் தின்று விட்டாள். மாமி அப்போது காதைத் திருகினது இன்னமும் வலிக்கிறது.

மடியிலிருந்த பணத்தை அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொண்டு நடந்தவள், 'பாம் பாம்' என்று அலறிக் கொண்டு ஓடிய காருக்குப் பயந்து விலகினாள். புழுதிப் படலம் கண்ணை அடைத்தது. மறுபடியும் மடியைத் தொட்டுப் பார்த்தாள். நல்லவேளை! முடிச்சு அப்படியே இருந்தது.

வேகமாக நடந்து கிராமத்தை அடைந்தாள். மாமன் வீட்டில் இல்லை. அறுவடை ஆகியிருந்த நெல்லைக் குப்பலாக வாசல் திண்ணையில் கொட்டிச் சாக்கில் மூடியிருந்தார்கள். மாமனுக்கு நல்ல வசதி உண்டு. இருந்தும் அவளுடைய சம்பளப் பணம், மூன்று ரூபாயின் மேல் ஏன் அத்தனை 'கறார்' என்று அவளுக்குப் புரியவில்லை.

''காலையிலேயே வருகிறதற்கு என்ன.....?'' என்று கேட்டாள் மாமி.

''வீட்டிலேவேலைஇருந்தது. சின்ன எசமானியம்மா மாலையில் போன்னு சொன்னாங்க!''

என்று பழியை எஜமானியின் மேல் தூக்கிப் போட்டாள் அமிர்தம்.

''சரி, பணம் எங்கே? மிஸ்தி கட்டணும்.''

அமிர்தம் பணத்தைக் கொடுத்தாள். ஒரு அணாவும், அரை அணாவுமாக அத்தனையும் சில்லறையாக இருந்தன.

''என்ன ஒரு ரூபாய் குறையுது!'' என்றாள் மாமி, பணத்தை எண்ணி விட்டு.

அமிர்தம் திடுக்கிட்டாள். ''சரியாக இருந்ததே.....'' என்றாள்.

''நீதான் எண்ணிப் பாரு. சீமாட்டிக்குத் திருட்டுப்புத்தி எப்பொழுதிலிருந்து வந்தது?''

''இல்லே. சாமி சத்தியமா...''

''சாமியை ஏன் கூப்பிடுகிறாய்? பணம் இருந்தால் எங்கே போய் விடும்?''

மாமன் வந்து விட்டான். சங்கதி தெரிந்ததும் பாய்ந்து கத்தினான். ''ஏ புள்ளே, என்ன வேலைத்தனமெல்லாம் செய்கிறாய்?'' என்று இரைந்தான்.

அமிர்தம் அழத் துவங்கினாள்.

''நீலி, அழுகிறதைப் பாரு!'' என்று இடித்துரைத்தாள், மாமி.

''ஒழுங்காகக் கேட்டால் உள்ளது வருமா?'' என்ற மாமன், கையில் குச்சியை எடுத்துக் கொண்டான். 'வீல்,வீல்' என்று அலறி விழும்படி உதை கொடுத்தான்.

இதெல்லாம் சகஜம். அமிர்தம் இப்படி எத்தனையோ முறை அடி பட்டிருக்கிறாள். ஆனால் அவளுக்கும் அப்போது பதினான்கு வயதாகி விட்டதல்லவா? பட்டணத்துப் பக்கம் வேலை பார்க்கச் சென்று கொஞ்சம் அனுபவமும் ஏற்பட்டிருந்தது. எனவே மாமன் அடிப்பதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

''எங்கே ரூபாய்?''

''நான் எடுத்துக் கொண்டு விட்டேன்.''

''எதற்கு உனக்குப் பணம்?....சாப்பாடு போடுகிறாங்களே, அவங்க?''

''உங்களுக்கு எதுக்கு என் பணம்? நிலம், நீச்சு இல்லையா? இப்படி அடிக்கிறீங்களே!''

''பார்த்தாயா, என்ன பேச்சுப் பேசுது!'' என்று முடுக்கினாள் மாமி. மாமனுக்கு ஆத்திரம் அதிகமாகி விட்டதில் வியப்பில்லை.

அமிர்தம் சரேலென்று வெளியே வந்தாள். ஓய்ந்திருந்த மழை திரும்ப ஆரம்பித்து விட்டது. ஆனாலும் பின் தங்க அவளுக்கு விருப்பமில்லை. எப்படித்தான் தைரியம் வந்ததோ! மாமனை உதறியாகி விட்டது. ஊர் எல்லையைத் தாண்டும் போது மழையின் வீச்சு தாங்கக்கூடியதாக இல்லை. அருகில் இருந்த வீட்டுக்குள் நுழைந்தாள். அது சிங்காரத்தின் வீடு. அவனுடைய தாயார், அமிர்தத்திடம் எப்போதும் பரிவு கொண்டவள். அன்று சிங்காரத்தின் வீட்டில் நுழைந்தவள் அதே வீட்டில், தங்கி விட்டாள்.

''இந்தப் பிறப்பே உதைபடத்தான் பிறந்தது.'' அமிர்தத்துக்குப் பழம் நினைவு மீண்டு, துயரம் பொங்கியது.

இரவு எந்நேரம் இருக்குமோ, அமிர்தத்துக்குத் தெரியாது. தலை மாட்டில் யாரோ உட்கார்ந்திருப்பது போலத் தெரியவே, திடுக்கிட்டு எழுந்தாள். சுவரில் சாய்ந்தவாறு சிங்காரம் தூங்கிக் கொண்டிருந்தான்.

''இந்தாங்க....''

''..............''

''உங்களைத்தானே?.... இந்தாங்க..!'' என்று மெல்ல உலுப்பினாள் அவனை.

சிங்காரம் விழித்துக் கொண்டான்.

''எப்பொழுது வந்தீங்க? என்னை நீங்கள் எழுப்பக் கூடாதா?''

''நீ நல்லாத் தூங்கிக்கிட்டிருந்தாய்!''

''சாப்பிடுகிறீங்களா?''

''உம்...''

உள்ளே போனாள் அவள். அவன் பின் தொடர்ந்து வந்தான். பேசாமல் அவன் சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்த அமிர்தத்துக்கு மருதி கூறிய விஷயம் நினைவுக்கு வந்தது. கேட்டால் மீண்டும் கோபித்துக் கொண்டால் என்ன செய்வது?

''பயல் தூங்கி விட்டானா?''

''ஆமாம்!''

''இனிமேல் அவனை அடித்து விடாதே, அமிர்தம்!''

''தெரியாமல், கோபத்திலே நான் அவனை அடித்து விட்டேன்.''

''நானும்தான் உன்னை...'' அவன் முடிக்கவில்லை. அவனைப் பார்த்தாள்.

பட்டென்று வேதனை முழுவதும் விலகி விட்டதாக நினைவு.

''மோர் ஊற்றட்டுமா?'' என்றாள்.

''வேண்டாம். இங்கேதான் மேலே யிருந்து மோர் கொட்டுதே!'' என்று கூறி விட்டுச் சிரித்தான் அவன்.

மெள்ளத் தைரியம் வந்தது அவளுக்கு. ''இன்றைக்கு என்ன நஷ்டமா?'' என்று தயக்கத்துடன் கேட்டாள்.

''என்ன?''

''ஆட்டத்திலே நஷ்டமான்னுகேட்டேன்?''

''எந்த ஆட்டத்திலே?''

''ரங்கு ஆட்டமாமே, அதிலே?''

அவன் உரக்கச் சிரித்தான். ''அட, உனக்கு யார் சொன்னது?'' என்று கேட்டான்.

''யாரோ சொன்னாங்க.. இதோ பாருங்க, அந்தக் காசே நமக்கு வேண்டாம்..''

''வேணும்னு நான் சொல்கிறேனா!.. உள்ளது தங்கினால் போதாதா? நான் வியாபாரம் செய்கிறேன் இப்போ..''

அவள் விழித்தாள்.

''அங்கு ஆடுகிற இடத்திலே சின்னக் கடை வைச்சிருக்கேன். சுமாரா வியாபாரம் ஆகுது. இதுவரையில் ஐம்பது ரூபாய் லாபம் வந்திருக்கிறது. இந்த வருஷம் தீபாவளி ஓடிப்போகும். இன்றைக்குக் கூடக் கடை இருந்தால் ஏதாவது பணம் வந்திருக்கும். மனசு சரியில்லே, வந்து விட்டேன். ஏன் அமிர்தம்! உனக்கு அடிகிடி பட்டு விட்டதா?''

அவனது பரிவு அவள் நெஞ்சைத் தொட்டது. தலையைக் குனிந்து கொண்டாள். இப்படி இன்பம் கிடைக்குமென்றால், இன்னும் எத்தனை முறை வேண்டுமானாலும் அவனது கோபத்துக்கு ஆளாகலாமே என்று தோன்றியது அமிர்தத்துக்கு.

nurse


நர்ஸ் சொல்லுகிறாள்:

"ஜலதோஷம்

இந்த நவீன

முறையின்படி

துரிதமாக அகலுகிறது!"



உங்கள் குழந்தைக்கு ஜலதோஷமிருந்தால், நீங்கள் விக்ஸ் வேபோரப்பால் துரிதமாகவே அவன் படும் கஷ்டங்களை நிவர்த்தி செய்யலாம். படுக்கப்போகும் சமயத்தில் சுகந்தரும் இந்த ஆயின்ட்மென்டை மார்பின்மேலும், தொண்டையின் மேலும், முதுகின் மேலும் தடவித் தேயுங்கள். அநேக தேசங்களில் விக்ஸ் வேபோரப் நர்ஸுகளாலும் டாக்டர்களாலும் சிபார்சு செய்யப்படுகிறது. ஏனெனில், அது:

1. நீங்கள் இதைப்போல தடவித் தேய்த்தவுடன் விக்ஸ் வேபோரப்பின் சக்திவாய்ந்த மருந்து சருமத்தின் வழியாகச் சென்று வேலை செய்ய ஆரம்பிக்கிறது. அது குழந்தையின் மார்பு வலியை நிவர்த்தி செய்வதுடன் கபத்தைக் கரைக்கவும் அடைசலை அகற்றவும் உதவுகிறது.

2. அதே சமயத்தில், விக்ஸ் வேபோரப் காரமான, தூய வாசனையை வெளியிடுகிறது. அதை குழந்தை தூங்கும்பொழுது சுவாசக் குழாய்களில் நேராக போகும்படி சுவாசிக்கிறது. இவ் வாசனை ஜலதோஷத்திற்கு மிகச் சக்திவாய்ந்த மருந்தாகும். அது அடைந்த மூக்கைச் சுத்தம் செய்கிறது; புண்ணுள்ள தொண்டைக்கு ஆறுதல் அளிக்கிறது; இருமலை நிறுத்துகிறது.

இரவு முழுவதும், விக்ஸ் வேபோரப் இவ்விரண்டு நவீன வழிகளில் குழந்தையின் ஜலதோஷத்தை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டே இருக்கிறது. மறுநாள் காலையில் அநேகமாக, ஜலதோஷத்தின் கடுமை மறைந்து விடுகிறது.



மார்பிலுள்ள வலியை அகற்ற சருமத்தின் வழியாகச் சென்று வேலை செய்கிறது.

2 வழிகளில் ஜலதோஷத்தை எதிர்த்துப் போராடுகிறது!



சுவாசிப்பதை சுலபமாக்க மூக்கின் வழியாகச் சென்று வேலை செய்கிறது.

ஜலதோஷத்திற்கு சிறந்த ஔஷதம்.

"தடவித் தேயுங்கள்!"

விக்ஸ் வேபோரப்



விக்ஸ்வேபோரப் ஒரு டிரேட் மார்க்

HAS AD 322



எக்லா
தென் இந்தியா
விரும்பும் டால்க்!
தெம்பூட்ட, மணமளிக்க
தனிப்பட்ட தயாரிப்பு
இந்த பரத நாட்டியக்காரியைப்போல்,
நீங்களும் தென்னாட்டின் அதி உஷ்ண
கால நிலையிலும்கூட குளுமையும் இத
மும் பெறலாம். மனோரம்மிய மணம்
பெற்ற எக்லா டால்க் உபயோகி
த்தால் குளுமையான நுண்ணிய
சுகந்தத்திற்கு இந்த ஒப்புயர்வற்ற டால்க்கை
அடிக்கடி தாராளமாக உபயோகியுங்கள்
மெல்லிய எக்லா ஒரு லட்சிய
முகப்பவுடரும் கூட
கால்கேட்
எக்லா
டால்க் பவுடர்
ECLAT
TALC POWDER
COLGATE

படித்துப் பாருங்கள்

கலைக் களஞ்சியம் (மூன்றும் தொகுதி)

தமிழ்ச் சொற்களின் பொருள்களைக் கூறும் அகராதியைத் தவிர, தமிழில் ஆராய்ச்சித் துறைக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பயன்படும் நூல் எதுவும் வெளிவரவில்லை என்ற அபிப்பிராயம் நீண்டகாலமாக நிலவிவந்தது. தமிழ் வளர்ச்சிக் கழகம் முழுமூச்சுடன் தமிழ் மொழியின் ஆக்கத்தில் ஊக்கங் காட்டத் துவங்கியதிலிருந்து அந்த அவச்சொல் அடியோடு அற்றுப் போய்விட்டது.

தமிழ் மொழியின் கருவூலம் என்று இந் நூலைக் கூறுவது மிகவும் பொருத்தமானது. பல அறிஞர்களின் ஒத்துழைப்பால், பல நாள் உழைப்பால் தயார் செய்யப்பட்ட இந்நூல் தமிழ் மொழிக்கு முற்றிலும் ஒரு புதிய சாதனை; தமிழன்னைக்கு நிகரற்ற ஒரு நூதன ஆபரணம்; தமிழ் பயிலும் மாணவர்களுக்குக் கிடைத்தற்கரிய அறிவுக் களஞ்சியம்; நூல் நிலையங்களில் எல்லாப் பலரும் பார்த்துப் பயனுறும் வண்ணம் இன்றியமையாததாக இருக்க வேண்டிய இணையற்ற நூல்.

சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அரு முயற்சி காரணமாக இம் மாபெரும் இலக்கியத் தொண்டு, அறிவுத் துறையில் சிறந்த ஆராய்ச்சி வல்லுநர்களின் பேராதரவுடன் நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு விஷயத்துக்கும் கட்டுரை எழுதி உதவிய அறிஞர்களின் பெயர்களையும் அவர்கள் வகித்து வரும் பொறுப்பு வாய்ந்த பதவிகளையும் வரிசைக் கிரமமாக நூலின் முற்பகுதியில் கொடுத்திருக்கிறார்கள். அவற்றைக் கூர்ந்து பார்த்தால் இம் மாபெரும் முயற்சியின் மதிப்பு நன்கு விளங்கும். இம் முயற்சி இனிது கை கூட எத்தனை இலாகாக்களின் உதவி தேவையாயிருக்கின்றன என்பதற்கு இந் நூலில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் படங்களுக்கு அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் விஷயங்களிலிருந்து அறியலாம். புது டில்லி தொல் பொருள் இலாகா, சென்னை தொல் பொருள் இலாகா, சென்னை அரசாங்கச் செய்தி விளம்பர இலாகா, அமெரிக்க ஐக்கிய நாட்டுச் செய்தி இலாகா, சென்னை பிரிட்டிஷ் கவுன்ஸில், பம்பாய் இயற்கை விஞ்ஞானக் கழகம் ஆகியவற்றின் உதவியைப் பெறுவதில் உள்ள சிரமம், அவற்றைத் தொகுப்பதில் உள்ள சிரமம் எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

தமிழ் மொழிக்கு முற்றிலும் புதியதான இம்முயற்சி தமிழும் தமிழகமும் உள்ள வரையில் எல்லோருக்கும் பயன் அளிக்கும் கற்பகத் தரு போன்றது.

சாதாரணக் கதை, காவியங்களைப் படித்தல்போல், படிப்பதற்கு மாத்திரம் ஏற்பட்ட நூல் அல்ல இது. என்றென்றும் கைவிருப்பாக வைத்துப் பாதுகாக்க வேண்டிய அரிய நூல் இது. பிரசுரம்: கலைக் களஞ்சிய அலுவலகம், பல்கலைக் கழகக் கட்டடம், சென்னை-5. விலை ரூ. 25—0—0. கிடைக்குமிடம்:— ஓரியண்ட் லாங்மன்ஸ் லிமிடெட், 36—ஏ, மவுண்ட் ரோடு, சென்னை—2.

சூயஸ் யார் சொத்து?

இன்று உலகில் யுத்தம் கிளம்பி விடுமோ என்ற பீதியைச் சூயஸ் பிரச்னை கிளப்பி விட்டிருக்கிறது. வல்லரசுகள் சூயஸ் பிரச்னையை வைத்துச் சதுரங்கம் ஆடுகின்றன. இந்த நெருக்கடியான நிலைமையில் சூயஸ் பிரச்னையைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியமல்லவா? சூயஸ் பிரச்னைக்குக் காரணம், சூயஸ் கால்வாய் யாருக்குச் சொந்தம், வல்லரசுகளின் நோக்கம் முதலியவற்றை இந் நூல் தெள்ளத் தெளிவாக ஆராய்ந்திருக்கிறது. 'சூயஸ் விஷயத்தில் மேலைய நாடுகள் அனுஷ்டிக்கும் கொள்கை மகா மோசமானது. பிரிட்டிஷ் கொள்கை பச்சையான ஆக்கிரமிப்பு தவிர வேறில்லை'' என்ற ராஜாஜி அவர்களின் கருத்து இந் நூலின் அடிநாதமாக விளங்குகிறது.

எழுதியவர்: ஆர். கே. கண்ணன்; பிரசுரம்: ஜனசக்தி பிரசுராலயம், 73, பிராட்வே, சென்னை—1; விலை அணா 4.

மலைவாசல் (சரித்திர நாவல்)

பாரத தேசத்தின் பெருமையை உலகம் முழுவதும் அறிவிக்கும் பெருமை வாய்ந்தது இமயமலை. அந்த இமயத்தின் வடமேற்குக் கணவாய்களின் வழியாகப் பாரத நாட்டுக்கு வந்து கொடுமைகள் பல புரிந்த ஹூணர்கள் என்னும் நாடோடி இனத்தவரை ஆதாரமாகக் கொண்டு இந்நாவல் புனையப்பட்டிருக்கிறது. நோய் வாய்ப்பட்ட மன்னனது சங்கடமான நிலைமையாலும், உள்நாட்டுச் சதியாலும், வறுமையினாலும் நிலைகுலைந்து போன குப்த ராஜ்யத்தை ஹூணர்கள் விழுங்கிவிடப் பலவிதத்திலும் முயன்றனர். அஜித சந்திரன் என்னும் குப்த நாட்டு உப சேனாபதி தன் தியாகத்தினாலும், வீரத்தினாலும், புத்தி கூர்மையினாலும் பகைவர்களை முறியடித்து நாட்டைக் காப்பாற்றினான்.

சரித்திர ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட இக்கதையை ஸ்ரீ சாண்டில்யன் மிகவும் சுவாரஸ்யமாகப் புனைந்திருக்கிறார். சரித்திர காலத்துப் பாத்திரங்களோடு கதைக்குத் தேவையான மற்றும் பல பாத்திரங்களையும் சமத்காரமாகப் புனைந்து கதைக்கு மேலும் சுவையூட்டியிருக்கிறார். பாத்திரங்களின் தன்மைக்கேற்ப அவர் கையாண்டிருக்கும் சம்பாஷணை, நடை எத்தனை முறை படித்தாலும் அலுக்கவில்லை. ஆசிரியரது கதை சொல்லும் பாணியும், நிகழ்ச்சிகளின் விறுவிறுப்பான அமைப்பும் பாராட்டுக்குரியவை. காதல், அரசியல் சூழ்ச்சி, பிணக்கு, பிரிவு, வீரம், இரம், அன்பு முதலிய எல்லாம் பின்னிப் பிணைந்து இக் கதையை உருவாக்கியிருக்கின்றன.

இந்நூலின் சிறப்பை இமயத்துக்கு உயர்த்தி விடுகிறது, பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களின் அணிந்துரை. ஆசிரியர்: சாண்டில்யன்: பிரசுரம்: அமுதசுரபி பதிப்பகம், 20, கங்குராம செட்டி தெரு, சென்னை—1; விலை: ரூ. 6.



திம்மராயனுடைய திட்டம்



ராஜாஜி

அந்த வருஷத்தில் வேனிற் காலம் வந்ததும் பல ஊர்களில் பேய் நாய்கள் கடித்து அநேகம் பேர்கள் இறந்து விட்டார்கள் என்பதைக் கண்டு எச்சில் உண்டு தெருக்களில் வாழும் நாய்களை ஒழித்து விட உத்தரவு பிறந்தது.

நாய்களை அடித்துக் கொன்று, கச்சேரியில் கொண்டு வந்து காட்டி, ஆணாயிருந்தால் இரண்டணா, பெண்நாயாயிருந்தால் மூன்று அணாவாகப் பரிசு பெறலாம் என்று உத்தரவு பிறந்தது.

ஏழைகள், பிழைப்பில்லாதவர்கள் இவர்களுக்கு இது ஒரு ஆசைகாட்டியாகும் என்று தாசில்தார்களுக்கெல்லாம் தெரியப் படுத்தித் தண்டோரா போட்டார்கள்.

சில ஊர்களில் நாய்களைக் கொன்றார்கள். கொன்று இழுத்துப் போவதைத் தெருவில் நின்று கொண்டு குழந்தைகள் பார்ப்பார்கள். குழந்தைகளுக்கு இது பிடிக்கவில்லை. அவர்கள் கண்ணில ஜலம் வடியும். பெரியவர்கள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு அந்த விஷயத்தைப் பற்றிப் பேசாமல் வேறு ஏதேனும் எடுத்துக் கொண்டு பேசுவார்கள்.

அநேக ஊர்களில் யாரும் நாய்களை அடித்துக் கொல்ல முன் வரவில்லை. இரண்டு அணுவுக்கு யாராவது இந்தப் பாபத்தைக் கட்டிக் கொள்வார்களா?

சேலம் ஜில்லாவில் பேய்நாய்கள் உபத்திரவம் அதிகம். அதனால் அந்த ஜில்லாவின் கலெக்டர் இரண்டணாவுக்கு யாரும் வரவில்லை என்பதைக் கண்டு பரிசை உயர்த்தினர். நாய்ப்பரிசை ஆண் பெண் வித்தியாசமின்றி ஒரு ரூபாயாக்கினார்.

ஒரு ரூபாய் என்று விளம்பரமானதும் பழைய கோட்டை சேந்தி திம்மராயன்—கள்ளுக் கடைகளை ஏலத்தில் எடுத்துப் பணக்காரன் ஆனவன்—தன் ஆட்கள் நாலு பேர்களைக் கூப்பிட்டான்.

"அடே முனுசாமி! நான் சொல்லுவதைக் கேள். சர்க்கார் உத்தரவு ஆனபடியால் பாபம் இல்லை. நீ உனக்கு வேண்டியவர்களுக்குச் சொல்லி ஏற்பாடு செய். நாய் ஒன்றுக்கு எட்டணா வாங்கித் தருகிறேன். கச்சேரி வேலையெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றான்.

"அப்படியே!" என்றான் முனுசாமியும்.

மற்ற மூவர்களும் தங்கள் தங்கள் சேரிகளில் சொல்லி நாய் அடிப்பதற்கு ஆள் சேர்த்தார்கள்.

சேந்தி திம்ம ராயன் தாசில்தாரைக் கண்டு நூறு ரூபாய் முன் பணம் பெற்றுக் கொண்டான். ஒரு குப்பை வண்டியும் அவனுக்குத் தரப்பட்டது. தெருவில் இழுத்துக் கொண்டு போவது நன்றாக இல்லை, எல்லாரும் ஏசுகிறார்கள். வண்டியில் போட்டு ஓட்டிக் கொண்டு கச்சேரியில் காட்டிக் கணக்குத் தீர்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தான்.



தான் ஐம்பது ரூபாய் எடுத்துக் கொண்டான். மிகுதி ஐம்பது ரூபாயைத் தன் கங்காணிகளுக்குப் பிரித்துக் கொடுத்தான். கங்காணி, நாய் ஒன்றுக்கு ஐந்தணா என்று அடிக்கும் ஆட்களுக்குக் கொடுத்து விட்டு, மூன்றணா தான் எடுத்துக் கொள்வான். வேலை மும்முரமாக நடந்தது.

ஊரிலுள்ள நாய்கள் நாயடிக்கும் ஆட்களின் அடையாளம் கண்டு கொண்டன. தெருவில் அவர்கள் யாரேனும் தலை காட்டினால் பலமாகக் குரைக்கும். ஓடிப்போய்ப் புழக்கடைகளில் ஒளிந்து கொள்ளும்.

ஆயினும் ஐந்தணாவின் சக்தி பெருஞ் சக்தி. முயற்சியும் சாமர்த்தியமும் நாயடிக்க முன் வந்தவர்கள் காட்டினார்கள். இம்மராயனுடைய ஏற்பாடு வெற்றிகரமாக நிறைவேறி வந்தது.

பஞ்சாங்கம் கிட்டய்யர் வீட்டில் புழக்கடையில் ஒரு தெரு நாய் குட்டி போட்டது. குட்டிகளைப் போட்டு அங்கே வைத்து எப்படியோ காப்பாற்றி வந்தது. இங்குமங்கும் கிடைக்கும் எச்சில் இலைகளை நக்கிப் பிழைத்து, குட்டிகளுக்கும் பால் கொடுத்து வந்தது. கிட்டய்யருடைய குழந்தைகளுக்கு நாய்க் குட்டிகளைக் கண்டு வெகு சந்தோஷம். தாய் நாய் வந்துபால் கொடுப்பதைப் பார்த்துக் கொண்டு ஆனந்தம் அடைவார்கள். ஒரு நாள் அந்த நாய் புழக்கடைக்குள் புகுந்து குட்டிகளுக்குப் பால் கொடுத்து விட்டு அவசரமாக வெளியே தன் தொங்கும் மடியை ஆட்டிக் கொண்டு ஓடிற்று. வாசலண்டை வந்ததும் தலைமேல் ஓங்கி அடித்து விட்டான், தடியை வைத்துக் கொண்டு பதுங்கியிருந்த தாசரி, நாயடிக்கும் ஆட்களில் இவன் ஒருவன்.

ஒரு சத்தமுமின்றி நாய் அப்படியே தரையில் உயிரற்று விழுந்தது. ஐந்தணா வந்து விட்டது தாசரிக்கு. அவன் எஜமானன கங்காணி மூன்று அணாவும் சேர்த்து இம்மராயன் அரை ரூபாயும் அந்த நாயின் மேல் சம்பாதித்து விட்டார்கள். ஒரே அடியில் சம்பாதித்து விட்டார்கள்!

"பாவி!" என்றாள் வாசலில் நின்ற கிட்டய்யருடைய மனைவி. பக்கத்தில் அவள் குழந்தை அம்மாவின் புடவை நுனியைப் பிடித்துக் கொண்டு நின்றாள். எதிர் வீட்டுக் கூரையின் மேல் ஒரு காக்கை உட்கார்ந்து "காவ்! காவ்!" என்று கத்திற்று. அதன் பொருளும் அதுவே, "ஐயோ பாவம், பாவம்!" என்று.

ராக்ஷசர்களைப் பற்றிப் படிக்கிறோம். பறவைகளும் பிராணிகளும் நம்மை எல்லாம் ராக்ஷசர்களாகத்தான் இப்போதும் எண்ணி வருகின்றனவோ, என்னவோ!



அபின அந்தகம்

17. ஏன் இந்த பயம்?

விஜயரங்கன் தளர்ந்த குரலில் அந்தப் புதிய இடத்தைப் பற்றியும், அருகில் இருப்பவர்கள் யார் என்பதையும் விசாரித்தானல்லவா? அதைக் கேட்டு அவன் அருகிலிருந்த மீனாச்சி, ''வீணாக உடம்பை அலட்டிக் கொள்ளாதே. நாங்களெல்லாம் உன்னுடைய சிநேகிதர்கள் தான். கொஞ்சம் வாயைத் திற. இந்த மருந்தைச் சாப்பிடு'' என்று சொல்லிப் பையிலிருந்து வேறொரு புட்டியை எடுத்தாள். அவன் மெதுவாக வாயைத் திறந்து அவள் கொடுத்த மருந்தை விழுங்கினான். மீனாச்சி அந்த மருந்துப் புட்டியை மூடி மறுபடியும் பையில் வைத்தாள்.

விஜய ரங்கனுக்குத் தன் எதிரில் இருக்கும் அவர்கள் யாரென்று தெரிந்து கொள்வது கடினமாக இருந்தது. அவன் மிகுந்த வேதனையோடு ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே, ''என்னுடைய தலை ரொம்பக் கனமாயிருக்கிறது. எனக்கு என்ன? என்ன நடந்ததென்றே எனக்கும் புரியவில்லையே?'' என்றான் மெல்லிய குரலில்.

''நீயாக ஏதேனும் வேதனைப் படாதே. மனத்தில் தைரியத்தை ஏற்படுத்திக் கொள். உன்னை யாரோ தலையில் அடித்துக் கொல்லப் பார்த்தார்கள். நல்ல வேளை பிழைத்தாய். இனிமேல் கவலைப்படாதே'' என்றாள் மீனாச்சி.

''என்னைக் கொல்லப் பார்த்தார்களா...?'' என்றான் விஜய



ரங்கன் அளவற்ற வியப்போடு. அவன் குரலில் நடுக்கம் தெரிந்தது.

''ஆமாம்! கவலைப் படாதே. பிழைத்து விட்டாய்'' என்றாள் மீனாச்சி.

அவன் கண்களை மூடிக் கொண்டான். மீனாச்சி கண நேரம் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு அவன் நெற்றிப் பொட்டிலும் மூக்கிலும் கையை வைத்துப் பார்த்தாள். பிறகு அவள் மன நிம்மதி அடைந்தவள் போல், ''நல்ல உறக்கம். நாம் போகலாம்...'' என்று எழுந்து நடந்தாள். கதிரனும் மருதையும் பின்தொடர்ந்தனர்.



அவர்கள் மூவரும் அந்த வீட்டுத் தாழ்வாரத்துக்கு வந்து அமர்ந்தனர். மீனாச்சி ஒரு ஆழ்ந்த பெருமூச்சுக்குப் பின், ''நல்ல வேளை! அவன் பிழைத்து விட்டான். ஆனால் அவன் நன்றாகக் குணமாக இன்னும் பத்து நாட்களாகும். எப்படியோ அவனை உயிரோடு வைத்திருந்தால் தான் நமக்கு லாபம்'' என்றாள்.

''ஆமாம்! அது எனக்கும் தெரியும்'' என்றான் கதிரன்.

''அவனுக்கு என்ன நடந்தது என்று கூடத் தெரியவில்லையே?'' என்றான் மருதை திகைப்புடன்.

''ஆமாம்! அவன் இப்பொழுது, தான் யார், தன் பெயர் என்ன என்பதெல்லாம் கூட மறந்திருப்பான். நீங்கள் அடித்த அடி அப்படி அவன் மூளையைக் குழப்பி இருக்கிறது. நல்லவேளை! சரியான மனிதனைக் கொண்டு வந்தீர்களே, அதுதான் எனக்குச் சந்தோஷம். அவன் சட்டைப் பையிலிருந்து எடுத்த காகிதங்களையெல்லாம் நாம் பத்திரமாக வைத்திருக்கவேணும். அவைகளை வைத்துக் கொண்டுதான் நாம் நினைத்ததைச் சாதித்துக் கொள்ள முடியும். அவனையும் ரொம்ப ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேணும். அவனுக்கு மணிக்கு ஒரு தடவை மருந்து கொடுக்கணும். அவனுக்கு மருந்து கொடுத்து அவனைப் பார்த்துக் கொள்வதற்கு அஞ்சுகம் தான் சரி'' என்றாள் மீனாச்சி.

''ஆமாம்! அதுதான் சரி. அவளுக்கும் ஒரு வேலை வேண்டாமா?'' என்று ஒத்துப் பாடினான் மருதை.

''ரொம்ப நல்ல யோசனை. அவளை இப்பொழுதே கூப்பிட்டு அவனைப் பார்த்துக் கொள்ள ஏற்பாடு செய்'' என்றான் கதிரன்.

மீனாட்சி உரத்தகுரலில், ''அஞ்சுகம்! அஞ்சுகம்!'' என்று இரண்டு தடவைகள் கூப்பிட்டாள்.

இவ்வளவு நேரமும் தன் அறைவாசற் படிக்குச் சமீபமாக இருட்டில் நின்று வெளியே நடக்கும் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த அஞ்சுகம் அப்பொழுது தான் தூங்கி எழுந்தவள் போல் கண்களைத் துடைத்துக் கொண்டு தாழ்வாரத்துக்கு வந்து ''என்ன, அம்மா..?'' என்று கேட்டாள்.

மீனாச்சி துணிப் பையிலிருந்து ஒரு மருந்துப் புட்டியை எடுத்துஅஞ்சுகத்திடம் கொடுத்து, ''அதோ அந்த அறையில் ஒருவன் படுத்துக் கிடக்கிறான். பாவம்! அவன் எங்கோ தலையில் நல்ல காயம்பட்டுப்பிரக்ஞை இல்லாமல் கிடந்தானாம். இவங்க அவனை இங்கே தூக்கிக் கொண்டு வந்திருக்கிறாங்க. நல்ல வேளை! நான் கொடுத்த மருந்திலே பிழைத்து விட்டான். இனிமேல் நீதான் அவனைப் பார்த்துக்கணும். அவன் உடம்பு பூரணமாகக் குணமாக இன்னும் கொஞ்ச நாட்கள் ஆகும். நீ அவன் படுத்திருக்கும் அறையிலேயே இருந்துகொண்டு அவனுக்குக் காலாகாலத்தில் மருந்தைக் கொடுத்து வேண்டிய உதவிகளையெல்லாம் செய்யணும்'' என்றாள். பிறகு அஞ்சுகத்தை அழைத்துக்கொண்டு விஜயரங்கன் படுத்திருக்கும் அறைக்குச் சென்றாள்.


''இதோ பார்! இவனை நீதான் கவனித்துக் கொள்ளவேணும். மணிக்கொரு தரம் தேக்கரண்டி அளவு இந்த மருந்தைக் கொடு. வேண்டும்போது தண்ணீர் கொடு. இவனை விட்டு நகராதே'' என்று எச்சரிக்கையாகச் சொல்லி அவளை அந்த அறையிலேயே விட்டு விட்டுச் சென்றாள் மீனாச்சி.

அஞ்சுகத்துக்கு எல்லாம் விநோதமாகத்தான் இருந்தது. அவன் யார்? அவனை இங்கு எதற்காகக் கொண்டு வந்தார்கள்? இவைகளெல்லாம் அவளுக்கு விளங்காத புதிராகவே இருந்தன. எப்

நாளைய

துணிகள்

இன்றைய கதிர்களில்



தி மபத்லால் பைன்

ஸ்பின்னிங் & மானுபாக்சரிங் கம். லிட்.

நவஸாரி.

Graphic MG 98



அகராதி பார்க்கப் பொருள் விளங்கும்
டெக் உபயோகிக்கப்
பல் விளங்கும்!
சுத்தமான
நைலான்
முடிகள்
அழகிய
பிளாஸ்டிக்
பிடி
ஜான்ஸன்
அண்ட்
ஜான்ஸன்
TEK. 3655

படியோ அவள் மீனுச்சியைப் பூரணமாக நம்பி விட்டாள். மீனுச்சியும் அஞ்சுகத்தை நம்பித்தானே அந்த மனிதனை அவள் பாதுகாப்பில் ஒப்படைத்திருக்கிறுள்.

அங்கிருந்த மனிதருக்கு நேரம் தவருமல் மருந்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதால் அவள் எப்பொழுதும் கண் விழிப்போடு இருக்க வேண்டியிருந்தது.

அந்நேரத்தில் அந்த நடுநிசி வேளை மிகவும் பயங்கரமாகத்தான் இருந்தது. காடுகளில் வீசும் காற்றில் பெரிய மரங்கள் அசைவதினுல் ஏற்படும் 'ஹோ' வென்ற சப்தம், தூரத்தில் நரிகள் ஊளையிடும் சத்தம், அந்தப் பழைய கட்டடங்களில் நெடு நாட்களாகக் குடியேறி இருக்கும் ஆந்தைகளின் அலறல் — இவைகளெல்லாம் அவள் மனத்துக்குச் சிறிது பீதியை அளித்தன. பகலெல்லாம் மனத்துக்குச் சந்தோஷத்தையும் சாந்தியையும் கொடுக்கும் அந்த இடம் இரவு வேளையில் எவ்வளவு பயங்கரமாக மாறிவிடுகிறது என்பதை அவள் கண் விழித்திருந்து பார்த்த போதுதான் உணர முடிந்தது.

உடல் நலம் சரியின்றி அங்கே படுத்து உறங்கும் மனிதனுக்கு மீனுச்சி சொல்லியபடி மருந்து கொடுக்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டதாக உணர்ந்தாள். அங்கு கடியாரமா இருக்கிறது. மணிக்கணக்காகப் பார்த்து மருந்து கொடுக்க? ஒரு மணி நேரம் சென்றிருக்குமென்று அவளுக்குத் தோன்றியது. அவள் மெதுவாக அந்த மனிதரின் படுக்கைக்குச் சமீபமாக நெருங்கி உட்கார்ந்து அவன் முகத்தை உற்று நோக்கினுள். அவன் ஆழ்ந்த நித்திரையில் இருந்தான். அந்த வேளையில் அவனைத் தொட்டு எழுப்புவது அவளுக்குக் கூச்சமாக இருந்தது. ஆனுல் என்ன செய்வது? அவள் தன்னை ஒருவிதமாகச் சுதாரித்துக் கொண்டு மெதுவாக அவன் நெற்றியைத் தொட்டாள். அவன் கண் விழிக்கவில்லை. மெதுவாக அவன் கன்னத்தைத் தொட்டு அசைத்தாள். அவன் மெள்ளக் கண் விழித்துப் பார்த்தான்.

அவள் சட்டென்று புட்டியிலிருந்த மருந்தைத் தேக்கரண்டியில் வார்த்து, ''இதைச் சாப்பிடுங்கள்'' என்று சொல்லி அவன் வாய்க்குச் சமீபமாகக் கொண்டு வந்தாள். அந்த மருந்தை விழுங்கினுன். அப்பொழுது அவன் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தானே தவிர எவ்வித வார்த்தையும் பேசவில்லை. அவன் கண்களில் அப்பொழுது ஒரு தெளிவும் ஆர்வமும் ஏற்பட்டன. அவை அவன் மனத்தில் ஆறுதலும் சந்தோஷமும் ஏற்பட்டதற்கு அறிகுறியாக இருந்தன. அந்தப் பெண்ணுக்கும் தனக்கும் ஏதோ நெருங்கிய சம்பந்தம் இருப்பதுபோன்ற உணர்ச்சிதான் அப்பொழுது அவன் மனத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். அப்பொழுது அஞ்சுகத்தின் மனத்திலும், அந்த மனிதனுக்கும் தனக்கும் ஏதோ நெருங்கிய சம்பந்தம் இருப்பதுபோன்ற உணர்ச்சி தோன்றியது.



நிர்மலாவைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவலில் குறத்தி மீனுச்சி மேகராஜபுரத்துக்கு வந்தாள். அவள் எப்பொழுது வீட்டை விட்டு வெளியே வருவாள் என்று தோட்டத்துக்கு வெளியே மறைவான இடத்தில் நின்று கொண்டு அந்த வீட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் அதிக நேரம் அப்படிக் காத்திருக்கவில்லை. நிர்மலா வாசற்பக்கம் வந்தபொழுது மீனுச்சி மறைவிலிருந்து வெளியே வந்து சைகை காட்டிக் கூப்பிட்டாள். நிர்மலாவும் அவளது வரவைத்தானே ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள்? அவளை அந்த வீட்டின் வாசற்பக்கத்து அறைக்குள்

அழைத்துக் கொண்டு போய் அந்த அறைக் கதவையும் சாத்திக்கொண்டு, ''என்ன? ஏதேனும் விசேஷம் உண்டா? காரியத்தை நிறைவேற்றி விட்டாயா?'' என்று கேட்டாள் மிகத் துடிப்புடன்.

''எல்லாம் முடித்து விட்டோம். அவனைப் பற்றிய கவலையே இனிமேல் உன்னை விட்டதம்மா....'' என்றான்.

நிர்மலா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள், தன்னுடைய மனப் பதற்றத்தைத் தானே அடக்கிக் கொள்கிறவள் போல். அப்பொழுது அந்தக் காரியம் எவ்வளவு முக்கியமானதென்று மீனாச்சியிடம் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. அவள் ஏதோ ஒரு சாதாரண விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்கிறவள் போல் நடிக்கத் தொடங்கினாள். நிர்மலாவின் அலட்சியமான தன்மை மீனாச்சிக்குச் சிறிது ஏமாற்றத்தைக் கொடுத்தது. நிர்மலா தன்னை ஒரு பயித்தியக்காரி என்று நினைக்கிறாளோ என்ற சந்தேகம்கூட அவனுக்கு ஏற்பட்டது.

நிர்மலா எங்கோ கவனம் வைத்தவள் போல், ''ஹும். அப்படின்னா அந்த




மனிதன் இறந்து போய்விட்டான் என்று சொல்லு...? போய்த் தொலைகிறான்'' என்று கூறினாள்.

காரியம் நிறைவேறுவதற்கு முன்னால் மிகத் துடிப்பும் முக்கியத்துவமும் காட்டிய நிர்மலா காரியம் நடந்தபின் இவ்வளவு அலட்சியம் காட்டுவது மீனாச்சிக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. அவன் தன் ஆத்திரத்தை ஒருவிதமாக அடக்கிக்கொண்டு, ''அவனைத் தீர்த்துக் கட்டியாகிவிட்டது. இது சாதாரணக் காரியம் என்று நினைத்துவிடாதே! அவனால் எந்த வகையிலும் இனிமேல் உனக்கு ஆபத்து இருக்காது. அதைத் தானே நீ விரும்பினாய்....? என்னை பயன்கள் சாதாரணமானவங்க இல்லை. இந்த மாதிரிக் காரியங்களை ரொம்பச் சாமர்த்தியமாகச் செய்து முடிப்பாங்க. நீ கேட்டுக் கொண்டபடி என் காரியம் நிறைவேறி விட்டது; அவன் கதை முடிந்து விட்டது. இனி நீ எனக்குக் கொடுப்பதாகச் சொன்ன நகைகளையும் பாக்கிப் பணத்தையும் உடனே கொடுத்துவிட வேண்டியது தான்'' என்றான்.

''அவனால் எனக்குப் பெரிய ஆபத்தோ, இடையூறோ எதுவும் இல்லை. அவனைக் கொல்ல வேண்டு மென்கிற அவசியம் கூட இல்லை. இருந்தாலும் அவனை ஏன் விட்டு வைக்கணும் என்று நினைத்தேன்...அவ்வளவுதான். நான் சொல்லியபடி உனக்கு அந்த நகைகளை எல்லாம் கொடுத்து விடுகிறேன். ஆனால் எனக்கு அவன் இறந்து விட்டான் என்பதற்குத் தக்க ஆதாரம் வேண்டும். அதற்கு என்ன அத்தாட்சி வைத்திருக்கிறாய்?'' என்று கேட்டாள் நிர்மலா.

''ஆதாரமோ அத்தாட்சியோ எல்லாம் இருக்குது...'' என்று சொல்லித் தன் சுருக்குப் பையிலிருந்த சில காகிதங்கள், ஒரு மோதிரம், கைக்கடிகாரம், இவைகளை எடுத்துக் காட்டினான். அவைகளை யெல்லாம் நிர்மலா வாங்கி ஒவ்வொன்றாகப் பார்த்துவிட்டு, ''ஹும். இவைகளை வைத்துக் கொண்டுதானே நான் அவன் இறந்து விட்டதாக நம்ப வேண்டும்? நிச்சயமாக அவன் இறந்து போய் விட்டா னென்பது உண்மை தானே..,?'' என்றாள் மறுபடியும் ஏதோ சம்சயமும் சந்தேகமும் கொண்டவள் போல்.

நிர்மலாவின் வார்த்தைகளும், அலட்சியமான போக்கும் மீனாச்சியின் கோபத்தைக்கிளறிவிட்டன. ''நீ பெரிய சாகசக்காரியாய் இருப்பாய் போல் இருக்கே. உன்னுடைய சாகசத்தால் அபலைப் பெண்ணையும் அசட்டு ஆண் பிள்ளையையும் வேண்டுமானால் ஏமாற்றலாம். இந்தக் குறத்தியிடம் அதெல்லாம் முடியாது. இந்தக் குறச்சாதி எப்பொழுதும் பொய் சொல்லாது. எங்களுக்குத் தெரியாத ரகசியமும் இல்லை. இந்தமாதிரி பெரிய இடத்திலே கௌரவமாக இருப்பது போல இருந்து உன்னைப் போல உள்ளவங்க செய்கிற திருட்டுப் புரட்டு, கொலை, கொள்ளை யெல்லாம் தான் ஏழைகள் தலையிலே வந்து விடிகின்றன. உன்னுடைய நன்மைக்காகப் பிறரை வைத்துத் துணிகரமான காரியங்க ளெல்லாம் செய்யச் சொல்லிக் குற்றத்திலிருந்து தப்பிப் பட்டுக் கொள்ளாமல் போயிடலாம்னு நீ நினைக்கிறாய்? இதற்கெல்லாம் ஏமாந்து போகிறவங்க வேறு, நாங்கள் இல்லை. அது போகட்டும்! நீ செய்யச் சொன்னதைச் செய்து விட்டு ஆதாரத்தோடு வந்திருக்கிறேன். இனி மேல் நீ கொடுக்கிறேன் என்று சொன்னதை மரியாதையோடு கொடுத்து விட வேண்டியதுதான்'' என்றான் மீனாச்சி மிகுந்த கடுமையோடு.


விரைவில் குணமளிக்கும்
ஹானியற்ற
நிவாரணி!
மூலநோய், ரத்தப்போக்கு நோய்கள், ரத்தக்கடுப்பு, வெடிப்புகள், பிளவைகள், எரிச்சலூட்டும் ஆணி முதலிய நோய்களினின்றும் ஹெடன்ஸா மெழுகு மிக மிருதுவாகவும் துரிதமாகவும் நிவாரணம் தரும்.
ஹெடன்ஸா
ஜெர்மனியில் தயாரிக்கப் பட்டது
எங்கும் கிடைக்கும்
Hadensa
DCZ-1
ஸ்டாக்கிஸ்டுகள்: நாதாக் கம்பெனி, சென்னை-3 : அமர்சந்த் சோபாசந்த், சென்னை-3


தாமரையின் அழகை நீங்களும் பெறலாம்..
சோர்த்தியாயும், மிருதுவாயும், பட்டின் மென்மையுடன் கூடிய எழிலைப் பெற இந்திய மங்கையர்கள் ஆஷா முகப் பவுடரை உபயோகிக்கிறார்கள்.
உங்கள் விலைக்குகந்த
உங்களுக்குரிய பவுடர்
Asha
Asha
ஆஷா முகப் பவுடர்
விநியோகஸ்தர்கள்:
ஜுபப்பிசே மானேர்ஸ் அண்ட் கோ ப்ரைவேட் லிட்
பம்பாய்—கல்கத்தா—டில்லி—மதராஸ்.

நிர்மலா மீனாக்ஷியை ஏமாற்ற முடியாது என்று தெரிந்து கொண்டாள். இந்தச் சமயத்தில் அவளை விரோதித்துக் கொண்டால் ஏதேனும் ஆபத்து நேரலாமல்லவா? அந்தக் குறத்தியிடம் தன்னிடமுள்ள விலையுயர்ந்த நகைகள் அவ்வளவையும் கொடுத்துவிட அவளுக்கு மனம் இல்லை. ''சரி! நீ இங்கேயே இரு!'' என்று சொல்லி விட்டு நிர்மலா அந்த அறையை விட்டு வெளியே சென்றாள்.

மீனாக்ஷி அவளுடைய வருகையை எதிர்நோக்கி இருந்தாள். அவளுக்கு நிர்மலாவிடம் பூரணமான நம்பிக்கை ஏற்படவில்லை. 'என்னையா ஏமாற்றப் பார்க்கிறாள். இவளை இதோடு விட்டேனா, 'பார்?' என்று அவள் கருவிக் கொண்டிருந்தாள்.

சில நிமிட நேரத்தில் நிர்மலா ஒரு சிறு துணி மூட்டையோடு வந்தாள். அவள் அந்தக் குறத்தியின் கையில் அந்தத் துணி மூட்டையையும், நூறு ரூபாய் நோட்டையும் கொடுத்து விட்டு, ''இதோடு உனக்கும் எனக்குமுள்ள தொடர்பு தீர்ந்தது'' என்றாள்.

மீனாக்ஷி அந்தத் துணி மூட்டையை அவசரமாகப் பிரித்துப் பார்த்தாள். அதில் சில ஆபரணங்கள் இருந்தன. அவள் மறுபடியும் அந்த மூட்டையை அவசரம் அவசரமாகக் கட்டித் தன் புடவைத் தலைப்பில் வைத்து மூடிக் கொண்டாள். பிறகு, ''சரி! இவ்வளவு தானா...?'' என்றாள்.

''இவ்வளவுதான்... நான் உன்னை ஏமாற்றி விட்டேன் என்று நினைக்கிறாயா...?'' என்றாள் நிர்மலா.

''நீ என்னை ஏமாற்ற முடியாது. நானும் ஏமாறக் கூடியவளல்ல'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து வேகமாகப் புறப்பட்டாள் மீனாக்ஷி.

மீனாக்ஷி தன்னுடைய கண் பார்வையிலிருந்து மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்து விட்டு ஆழ்ந்த சிந்தனையோடு தன் அறையில் போய் உட்கார்ந்தாள் நிர்மலா.

பார்வதியம்மாள் அந்தச் சமயம் ஆழ்ந்த நித்திரையில் இருந்ததால் நிர்மலாவோடு பேசுவதற்காவது சிறிது ஒய்வு கிடைத்ததே என்று எண்ணிக் 'கள்ளக் காதலே — நல்லதாகுமே' என்று தானே சினிமாவுக்காகப் புதிய மெட்டில் அமைத்த பாடலைப் பாடிக் கொண்டு வந்தான் சொக்கன்.

''எப்பொழுதும் பாட்டும் கூத்தும் தானா? இப்பொழுது நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்று உங்களுக்குப் புரியவில்லையே...?'' என்றாள் நிர்மலா சிறிது ஆத்திரத்துடன்.

''புரிகிறது, நிர்மலா! இப்பொழுது நாம் இருக்கும் நிலையை நினைத்தாலே நடுக்கமாய் இருக்கிறது. அதற்காகத்தான் இப்படி ஏதாவது பாட்டுக் கட்டு பாடிக் கொண்டிருந்தால்.....'' என்று இழுத்தான் சொக்கன்.

''ஊர் தீப் பிடித்து எரியும்போது பிடில் வாசித்துக் கொண்டிருந்த கதை போலிருக்கிறது உங்கள் பாட்டு. இந்தப் பாட்டு, வசனம் எல்லாவற்றையும் சினிமா எடுத்துத் தொலையும்போது வைத்துக் கொள்ளக் கூடாதா? அந்தக் கிழவி எல்லாவற்றையும் உங்கள் பேரில் உயில் எழுதி வைக்கத் தயாராய் இருக்கிறாளா? இதைத் தெரிந்து கொண்டீர்களா..?'' என்று கேட்டாள் நிர்மலா.

சொக்கன் சிரித்துக் கொண்டே, ''அதைத் தெரிந்து கொள்ளாமல் இருப்



பேனா? அவள் எல்லாவற்றையும் என் பெயரில் — அதாவது விஜயரங்கதுரை பெயரில்-எழுதி வைக்க எப்பொழுதுமே தயார். ஆனால் நாமும் யோசிக்க வேண்டியது இருக்கிறதல்லவா? உண்மையான விஜயரங்கன் என்று ஒருவன் உயிரோடு இருக்கும்வரையில் இந்தச் சொக்கன் என்கிற விஜயரங்கன் என்ன செய்ய முடியும்? உண்மையான விஜயரங்கன் திரும்பி வந்தால் உயில் என்ன செய்யும்? உயிலில் சொக்கன் என்கிற விஜயரங்கன் என்று கண்டு எழுதினால் நல்லதுதான். அப்படி எழுத முடியுமா என்பதுதான் கேள்வி. சினிமா வசனமாக இருந்தால் ஏதாவது எழுதி விடலாம். ஆனால் இது உயில் அல்லவா?'' என்றான்.

நிர்மலா அவனை ஏளனமாகப் பார்த்துவிட்டு, ''உண்மையான விஜயரங்கனைப் பற்றி நீங்கள் இனிமேல் நினைக்க வேண்டிய அவசியமே இல்லை. நீங்கள்தான் விஜயரங்கன்!'' என்றாள்.

அவளுடைய வார்த்தைகளில் ஏதோ உள்ளர்த்தம் இருப்பது போல் அவனுக்குத் தோன்றியது. அவன் சிறிது திகைப்படைந்தவன் போல் ''நீ சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லையே? அவனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டதா?'' என்றான் பதற்றத்துடன்.

அவள் அவனை விஷமத்தனத்தோடு பார்த்துக்கொண்டே, ''அதையெல்லாம் உங்களுக்கு விவரமாகச் சொல்ல முடியாது. நான் ஒரே ஒரு வார்த்தைதான் உங்களுக்குச் சொல்ல முடியும். இப்பொழுது இரண்டு விஜயரங்கன் இல்லை. ஒரே விஜயரங்கன்தான். அது நீங்கள்தான். உங்களைத் தவிர இந்தச் சொத்தில் வேறு ஒருவனுக்கும் இப்பொழுது பாத்தியமில்லை. இனிமேல் உயில் எழுத வேண்டியதுதான் பாக்கி'' என்றாள்.

நிர்மலா எவ்வளவு அமைதியோடும் சர்தாரணமாகவும் இந்த வார்த்தைகளைச் சொல்லி இருந்தாலும் சொக்கனுக்கு அது குடல் நடுக்கம் கொள்ளச் செய்வதாய்த் தானிருந்தது.

''நான் இதை விரும்பவில்லை. நான் உருவத்தில் விஜயரங்கனை ஒத்திருப்பதால் ஏதோ சுலபமாக இந்தச் சொத்துக்களை அடைந்து விடலாம் என்று சொன்னாய். போகட்டும். வருகிறதை ஏன் விட வேண்டும் என்று நீ சொல்லுகிறபடியெல்லாம் நடித்தேன். ஆனால் அதற்காகக் கொடூரமான காரியங்களைச் செய்யவேண்டியிருக்கும் என்று நான் நினைக்கவேயில்லை. நீ எவ்வளவு தைரியமாக ஒரு கொலையைப் பற்றிப் பேசுகிறாய்? அப்படி ஏதேனும் நடந்திருந்தால் அது நமக்குப் பெரிய ஆபத்தாகத்தான் முடியும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்'' என்றான்.

'கொலை' என்றவே சொக்கன் நடுங்குகிறான், தன்னுடைய நோக்கத்துக்கு நேர்மாறாகப் பேசுகிறான் என்பதை ஆரம்பத்திலிருந்தே நிர்மலா உணர்ந்திருந்தாள். தன்னுடைய காரியங்களுக்கு உதவாத அவனைப் பற்றி அவள் யோசித்து ஒரு முடிவு கட்டத்தான் வேண்டியிருந்தது. அவளுடைய காரியங்கள் நிறைவேறியபின் அவனை எப்படி உதறித்தள்ள முடியும் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் அவளுக்கு அவனுடைய உதவி வேண்டியிருந்தது. அப்பொழுது அவனை உதறிவிட்டால் அவள் எடுத்துக் கொண்ட முயற்சியெல்லாமல்லவா வீணாகிவிடும்? அடிக்கடி அவன் மனத்தைச் சாந்திசெய்வதற்காக உபயோகிக்கும் மோகனாஸ்திரத்துக்கு அவள் தவமா செய்ய வேண்டும்? அவள் சொக்கனின் அருகில் மெதுவாக வந்து, ''நீங்கள் சினிமாவில் கூடக் கொலை செய்வது போல் நடிக்கப் பயப்படுவீர்கள் போலிருக்கிறதே?'' என்றாள் கொஞ்சுவது போல்.

''ஆமாம். எனக்குத் திருட்டுவரையில்தான் போகத் தெரியும். கொலை! இதை நினைத்தாலே என் குடல் நடுங்குகிறது. எனக்குக் கொலைப் படம், கொலைக் கதை, கொலை வசனம் அல்லது வசனக் கொலை எதுவுமே பிடிக்காது. நான் எடுக்கப்போகும் படமெல்லாம் திருட்டுப் படம்தான். திருட்டுக் கதை, திருட்டு வசனம், திருட்டுப் பாட்டு—இப்படித்தான்'' என்றான்.

''நீங்களெல்லாம் சினிமாப் படம் எடுப்பதென்று ஆரம்பித்தால் வேறு எப்படி இருக்கும்...?'' என்று சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டு, ''நம்முடைய திட்டங்கள் குலைந்தால் நீங்கள் எப்படிப் படம் எடுக்க முடியும்? உங்கள் கதை, வசனம், பாட்டு எல்லாம் வீணாகப் போக வேண்டியதுதான். ஒரு கொலைக்கு இப்படிப் பயந்து சாகிறீர்களே! உங்களுக்காக நான் எத்தனை பெரிய ஆபத்துக்களையெல்லாம் ஏற்கத் தயாராயிருக்கிறேன்! நீங்கள் நடுங்குகிறீர்கள். இப்பொழுது நீங்கள் விஜயரங்கனாக நடிப்பதேகூட ஒரு குற்றம் தானே? உண்மை வெளிப்படுமானால் நான் வெகு சுலபமாகத் தப்பித்துக் கொண்டு விடலாம். நீங்கள்தான் ஆபத்தில் சிக்கிக் கொள்வீர்கள். உங்களுடைய வார்த்தையைவிட என் வார்த்தையை உலகம் நம்பும். ஆனால் அப்படி நான் செய்தேனானால், நம்முடைய நேசம் - காதல் எல்லாம் என்ன ஆவது? எனக்குக் காசு பெரிதல்ல; காதல்தான் பெரிது. நான் எந்த வழியிலும் உங்களை இழக்கப் பிரியப் படவில்லை. நாம் நம்பிக்கை இழக்காமலும், பலவீனமடையாமலும், எதிலும் சிக்கிக் கொள்ளாமலும் நிம்மதியாக வாழ வழி உண்டு. நம்முடைய நன்மைக்காக, நான் எதைச் செய்கிறேனோ அதற்கு உடன்பாடாக இருங்கள்..'' என்றாள் நிர்மலா கொஞ்சும் பார்வையில்.

அவளுடைய மோகப் பார்வையில் உணர்ச்சிப் பரவசனாகிவிட்ட சொக்கன், ''நிர்மலா! நான் உன் வார்த்தையைத் தட்டவே மாட்டேன். என் உயிர், உடல், உள்ளம் எல்லாவற்றையும் உன்னிடம் ஒப்படைத்து விட்ட பின் உன்னை மீறி நான் என்ன செய்துவிட முடியும்?'' என்றான்

(தொடரும்)

இப்பொழுது

ஈனோ கவர்ச்சிகரமான

புதுவித பாட்டிலில்

கிடைக்கிறது



- மோசடியிலிருந்து பாதுகாப்பு
(சீல் உடைந்திருந்தால் வாங்காதீர்கள்)
- பாட்டில் சுத்தி மூடப்படவில்லை
(வாங்கும் பொருளைக் காணமுடிகிறது)
- பாட்டிலில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது
(இதனால் புதுமை நீடித்திருக்கிறது)

தளதளக்கும்
ஈனோ
வயிற்றுக்
கோளாறுகளிலிருந்து
எட்டே விநாடிகளில்
நிவாரணமளிக்கிறது!

இன்றே ஒரு பாட்டில்

ஈனோ 'ப்ரூட் ஸால்ட்' வாங்குங்கள்!

'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகள்

ENO. 3663 (A) Tamil



யோக சிகிச்சை

சுந்தரம்

11. பாதுகாப்பு உணவு

சென்ற இதழில் சீர்கெட்ட உணவை விளக்கிச் சித்திரம் வரையப் பட்டிருந்தது. இந்தச் சித்திரத்தை நம் முன் வைத்துக் கொண்டு ஆராய்வதே விளக்கத்தைத் தெளிவாக்கும். இது தனிப்பட்ட உணவு ஆராய்ச்சியாக இருந்தால், இன்னும் எவ்வளவோ அவசியமான விஷயங்களைக் குறிக்க இடமுண்டு. ஆனால் டி. பி.க்கு நெருங்கிய கருத்துக்களை மட்டுமே நாம் எழுத முடியும். வயது, தொழில், ஆரோக்கிய நிலை, நோய்நிலை என்ற தொகுதிகளுக்குத் தகுந்தபடி உணவின் அளவு மாறவேண்டும். ஆனால் இங்கு டி. பி.யைத் தடுக்கவும், டி. பி. யைப் போக்கவும், எப்படி நமது தினசரி உணவு சீராக இருக்க வேண்டு மென்பதையும், வறுமை நிலையிலும்கூட இந்தச் சீர்திருத்தம் இயலுமா என்பதையும் மட்டும்தான் கவனிக்க முடியும்.

நம் மக்களின் உணவு பெரும்பான்மையாக, முன் சித்திரத்தில் காட்டியபடிதான் உள்ளது. இது எப்படி மாற வேண்டும்? இதற்கும் ஒரு சித்திர விளக்கம் கொடுப்போம். இச் சித்திரங்கள் குறிக்கும் ஆராய்ச்சி உணவு நிபுணர்களால் ஆமோதிக்கப்பட்டது. நமது அனுபவத்தாலும் நிரூபிக்கப் பட்டது.



1. அரிசி 10 அவு; 2. கோதுமை அல்லது வேறு தான்யம் 5 அவு; 3. பால் 8 அவு; 4. பருப்பு 3 அவு; 5. காய்கள் 6 அவு; 6. கீரைகள் 4 அவு; 7. எண்ணெய் 2 அவு; 8. பழங்கள் 4 அவு; இவ்வுணவால் கிடைக்கக்கூடிய உஷ்ணப் பிரமாணம் 2600 காலரிகள்.

டி. பியைத் தடுக்கத் தினசரி 2600 காலரிகள் உஷ்ணப் பிரமாணத்துக்கு உணவு அமைய வேண்டுமா? டி. பி. யைப் போக்கவும் இத்தகைய உணவு தான் வேண்டுமா? வயது, தொழில் கவனிக்காது 2600 காலரிகள் திட்டம் இடலாமா? என்று பலவாறுகக் கேட்கலாம். ஒவ்வொரு நோயாளிக்கும், அவனுடைய வயது உடல் நிலை, உடல் வளர்ச்சி, உழைப்பு (உழைப்பு-செய்வது, செய்து வந்தது) எல்லாவற்றையும் கவனித்துக் காலரிப் பிரமாணம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

டி. பி.யைத் தடுக்க இக் காலரிக் கணக்கையா தினசரி ஆராய வேண்டும்? இது தேவை இல்லை! நம் தினசரி உணவில், என்ன சத்துக் குறைவு, எந்த உணவைக் குறைக்க வேண்டும், நம் நிலைக்குக் காலரிகள் எவ்வளவு தேவை என்ற சராசரி ஆராய்ச்சியே போதும்.

உணவில் இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று பிரதான உணவு. இரண்டாவது பாதுகாப்பு உணவு. பிரதான உணவை மட்டும் அதிகமாக உண்டு டி. பி.யைத் தடுப்பதோ போக்குவதோ கடினம். பாதுகாப்பு உணவு இன்றியமையாதது.

பிரதான உணவுதான், முக்கிய ஆகாரமாகவும், வயிறு நிரம்பவும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. தேசந்தோறும் மாகாண வழக்கப்படியும் இந்த உணவு முறை மாறும். அரிசி, கோதுமை, ராகி, சோளம், கம்பு இவை பிரதான உணவுகள். பருப்புக்களையும் எண்ணெய் வெண்ணெய் முதலியவைகளையும், பிரதானத்துக்கும், பாதுகாப்புக்கும், இடை அங்கமான துணை உணவாகக் கருதலாம். இவையும் தேவை. பால், காய், கீரைகள், பழங்கள் இவை பாதுகாப்பு உணவுகள். பிரதான உணவுகள், புஷ்டிக்கும் சர்க்கரை சத்துக்கும் உபயோகமாகும். பருப்புகள் புஷ்டிக்கும் உதவும். வெண்ணெய், எண்ணெய் கொழுப்புச் சத்துக்கு ஆதாரம். பால், காய், கீரைகள், பழங்களிலிருந்து வைடமின், கால்ஷியம், பாஸ்பரஸ், உப்புக்கள், உலோகவகை, அயம் இவைகளெல்லாம் கிடைக்க வேண்டும். இவைகள் இன்றி ஆரோக்கியம் நிலைக்காது; உடலின் தடுப்புச் சக்தி, மறுப்புச் சக்தி குன்றும். நோய்க் கிருமிகளை விரட்டுவதும் இயலாத காரியம்.

பாதுகாப்பு உணவு குறைவதால்தான் சமூகத்தின் ஆரோக்கியம் குறைந்து விட்டது. நோயும் அதிகமாகப் பற்றுகிறது. நோயை விரட்டுவதும் மிகவும் கடினமாகிறது. பாதுகாப்பு உணவை அதிகமாக ஒவ்வொருவரும் தினசரி உபயோகித்தால், ஆரோக்கியம் உயரும். நோயைத் தடுக்கும் சக்தி அதிகரிக்கும். இந்தப் பாதுகாப்பு உணவின் விலை அதிகமல்ல. ஏழைக்கும் கிட்டக் கூடியது. சத்து நீக்கி உண்ணும் பழக்

கத்தையும் ஒழித்தால், உணவுச் செலவைக் குறைக்கலாம்.

பொதுவாக விஷயத்தைக் கவனித்துச் சொல்லுகிறேன். 'பழக்க வழக்கங்களை மாற்ற முடியவில்லையே! எப்படி மாற்ற முடியும்? வீட்டில் ஒத்துழைக்க மாட்டார்களே'' என்று கூறுவது கூடாது. டி. பி. யைத் தடுக்கவோ, டி. பி. யைப் போக்கவோ விரும்பினால், நான் கூறுவது போல், உணவை மாற்றிக் கொள்ளுங்கள்! நோய்த் தொல்லை குறைந்து, ஆரோக்கியம் மிகுந்து இருக்க விரும்பினால் மாற்றுங்கள். குதர்க்கவாதம் பயனில்லை; குண்டுக் காளை மாதிரி, இஷ்டம் போல் திரியும் மாந்தர்களை உதாரணமாகக் கூறுகிறீர்கள்! இன்றையக் குண்டுக் காளை நாளை நோய்க் கோழையாக மாறி விடும்!

''நாங்கள் பாதுகாப்பு உணவுக்கு மாற்றிக் கொள்ளுகிறோம். ஆனால் இவைகளுக்குக் காசுக்கு எங்கே போவது?'' என்று கேட்கலாம்.

இக்காசைத் தேடும் வழியை — காசு பெறும் வழியைப் பொதுவாக விளக்குகிறேன். குடும்பத்துக்குக் குடும்பம், ஆளுக்கு ஆள் தேவையான சில மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

பால், பழம் என்றவுடன் தான் மக்கள் யோசிக்கிறார்கள். இதற்கு அவசியமே இல்லை. ஒரு ஏழைக் குடும்பத்திலும் உண்ணப்படும் பிரதான உணவின் அளவு அவசியமற்றது. இந்த உணவு தரும் புஷ்டியையும் மலிந்த உணவால் பெறலாம். சர்க்கரைச் சத்தோ எதைத் தொட்டாலும் மிகுந்திருக்கிறது. இதற்கெனக் கவலையே வேண்டாம். இந்தப் பிரதான உணவின் அளவு தயாரிப்பு, உண்ணும் விதம் இவற்றைச் சீர்திருத்தினால் காசை மிகுத்தலாம்.

சீரற்ற உணவின் சித்திரத்தை ஞாபகம் செய்து கொள்ளுங்கள். புல் பூண்டு செடி மைதானத்தில் இவைகளை அணுவைப் போல் ஆக்கி, கோபுரம் உயர்வது போல் இந்த அரிசிக் கணக்கு உயர்ந்திருக்கிறது. அரிசி 15 அவுன்ஸ் என்ற எடைக்கு உண்ணப்படுகிறது. இந்த அரிசி சங்குபோல் தீட்டப்பட்ட அரிசி! கடையில் வாங்கியபின் தீட்டிக் கொள்ளக் காசை உண்ட அரிசி! கஞ்சி வடித்து உண்பதால் 15 அவுன்ஸுக்கு உயர்ந்த அரிசி! காய், கீரை, மோர், பருப்பு,




பழம் சேராததால் வயிற்றை நிரப்ப அதற்கென அதிகரித்து நிற்கும் அரிசி! இத்தகைய அரிசியின் அளவைச் சீர்திருத்தத்தால் குறைக்க வேண்டும். தீட்டுதலை நிறுத்தினால், அரிசியின் தேவையை மூன்று அவுன்ஸ் குறைக்கலாம். தீட்டுவதனால் நான்கில் ஒரு பங்கு நஷ்டம் அடைகிறது. அரிசி தீட்டுதலுக்குக் கூலி, ஒரு படிக்கு ஒரு அணா மிகுதியாகும். தீட்டாத அரிசி சமையல் செய்யும் பொழுது, தவிட்டின் சேர்க்கையினால், உப்பிக்கொள்ளுகிறது. தீட்டாத அரிசி உணவுப்பசியை எளிதில் தீர்க்கிறது. தீட்டிய அரிசியைக் குழைத்து உள்ளே விழுங்குவது போல் தீட்டாத அரிசி உணவை உட்செலுத்த இயலாது. இதைக் கடித்துத்தான் தின்ன வேண்டும். இவ்வாறு கடித்துத் தின்னும்பொழுது, விழுங்கும் வித்தையால் நேரும் அதிகத் தேவை குறையும். தீட்டிய அரிசியில் புஷ்டிச் சத்து சுமார் 6½%; தீட்டாத விடுமுளை முறியாத அரிசியில் புஷ்டிச் சத்து சுமார் 8%; அமினோ ஆஸிட் அல்லது புஷ்டி ரஸாயனம், தவிட்டு முளை முறியாத அரிசியில் அதிகம். தீட்டிய அரிசியில் பாதிக்குப் பாதி தான் மிக்க புஷ்டி கிடைக்கும்.

கஞ்சி வடிப்பதால், நல்ல புஷ்டி, பாதுகாப்பு அம்சங்கள், மலப்போக்கை எளிதாக்கும் அம்சங்கள் எல்லாம் சாக்கடைப் பெருச்சாளிக்குச் செல்லுகின்றன. கஞ்சி இருந்தால், கஞ்சி வடிக்காது உண்டால் அரிசித் தேவை குறையக் காசும் மிச்சப்படுத்தலாம்.


எனவே, தீட்டாத கஞ்சி வடிக்காத அரிசியைச் சமையல் செய்து மென்று உண்ணுவதால் 15 அவுன்ஸ் தற்கால முறையில் தீட்டிய அரிசி கொடுக்கும் சத்தை, 8 அவுன்ஸ் அரிசியிலிருந்து பெறலாம். 7 அவுன்ஸ் அரிசி மிகுதி. இதன் விலை மிகுதிதானே? அரிசி தீட்டும் காசு மிகுதி. தீட்டிய கஞ்சி வடித்த அரிசியையே உண்ணுவதால் ஏற்படும் நோய் தீர்க்க, மருத்துவர் விழுங்கும் காசு மிச்சம்! நாம் இங்கு காட்டிய மிகுதிக் கணக்கு ஒரு நாளைக்கு, ஒரு வேளைக்கு, ஒரு ஆளுக்கு என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு மாதத்துக்கு, ஒரு குடும்பத்துக்கு, ஒரு தேசத்துக்கு எவ்வளவு மிகுதியாகும் என்பதைக் கணக்கிட்டுப் பாருங்கள்!

(தொடரும்)

மட்டரக ப்ளேடுகளில் பணத்தை வீணாக்காதீர்கள்




ஒரு முறை முகக்ஷவரம் செயதபின்னர் காணப் படும் மட்டரக ப்ளேடின் உடைபட்ட நுனி



பல முறை முகக்ஷவரம் செய்துகொண்ட பின் காணப்படும் ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடின் நுனி

பலர் மட்டரக ப்ளேடுகளை வாங்கி பணத்தை மிச்சப்படுத்தப்பார்க்கின்றனர். ஆனால் இப்ளேடுகள் ஒன்று அல்லது இரண்டு முறை முகக்ஷவரம் செய்தபின் கூர்மை இழந்து பிரயோஜனமில்லாமல் எறிந்து விட வேண்டியனவாக காணப்படும். புத்திசாலிகள் கொஞ்சம் அதிகப் பணம் செலவு செய்ய பால் மாறாமல் ஸெவன் ஒ'க்ளாக் ப்ளேடுகளையே வாங்குகிறார்கள். நாளடைவில் அவர்களுக்கு பணமும் மிச்சமாகிறது. எப்படியெனில் ஒவ்வொரு ஸெவன் ஒ'க்ளாக் ப்ளேடும் பலமுறை முகக்ஷவரம் செய்து கொள்ள அவ்வளவு கூர்மையாக இருக்கிறது.

7 o'clock



BLADES

ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகள்


இருமலிலிரு
ந்து விரைவில்
நிவர்த்திபெற
வேண்டுமா ?
க்ளைகோடின்
டெர்ப் வசாகா
Alembic
அலெம்பிக் கெமிகல் ஒர்க்ஸ் கம்பெனி லிமிடெட், பரோடா-3.
நீங்கள் அலெம்பிக்கின் மேல் பூரண நம்பிக்கை வைக்கலாம்.

ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

50

ஒருவர் கடிதம் எழுதியிருக்கிறார்: "நான் அநேக இடங்களில் பார்த்திருக்கிறேன்; இன்னும் அனேகம் பேர்-ஆண்களும், பெண்களும்—மரப்பாவைகளையும் கற்சிலைகளையும் மரத்தையும் செடியையும் பூஜை செய்து வருகிறார்கள். உயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த படித்த பெண்மணிகளும் கூட இத்தகைய மூட வழக்கத்தை விடவில்லை. அவர்களில் சிலர் வாதம் செய்வது என்னவென்றால் இயற்கை உலகத்திலுள்ள தெய்விக அம்சத்தைப் பக்தியோடு பூஜை செய்கிறோம். இதில் என்ன தவறு என்கிறார்கள். இது சாவித்திரி பூஜை என்கிறார்கள். இந்த வாதமெல்லாம் எனக்குச் சரி என்று தோன்றவில்லை. இதைப் பற்றித் தாங்கள்விளக்கம் கொடுக்கவேண்டும்."

இந்தக் கடிதத்திலுள்ள கேள்வியை நான் வரவேற்கிறேன். மூர்த்தி பூஜை தவறு என்று எண்ணி இவ்வாறு எழுதியிருக்கிறார். மூர்த்தி பூஜையை நான் ஆதரிப்பவன். ஆனால் ஒரு விதத்தில் எதிர்க்கவும் செய்கிறேன். மூர்த்தி பூஜையானது சுத்த மூட நம்பிக்கையாகிவிட்டால் அதை எதிர்க்க வேண்டியது அவசியமாகிறது. பொய்யும் அறியாமையும் கலந்த மூர்த்தி பூஜையை எதிர்க்கத்தான் வேண்டும். ஆயினும் பக்தி செலுத்துவதற்கு ஏதேனும் ஒரு லிங்கம் இன்றியமையாதது. இது மனிதனுக்கு இயற்கையான குறைபாடு. பக்தி செலுத்துவதற்கு மூர்த்தி பூஜை மிகவும் பயன்படுகிறது. புனித நூல் என்று நாம் கருதும் ஒரு கிரந்தத்தை வைத்து வணங்கினாலும் அதுவும் மூர்த்தி பூஜையேயாகும். அதில் தவறில்லை. ஒரு கோவிலுக்கோ, மசூதிக்கோ பக்தியோடு சென்றோமானாலும், ஒரு தீர்த்த யாத்திரை செய்தாலும் அதுவும் மூர்த்தி பூஜையேதான். அதில் ஒரு தவறுமில்லை. ஆண்டவனைவழிபடுவதற்கு ஏதேனும் ஒரு சின்னம் வைத்துக் கொள்வது அவசியமாகிறது.

மரத்துக்குப் பூஜை செய்வதில் நான் ஒரு குற்றமும் காணவில்லை. அது மிகவும் அழகான பூஜை முறையாகும். மரங்கள் தங்கள் இலைகளாகிய பல்லாயிர நாக்குகளையும் கொண்டு ஈசனுடைய புகழைப் பாடுகின்றன. மரங்களை விட வேறு எந்த அழகிய பொருளை நாம் காண முடியும்? வனஸ்பதி உலகம் இல்லையாயின் மனிதன் பூமியில் எப்படி வாழ முடியும்? உயிருக்கு ஆதாரமல்லவோ தாவரம். தாவர வர்க்கம் சரியாகப் பாதுகாக்கப் படாமலும், மரங்கள் அழிந்து போயும் வருகின்ற நம்முடைய நாட்டில் மரங்களைப் பூஜை செய்யும் வழக்கம் மிக நல்ல வழக்கம் என்றே சொல்லுவேன். மரத்தை வலம் செய்து பக்திசெலுத்தும்பாமரஸ்திரீகள் அந்தப் பூஜையின் தத்துவத்தை அறியாமல் இருக்கலாம். எடுத்துச் சொல்லவும் அவர்களால் முடியாது. ஆயினும் அவர்களுடைய பக்தியைப் பற்றி ஒரு குறைவுமில்லை. அவர்களுடைய உள்ளத்தின் சுத்தம் அவர்களைக் காக்கும். அவர்களுடைய பக்தி பெருஞ் செல்வமாகும். அதைப் போற்றுவது நமது கடமை.

இது என்னுடைய கொள்கையாயினும் இது வேண்டும், அது வேண்டும் என்று வேண்டுதலை செய்து கொள்ளும் முறையை நான் அங்கீகரிக்கமாட்டேன். வேண்டுதல்கள் செய்து கொண்டு சுயநல ஆசையோடு மரத்தைப் பூஜை செய்தாலும் சரி, கோவில்-மசூதி-தீர்த்தங்களுக்குச் சென்றாலும் சரி, எந்த பூஜையும் குற்றமேதான். சுயநல ஆசைகளோடு செய்யும் பூஜை பயனற்றது. மூர்த்தி பூஜையாயினும் மூர்த்தியில்லாத பூஜையாயினும் இந்தக் குற்றம் வழிபாட்டைப் பழுது படுத்தும். ஒரு விக்கிரகத்தின் முன் நின்றோ, விக்கிரகமில்லாமல் மசூதியிலோ வேறு ஆலயத்திலோ சுயநலக் கோரிக்கைகள் சொல்லி வரம் கேட்பதும் தவறு.

இதையெல்லாம் நான் சொல்லி மரங்களை வழிபடும் வழக்கத்தை ஆதரித்த போதிலும், எல்லாரும் மரங்களைப் பூஜை செய்யும் வழக்கத்தைக் கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. பக்தியோடு தாவரத்தின் முன் வணங்கிப் பூஜை செய்பவர்களை நான் குற்றம் சொல்லமாட்டேன் என்பதே என் கருத்து. ஆண்டவனுடைய வடிவத்தை எண்ணற்ற பொருள்களில் . காணலாம். அவனைத் தியானித்து நாம் எதையும் வணங்கலாம் என்பது என் கொள்கை.

[யங் இந்தியா, 26—9—29]



இலங்கேசுவரன்

புதர் மண்டிப் புழுதி படிந்து கிடக்கும் இடம் பூங்காவாக மாறி விட்டது போலவும், பாசி பிடித்துப் பாழாகிவிட்ட தடாகம் நன்கு பண்படுத்தப்பட்டு, படிகம் போன்ற நீருடன் பலரும் பருகும் பான்மையில் விளங்குவது போலவும் இடீரென்று ஒரு மாறுதலை நாடக மேடையில் கண்டேன்.

பிறன் மனைவியை அபகரித்துச் சென்ற பித்தனாகவும், கொடிய அரக்கனாகவுமே பல்லாண்டுகளாகக் காட்சியளித்து வந்த இலங்கேசுவரனான ராவணனுக்கு நல்ல காலம் பிறந்து விட்டது. முதன் முதலாக அவன் அதிர்ஷ்டத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, பத்துத் தலைகள் இல்லாமல் அவன் மேடையில் தோன்றும் அதிசயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். ஸ்ரீராமபிரானுக்குக் கோதண்டத்தைப் போலவும், கண்ணபிரானுக்குப் புல்லாங்குழல் போலவும், முருகப் பெருமானுக்கு வேலாயுதத்தைப் போலவும், பரமசிவனுக்குப் பாதிமதியைப் போலவும் — இலங்கேசுவரனான ராவணனை அடையாளம் கண்டு கொள்ள அவனுடைய பத்துத் தலைகள் இன்றியமையாதவை.


பத்துத் தலைகளோடு ராவணன் பட்ட பாட்டைப் பற்றி நமக்கு எதுவும் தெரியாது. ஆனால் அந்தப் பத்துத் தலைகளினால் நாடகக் குழுவினர் பட்ட அவஸ்தைகள் அனந்தம். ஒரு சமயம், பத்துத் தலைகள் கொண்டுவர மறந்து போனதன் காரணமாக, ''சம்பூர்ண ராமாயண'' நாடகமே நிறுத்தப்பட்டது. இந்தப் பத்துத் தலைகளினால் ஏற்பட்ட இன்னொரு விபரீதம் மிகவும் விநோதமானது. ராவணனுடைய பத்துத் தலைகளைத் தயாரித்த சித்திரக்காரர் ஒருவர் ஒருசமயம் அந்த வேலையைத் தம்முடைய உதவியாளனிடம் ஒப்படைத்தார். அந்த மேதாவி, ராவணனாக நடிப்பவரின் சொந்தத் தலையை மறந்து விட்டான்; ஒரு புறம் ஐந்து தலைகளும் மறு புறம் நான்கு தலைகளுமாகச் செய்வதற்குப் பதிலாகப் பத்துத் தலைகளையும் செய்து விட்டான்; அதனால் மேடையில் ராவணன் தாமதமாகத் தோன்றும்படியாயிற்று!

சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் 26–9–56 முதல் பல நாட்கள் வெற்றிகரமாக நடந்த நேஷனல் தியேட்டர்ஸாரின் ''இலங்கேசுவரன்'' நாடகத்தில் வந்த ராவணனுக்குப் பத்துத் தலை உபத்திரவம் இல்லை. தலைசிறந்த பத்துக் குணாதிசயங்களை உடைய ராவணனைப் பத்துத் தலை ராவணன் என்று மக்கள் கூறுகின்றனர் என்ற நாரதரின் விளக்கம் விநோதமானது.

''இலங்கேசுவரன்'' நாடகத்தின் மூலக் கதை ஆனந்தராமாயணத்தை ஆதாரமாகக் கொண்டதென்று அறிந்தேன்.

கதையைக் கொஞ்சம் பார்ப்போம். இலங்கேசுவரனாகிய ராவணன் மனைவி மண்டோதரிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த நேரத்தைச் சீர்தூக்கிப் பார்த்த பிரும்ம தேவர் இந்தக் குழந்தையினால் உன் நாடு அழிந்து விடும் என்று சொல்லி விட்டார். ராவணன் தாங்கொணாச் சோகத்துடன் விபீஷணன், கும்பகர்ணன் முதலியவர்களின் யோசனைப்படி குழந்தையைப் பேழையில் வைத்து அலை மோதும் ஆழியில் விட்டு விடுகிறான். அக் குழந்தை ஜனகனது யாக பூமியில் தோன்றி, சீதா என்ற பெயருடன் சீரும் சிறப்புமாக வளர்ந்து வருகிறாள்.

குழந்தை பிறந்தவுடன் இறந்து விட்டதாக ராவணன் மண்டோதரியிடம் பொய் கூறிவிடுகிறான். இலங்காபுரி முழுவதுமே அந்தச் செய்தியை நம்பிவிடுகிறது. ஆனால் ராவணனின் பெற்ற மனம், மகளை மறக்க



முடியாமல் தவிக்கிறது. தான் பெற்ற செல்வம் ராஜரிஷியான ஜனக மகாராஜனின் அரண்மனையில் வளர்ந்து சுயம் வரத்தில் ஸ்ரீராமன் கரம் பற்றினாள் என்ற செய்தி கேட்டதும் ராவணன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. பிறகு, கைகேயி செய்த சூழ் வினையினால் ஸ்ரீ ராமன் சீதையுடன் வனம் சென்றான் என்று அறிந்ததும் ராவணன் பரதன் மேல் போர் தொடுக்க ஆயத்த மாகி விட்டான்.

மேற்கூறிய காட்சிகளிலெல்லாம், ராவணனாக நடிக்கும் மனோகர் மெய்சிலிர்க்க வைத்து விட்டார். உயிருள்ள உரை நடையைக் கையாண்டு, நாடகம் பார்ப்பவர் உள்ளங்களில் உவகையையும், உற்சாகத்தையும், உருக்கத்தையும் பொங்கிப் பெருகும்படி செய்து விட்டார்.

ராவணன் அழைத்தபோதெல்லாம் அதிர் வேட்டு ஒலியுடன் திடீர்திடீரென்று தோன்றி ராவணனுக்கு ரேடியோவாயிருந்து வந்த அரக்கன் மாயாவி, வரவர வேட்டுச் சத்தம் இல்லாமலே வரத் தொடங்கிக் கடைசியில் ராவணனால் மடிகிறான்! இந்த வேடந்தாங்கிய ஜகதீசன் கனிரென்று பேசினார்.

சீதையை இலங்கைக்குக் கொண்டு வந்து விட்டால், ஸ்ரீ ராமன் நிச்சயம் அவளைத் தேடிக் கொண்டு வருவான், அப்புறம் அவனிடம் உண்மையைக் கூறி மகிழலாம் என்று நினைத்து ராவணன் செய்த காரியம் விபரீதமாகிப் போரைக் கிளப்பிவிட்டு விடுகிறது. விபீஷணன் ஸ்ரீராமனைச் சரணடைகிறான். கும்பகர்ணனும், ராவணனது வீரப் புதல்வர்களும் போரில் மரணம் அடைகின்றனர். அச்சமயம் ராவணனும் ஸ்ரீராமனுடன் போர் புரிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இந்தக் கட்டத்தில் மனோகரின் வீராவேச நடிப்பை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

"இலங்கேசுவரன்" நாடகத்தைத் தயாரித்து அதற்கு வசனம் எழுதிய துறையூர் ஸ்ரீ கே. மூர்த்தி காட்சி அமைப்புகளை அழகாக விறுவிறுப்புடன் செல்லும்படி அமைத்து, அவற்றுக்கு ஏற்ப, பாத்திரங்களின் உரையாடல்களையும் அமைத்திருக்கிறார். இந்நாடகத்தில் பிரமிக்கத்தக்கபடி அமைந்திருக்கும் வேகம் (டெம்போ) குறிப்பிடத்தக்கது.

இந்த நாடகத்தை நேரில் பார்க்காமல், தலைப்பை மாத்திரம் பார்த்தவர்கள் ஆதி காவியத்துக்கு இழுக்கு நேரும் வகையில் நாடகம் நடத்தப்படுவதாகத் தவறாக நினைக்கலாம். ஆனால் நாடகத்தில் தவறான அம்சம் எதுவும் இல்லை.

ராவணன் சீதையிடம் மோகங் கொண்டதாகவே காட்டப்படாததால், தந்தை–மகள் என்ற உறவு நெறி பிறழவில்லை. ஆகவே ஆதி காவியத்துக்கு இழுக்கு எதுவும் ஏற்பட்டுவிடவில்லை என்று கருதுகிறேன்.

ராவணன் ஒரு பொய் சொன்னதால், இலங்காபுரியை இழந்து அடியோடு அழிந்து போக நேர்ந்தது என்பதுதான் கதை.

ராவணனைப் போலவே, சூர்ப்பனகையும் இந்த நாடகத்தில் அதிசயிக்கத் தக்க முறையில் நல்லவளாக இருக்கிறாள். தண்டகாரண்யத்தில் ஸ்ரீ ராமனையும் சீதையையும் பார்த்ததும் ஸ்ரீராமனைச் சோதித்துப் பார்க்க விரும்புகிறாள். உடனே ஸ்ரீராமனிடம் காதல் கொண்டவளாகக் கனி நடனம் புரிகின்றாள். லக்ஷ்மணன் அவளைத் தண்டித்து அனுப்புகிறான். சூர்ப்பனகையாக வந்த சகுந்தலா நன்றாய் நடித்தார்.

சினிமா நடிகர் பீர்முகம்மது தசரதன் பாகத்தை ஏற்று, உணர்ச்சிமயமாக நடித்தார். கைகேயியாக நடித்த செல்லம் சாகசக் கண்ணீரும் சாதுர்ய நடிப்பும் காட்டி வெற்றி பெற்று விட்டார்.

"இலங்கேசுவரன்" நாடகத்தில் முக்கியமாக அழகாய் அமைந்த பாத்திரம் ஸ்ரீராமன்; சாந்தகுமார் அந்த பாகத்தை ஏற்றுக் களை கட்டும்படி செய்துவிட்டார். பரதனாக வந்த ராஜப்பா தோற்றத்திலும் நடிப்பிலும் ஸ்ரீ ராமனையும் மிஞ்சிவிட்டார். லக்ஷ்மணன் (ஜய

ராமன்) வீராவேசத்துடன் நடித்துக் கர கோஷத்தைப் பெற்று விட்டார்.

சீதையின் நடிப்பில் நாம் பிரமாதமாக எதுவும் காண முடியாவிட்டாலும், அவள் தோற்றமும் பேச்சும் பாவபூர்வமா யிருந்தன. இந்திரா அந்தப் பாகத்தை ஏற்ருர்.

முன்பெல்லாம் நாடகம் பார்க்கப் போகிற வர்கள் ஏராளமான பாடல்களைச் செவி மடுக்கும் நோக்கத்துடன் போவார்கள். இதை உத்தேசித்தே வெண்கலத் தொண்டை படைத்த பின்பாட்டுக்காரரையும், எந்தப் பாட்டையும் சமாளிக்கக்கூடிய ஒரு ஹார் மோனிய 'ஸ்பெஷலிஸ்'டையும் ஏற்பாடு செய்து விடுவார்கள். அந்தக் காலத்தில் நாடகக் காட்சிகளில் ஒரு காட்சிக்கும் மற் ெருரு காட்சிக்கும் இடையில் ஐந்து அல்லது பத்து நிமிஷங்கள் இடைவேளை இருக்கும். அச் சமயங்களில் ஹார்மோனியக்காரரும் பின் பாட்டுக்காரரும் ரஸிகப் பெருமக்களைச் சமாளிப்பார்கள்!

இந்த ''இலங்கேசுவரன்'' நாடகத்தில் அந்தக் காரியத்துக்கு இடம் இல்லை. காட்சி கள்தான் பறக்கின்றனவே!

இந்த நாடகத்தில் பின்னணியிலிருந்து குரல் கொடுத்தவர்கள் தங்கள் வேலையை நன்ருய்ச் செய்தார்கள். நாடகக் காட்சி களின் இடையே சினிமா உத்திகள் திறமை யாகப் புகுத்தப்பட்டிருந்தன. இடையிடையே அழகிய பெண்களின் நடனம் கவர்ச்சி தந்தது.

''இலங்கேசுவரன் நாடகம் ஆரம்பித்த சில தினங்களிலேயே அதற்குப் பொதுஜன ஆதரவு நிறைய இருக்கிறது என்பதை நான் சுலபமாகத் தெரிந்து கொண்டேன். எனக்குத் தெரிந்த பஸ்கண்டக்டர் ஒருவர் பரம ரஸிகர்; அவர் இந்த நாடகத்தைப் பார்த்து விட்டு வந்து என்னிடம் அபிப்பிராயம் சொன்னுர்.

''இலங்கேசுவரன்'' நாடகம் ரொம்ப நன்ருயிருக்குதுங்க. பாசஞ்சரும் ஏராளமாகக் கொட்டகையிலே கூடி விடருங்க!''

அவர் சொன்னதில் தவறு எதுவும் இல்லை. பஸ்ஸில் வரும் பாசஞ்சர்கள் தானே நாடகம் பார்க்கவும் ஏராளமாகக் கூடுகிருர்கள்? நாடகம், சினிமாப் பார்ப்பவர்களுக்கு 'ஆடியன்ஸ்' என்று சொல்லத் தெரியும். ஆனல் பஸ் கண்டக்டருக்குப் பழக்கமான கூட்டம் 'பாசஞ்சர்கள்' தானே?

சமூக நாடகத்தில் சிரமமே யில்லை. நடிகர்கள் ஆபீஸுக்குப் போகும் உடையுடன் முகத்துக்குக் கொஞ்சம் 'மேக்கப்' செய்து கொண்டு விட்டால் போதுமானது. நடிகை கள், சினிமா பார்க்கப் போகிற மாதிரி நினைத் துக் கொண்டு உடைமாற்றிக் கொண்டால் போதுமானது.

ஆனல் புராண, இதிகாச நாடகமானல் காட்சிகளும் உடைகளும் தயாரிப்பது மிக மிகச் சிரமம். நேஷனல் தியேட்டர்ஸார் அந்தச் சிரமங்களை யெல்லாம் நன்கு சமாளித் திருக்கின்றனர்.

நாடகக் கலை முன்னேற இத்தகைய கலைஞர் குழுக்கள் நிறையத் தோன்ற வேண்டும். பொது ஜன ஆதரவும் அவர் களுக்கு நிறையக் கிடைக்க வேண்டும்.

சிறைப்பட்ட அன்பு

தே. வீரராகவன்

இரண்டாவது சினிமாக் காட்சியைப் பார்த்துவிட்டுத் தூக்க மயக்கத்துடன் வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். உலகை இருள் விழுங்கி யிருந்தது. ஐப்பசி மாச வானம் 'பொட்டுப் பொட்டென்று' கண்ணீர்ச் சொட்டுக்களைச் சிந்திக் கொண்டிருந்தது. இரவு சுமார் ஒன்று அல்லது ஒன்றரை மணியிருக்கும்.

வீட்டை நெருங்கியபோது, யாரோ தெருவாயிலைப் பெருக்கிக் கொண்டிருந்தது தெரிந்தது. அது என் மனைவி ஜானகியாக இருக்க முடியாது. குழந்தைகளுடன் நாளெல்லாம் போராடிவிட்டு இரவு பத்து மணிக்குப் படுத்துக் கொண்டால், அவள் காலை ஆறு மணிக்குத்தான் எழுந்திருப்பாள்.

ஒருவேளை, வேலைக்காரி அஞ்சலையா யிருக்குமோ? அவளும் தன் எஜமானியம்மாளில் முக்கால் திட்டமாயிற்றே! பின் யாரா யிருக்கலாமென்று ஆச்சரியப் பட்டுக் கொண்டே ஆசாமி அருகில் சென்று, கையிலிருந்த 'டார்ச் லைட்டை'ப் போட்டுப் பார்த்தேன். அது வேறு யாருமில்லை; அஞ்சலையேதான்.

"என்ன அஞ்சலை? ஆச்சரியமா யிருக்கிறதே! இன்றைக்கு இரவு ஒரு மணிக்கெல்லாம் தெருக்கூட்ட ஆரம்பித்து விட்டாயே?" என்றேன்.

"இன்னும் இரண்டு மணி நேரத்தில் தீபாவளி வரப் போவுதுங்களே?"

"ஆமாம், தீபாவளி வரப்போகுது. அதனால் நீ இவ்வளவு சீக்கிரம் வருவானேன்! இன்னும் இரண்டு மணி நேரம் கழித்து வந்தால் போதாதா?"

"அவர் வந்திருக்கிறாருங்க. அதனால் எங்கள் வீட்டிலும் இன்றைக்குத் தீபாவளிங்க...."

"அது யார், அவர்?"

"அவர்....அவர்....அவர்தான்... என் கணவர்."

"என்ன? உனக்குக் கல்யாணம் வேறு ஆகி விட்டதா? இந்த மூன்று வருஷங்களாக இங்கே வேலை செய்கிறாய். உனக்குக் கல்யாணம் ஆகி விட்டதாகவோ, புருஷன் இருப்பதாகவோ எனக்குத் தெரியாது. நீயும் சொல்ல வில்லை. ஜானகிகூடச் சொல்ல வில்லையே.... உன் கழுத்திலே தாலி இருந்தாலாவது அதைப் பார்த்துத் தெரிந்து கொண் டிருப்பேன்."

"தாலி கட்டிக்கிட்டாத்தானு தாரம்? கொட்டு மேளம் கொட்டி ஊரைக் கூட்டினுல்தானு கல்யாணம்?"

"பின்னே எப்படி யிருந்தால் கல்யாணமாம்?"

"என் மனசிலே அவர் இருக்கார்; அவர் மனசிலே நான் இருக்கிறேன். எங்கள் இரண்டு பேர் மனசும் ஒத்துப் போச்சு. அவ்வளவுதான்."

"நல்ல வேலை. உனக்குக் கல்யாணம் நடக்க வில்லை என்று நினைத்துக் கொண்டு, என் வயலை உழுகிற பெருமாள் மகனை உனக்குக் கணவனுக்கத் திட்டம் போட்டிருந்தேன்... அது சரி, இந்த மூன்று வருஷங்களாக ஏன் உன் கணவன் ஒரு நாள்கூட வந்ததில்லை?"

"அது ஒரு பெரிய கதை. அதைச் சொல்ல நேரமாகுங்க."

"பரவாயில்லை, சொல்லு. இன்னும் எவ்வளவோ நேரமிருக்கு, தீபாவளி வர. எனக்கும் இனிமேல் தூக்கம் வராது" என்று கேட்டுக் கொண்டே தெருத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டேன். அஞ்சலை தன் கதையைச் சொன்னுள்.

"என் பெற்ரேருக்கு நான் ஒருத்தியே குழந்தை. எனக்குப் பன்னிரண்டாவது வயது நடந்து கொண்டிருந்த போது இரண்டே நாள் காய்ச்சலில் என் தாய் என்னை என் தகப்பனுரிடம் ஒப்படைத்து விட்டுக் கண்ணை மூடிவிட்டாள். என் தாயும் தந்தையும் கோபாலக் கோனுர் பண்ணையில் பல வருஷங்களாக உழைத்துப் பிழைத்து வந்தார்கள். பண்ணையிலேயே



எங்களுக்குக் குடிசை. பட்டணவாசிகளைப்போல என் பெற்றோர்களுக்குப் பகட்டாகப் பழகத் தெரியாது. ஆனால் கிராமவாசிகளுக்கு இயல்பான உண்மை அன்போடு அவர்கள் இருவரும் பழகி வந்தார்கள்.

என் தாய் இறந்த பிறகு என் தகப்பனார் அநேகமாக ஊமையாகி விட்டார்.








ஏன்? ஒரு புது மனிதராகி விட்டார் என்று சொல்லுவேன். என்னுடன் தவிர, பண்ணையில் வேலை செய்யும் மற்ற ஆண்களுடன் கூட அதிகம் பேச மாட்டார். பண்ணை எஜமான் ஏதாவது கேட்டால்தான் பேசுவார். பொம்மையாட்டத்தில் தோல் பொம்மை வந்து போவது போல், மௌனமாய்த் தம் வேலையைச் செய்துவிட்டுக் குடிசைக்கு வந்து விடுவார். நான் தட்டுத் தடுமாறிச் செய்து வைத்திருக்கும் உணவில், கொஞ்சம் சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொள்வார். மனவேதனையினாலும், சரியான உணவின்மையாலும் என் தகப்பனார் தினமும் மெலிந்து வந்ததைக் கண்ட எங்கள் பண்ணையார், எங்கள் சம்பளத்தில் முக்கால் பகுதியைப் பிடித்துக் கொண்டு, தம் வீட்டிலேயே எங்கள் உணவைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடுசெய்தார். அத்துடன்என்னையும் அவர் வீட்டு வேலைகளைச் செய்ய அமர்த்திக் கொண்டார். நானும் என் தகப்பனாரும், இரவில் படுத்துக் கொள்ளமட்டும்எங்கள் குடிசைக்கு வருவோம்.

எப்போதாவது எங்கள் குடிசைக்கு அய்யாசாமிவருவான். அய்யாசாமி எங்கள் பண்ணையாரின் தோப்புக் காவல்காரன். எங்கள் குடிசைக்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்தில், பண்ணையாரின் மாமரத்தோப்பு இருந்தது. தோட்டத்தைக் காப்பதும், பண்ணையாரின் பசுவை மேய்ப்பதும் அய்யாசாமியின் வேலை. அப்பாவும் அய்யாசாமியும் இரவில் பேசிக் கொண்டிருக்கும்போது நான் அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டே தூங்கி விடுவேன். அய்யாசாமி எப்போது தோப்புக் காவலுக்குத் திரும்புவான் என்று எனக்குத் தெரியாது.

நாங்கள் தனியாக இருக்கும்போது என்றாவது ஒரு நாள் தகப்பனார், ''அய்யாசாமி தங்கமானவன். பாவம்! அவன் தகப்பனில்லாத பையன். தாயார் மட்டும் எங்கோ ஒரு கிராமத்தில் யார் வீட்டிலேயோ வேலை செய்து பிழைத்து வருகிறாளாம். எப்போதாவது ஒரு நாள் தன் தாயைச் சென்று பார்த்து வருவான். தன் கையில் இடைப்பதையும் கொடுப்பான். உம்... அவனுக்கும் கல்யாணம் ஆகவேண்டும். உனக்கும் நான் புருஷனைத் தேடியாக வேண்டும். கடவுள் மனசு எப்படி இருக்குமோ?'' என்று இந்தத்தோரணையில் பேசுவார்.

இப்படியாக என் வாழ்வு என் தாயார் மாண்ட பிறகு நான்கு வருஷங்கள் பகலில் பண்ணையார் வீட்டிலும் இரவில் எங்கள் குடிசையிலுமாக நடந்து கொண்டிருந்தது. இதே ஐப்பசி மாதம். வானம் எண்ணெய்க் குடம் போல் கருத்துப் பூரண கர்ப்பமாயிருந்தது. ஒரு தேவாசுரப் போர் தொடங்கப் போவது போல் வானத்தில் கருமேகங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருந்தன. மின்னல் வெட்டு கண்ணைக் குருடாக்கியது. பண்ணை



உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுங்கள்
அபாயம் இருக்கிறதோ
அங்கெல்லாம்
பென்ஸிடாலே
தாராளமாகக்
கையாளுங்கள்
BENZYTOL
பென்ஸிடால்
விஷமில்லை ★ ரணமாக்காது ★ கறைபடாதது
தயாரிப்பவர்
தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிட்.
கல்கத்தா—29
பக்கத்து கடையில் ஒரு பென்ஸிடால் பாட்டில் வாங்குங்கள்.
CBF-2TM-56
தென் இந்திய ஆபீஸ் : 5/149, பிராட்வே, சென்னை-1



அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது சொத்தையும்
மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள்
அவை
COLGATE
COLGATE
RIBBON DENTAL CREAM

யார் வீட்டு வேலைகளை முடித்து உணவு உட்கொண்ட பிறகு நானும் என் தகப்பனாரும் எங்கள் குடிசைக்குத் திரும்பிக் கொண்டிருந்தோம். அப்போது, "ஆ! அஞ்சலை! பாம்பு கடித்து விட்டதம்மா!" என்று என் தகப்பனார் கதறினார்.

அவர் காட்டிய இடத்தை விரல்களால் தடவிப் பார்த்தேன். வலக் காலில் உயிர் நரம்பில் கடித்த இடத்திலிருந்து சூடான ரத்தம் பெருகிக் கொண்டிருந்தது மட்டும் தெரிந்தது.

மெள்ள அவரைத் தூக்கிக் கைகளைப் பிடித்துக் குடிசைக்கு இட்டுச் சென்று படுக்கையில் படுக்க வைத்து விட்டு, "அய்யாசாமியை அழைத்து வரட்டுமா?" என்றேன்.

"அவன் உன் கல்யாண விஷயமாகத் தன் தாயாரைக் கேட்டு வர ஊருக்குப் போய் ஒரு வாரமாகிறது. பாவம்! அவனுக்கும் உடம்பு அசௌகரியமாம்..... என்ன ஆச்சுதோ?" என்றார்.

"பண்ணையாரு வீட்டுக்காவது போய் யாரையாவது அழைத்து வரட்டுமா?" என்று கேட்டேன்.

"வேண்டாம். பதினாறு வயசுப் பெண் தனியே இந்த வேளையில் போகக் கூடாது. மேலும் எனக்கு மயக்கமாய் வருகிறது. மார்பு அடைக்கிறது" என்று சொல்லிக் கொண்டே தம் கைகளால் மார்பை அழுத்திக் கொண்டார்.

"ஐயோ! அப்பா! அப்பா!" என்று கத்தினேன். அவர் பேசவில்லை. கண்களும் திறக்கவில்லை.

தன்னந் தனியே, மையிருளில் கொட்டும் மழையில் தந்தையின் சடலத்தைக் காத்துக்கொண்டு அந்த இரவை எப்படிக் கழித்தேன் என்பதை இப்போது நினைத்தாலும் என் உடம்பு நடுங்குகிறது.

அதற்குப் பிறகு என் பண்ணையார் வீட்டிலேயே தொழுவத்தில் ஓரிடத்தில் எனக்கு இருப்பிடம் கிடைத்தது. வீட்டு வேலைகள் முடிந்த பிறகு அங்கேயே இருப்பேன். என் எதிர்கால வாழ்க்கை இனம் தெரியாத நீண்ட வொரு இருட்டுக் குகையில் எங்கேயோ வழி தடவிச் சென்று கொண்டிருந்தது.

ஒருநாள் மாலை, சுமார் ஐந்து மணிக்குப் பண்ணையாரின் மாந்தோப்புப் பக்கம்போனேன். அப்போது பசு, கன்று மேய்த்துக் கொண்டிருந்த அய்யாசாமி என்னிடம் வந்து, "அஞ்சலை! ஐயா பாம்பு கடித்துச் செத்து விட்டாராமே? இன்று காலையில்தான் நான் ஊரிலிருந்து வந்தேன். அதன் பிறகுதான் எனக்கு விஷயம் தெரிந்தது. நானே இன்று மாலை உன்னிடம் வரலாமென் றிருந்தேன்" என்றான்.

என் உள்ளத்தில் ஆறி வந்து கொண்டிருந்த புண் மீண்டும் கிளறப்பட்டது. பதில் சொல்லாமல் முகத்தை மூடிக் கொண்டு அழுதேன்.

"அஞ்சலை, அழாதே! என்ன செய்வது..நானும் தாயற்றவனாகி விட்டேன். நீயும் தந்தையற்றவளாகி விட்டாய். இரண்டு அநாதைகள் ஒன்று சேர்ந்தால் ஒரு நாதியுடையவராகி விடலாம். பணக்காரர்களிடம் பணம் இருந்தால், ஏழைகளாகிய நம்மிடம் அன்பு இருக்கின்றது. அதனைக் கொண்டு நாம் கரையேறலாம்" என்று சொல்லிக் கொண்டே அய்யாசாமி என் கண்களில் வழிந்தோடிய நீரைத் துடைத்து விட்டு, "என்ன அஞ்சலை! இப்படி இளைத்துப் போய் விட்டாயே! வாய் மூடாமல் இருமுகிறாய். உடம்பு மழுவாய்க் கொதிக்கிறது" என்றான்.

"தந்தை இறந்த வருத்தம் ஒருபுறம்; தனிமை மற்றொரு புறம், வறுமை தலைக்கு மேலே. ஓயாத உழைப்பு எந்நேரமும். இருமலும் நோயும் வராமல் எப்படி இருக்க முடியும்? வாழ்வு இன்னும் எத்தனை நாட்களோ?" என்றேன்.

"கவலைப்படாதே. உன் இருமலுக்கு நல்ல மருந்து தருகிறேன். இதோ நம் எஜமானர் பசு இருக்கிறது. கொஞ்சம் பால் கறந்து தருகிறேன். பசும்பாலை நுரையுடன் சாப்பிட்டால் இருமல் நின்று விடும்."

"எஜமானருக்குரிய பாலை இந்த ஏழை குடிப்பதா? அது பாவம் இல்லையா?"

"வைத்தியன் மருந்தைக் கையிலே வைத்துக் கொண்டு நோயால் அவதிப்படும் நோயாளிக்கு அதனைக் கொடுக்க மறுப்பதுதான் பாவம்! அவர் சாப்பிடும் பாலில் கொஞ்சம் குறைந்து விட்டால் எஜமான் உடம்பு எடை குறைந்து விடாது!"

வீட்டு வேலை முடிந்த பிறகு நான் தினமும் மாந்தோப்புக்குச் செல்லுவேன். அய்யாசாமி கறந்து தரும் பசும் பாலைக் குடித்து விட்டுத் திரும்பி விடுவேன். இப்படி ஒரு வாரம் நடந்தது.

ஒருநாள் மாலை பண்ணையார் மற்றோர் புறமாகத் தோப்புக்கு வந்திருந்தது எங்களுக்குத் தெரியாது. அய்யாசாமி கறந்து கொடுத்த பாலை நான் பருகிக் கொண்டிருந்த போது, குடிசையின் பின்புறமாக வந்த பண்ணையார் எங்களைக் கண்டு விட்டார்.

"ஏண்டா, பயலே! இங்கே அஞ்சலையுடன் காதல் நாடகம் பழகுகிறாயா?" என்று அதட்டினார். பிறகு தொடர்ந்து,

"தினமும் பால் குறைவதற்குக் காரணம் இப்போதல்லவா தெரிகிறது!" என்று உறுமிக் கொண்டே அருகிலிருந்த மூங்கில் கழியொன்றை எடுத்து மனம் போனபடி அய்யா சாமியை அடித்து விட்டார்.

நான் நடுங்கிக் கொண்டே ஒரு புறத்தில் நின்று கொண்டிருந்தேன். அய்யாசாமி பேசாமல் உடம்பைத் திருப்பித் திருப்பிக் கொடுத்தான். எஜமானரின் கடும் கோபத்தினைக் காட்டும் அடையாளங்களாக நீண்ட கோடுகள் அய்யாசாமியின் உடலெங்கும் காணப்பட்டன. அய்யாசாமியை அடித்த பின், பண்ணையார் என்னை நோக்கி, "எஜமானத் துரோகத்துக்கு நீயும் அடிகோல ஆரம்பித்து விட்டாயா?" என்று கத்திக் கொண்டே அதே கழியால் என்னையும் தாக்கத் தொடங்கினார். என்மீது ஓரடி இரண்டடி விழும் வரையில் பார்த்துக் கொண்டிருந்த அய்யாசாமி, மூன்றாவது அடி விழும்போது சிங்கம் போல் சீறி எழுந்து பண்ணையாரை உதைத்தான்.

"ஐயோ! பாவி! கொல்லுகிறான்!" என்று புலம்பிக் கொண்டே அப்பால் போய் விழுந்தார் பண்ணையார்.

அவர் போட்ட சத்தத்தைக் கேட்டு, அருகில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் ஓடிவந்து முதலாளியைத் தூக்கினார். விழுந்த வேகத்தில் அவருக்கு மண்டையில் காயம் ஏற்பட்டது. அவ்வளவே! சிலநாட்களில் குணமானார்.

ஆனால் அய்யாசாமிக்கும் எனக்கும் கிடைத்தது என்ன?

அய்யாசாமிக்கு மூன்று வருடக் கடுங்காவல் தண்டனை கொடுத்துச் சிறைக்கு அனுப்பினார்கள். எனக்குப் பண்ணையார் வீட்டு வேலை போயிற்று. அதன் பிறகு இங்கும் அங்கும் அலைந்து நான் மூன்று வருஷங்களுக்கு முன் உங்களிடம் வந்து சேர்ந்தேன். அதற்குப் பிறகு உங்களுக்குத்தான் தெரியுமே!" என்று கூறி முடித்தாள் அஞ்சலை.

"நீ இங்கிருப்பது அய்யாசாமிக்கு எப்படித் தெரிந்தது?" என்றேன் நான்.

"அதுவா! நமது வீட்டில் வேலை செய்து வந்தானே குப்பன், அவன் மூலம் நான் இருக்குமிடத்தை அய்யாசாமி தெரிந்து கொண்டாராம்."

"குப்பன் நம்ம குழந்தையின் சங்கிலியைத் திருடியதற்காகக் கோயம்புத்தூர் ஜெயிலில் இருக்கிறானே!" என்றேன்.

"அய்யாசாமியும் கோயம்புத்தூர் ஜெயிலில்தான் இருந்தார். குப்பன் நம்ம வீட்டில் வேலை செய்து வந்த போது, என் முழுக் கதையையும் அவனிடம் நான் சொல்லி யிருக்கிறேன். ஜெயிலிலே இரண்டு பேரும் சந்தித்துப் பேசிக் கொண்ட போது, குப்பன் என் இருப்பிடத்தை அவருக்குச் சொன்னானாம். நேற்றுத்தான் அவர் விடுதலையானாராம். இரவு பத்து மணிக்கு இங்கு வந்து சேர்ந்தார்."

அப்பாடாவென்று பெருமூச்சுவிட்ட பிறகு நான் அஞ்சலையைப் பார்த்து, "அஞ்சலை, என்ன இருந்தாலும் நீ அதிர்ஷ்டசாலிதான்!" என்றேன்.

"என்ன அதிர்ஷ்டசாலி, போங்க. பொன்னான தீபாவளியன்று வந்த அவருக்கு ஒரு புதுத் துணி வாங்க முடியவில்லையே என்று வருத்தமாயிருக்கு."

"இருக்கும், இருக்கும்."

அப்போது வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் ஜானகி. அவள் கையில் புதுப் புடவை யிருந்தது.

"என்ன, ஜானகி! கையில் ஏது புதுப் புடவை?" என்றேன்.

"அஞ்சலை உங்களிடம் சொல்லி வந்த கதையை நானும் அறையிலிருந்து கேட்டுக் கொண்டுதானிருந்தேன். பாவம்! கண்ணீரில் வளர்ந்தவள். இனியாவது அவள் வாழ்வு இன்ப ஊற்றாக மாற வேண்டும் என்று வாழ்த்தி அவளுக்கு, நீங்கள் எனக்கென்று வாங்கி வந்த புதுப் புடவையைத் தரப் போகிறேன். ஒரு பெண்ணின் கஷ்டம் மற்றொரு பெண்ணுக்குத்தான் நன்றாய்த்தெரியும். நாம் எத்தனையோ தீபாவளிகளை இதற்கு முன் கொண்டாடியாகி விட்டது. எதிர்பாராது அஞ்சலைக்கு வந்த தீபாவளியை அவள் ஆனந்தமாகத் தன் கணவனுடன் கொண்டாடட்டும்" என்று சொல்லிக் கொண்டே ஜானகி அஞ்சலையிடம் புடவையைக் கொடுத்தாள். நான்மட்டும் ஜானகியின் உதார குணத்துக்குக் குறைந்தவனா, என்ன?

உள்ளே சென்று எனக்கென்று நான் வாங்கி வைத்திருந்த புதுத் துணியை அஞ்சலையிடம் கொடுத்து, "அய்யாசாமியிடம் இதைக் கொடு. இரண்டு பேரும் எண்ணெய் தேய்த்து முழுகின பிறகு புது உடைகளைக் கட்டிக் கொண்டு இங்கு வாருங்கள். உங்கள் இரண்டு பேருக்கும் எங்கள் வீட்டில் கல்யாண விருந்து" என்றேன்.

அப்போது அஞ்சலையின் முகத்தில் புரண்டோடிய மகிழ்ச்சி அலைகளை அந்த இருட்டில் எங்களால் காண முடியாவிட்டாலும், "இதெல்லாம் என்னத்துக்குங்க. உங்கள் அன்பு மட்டும் இருந்தால், அதுவே போதும்!" என்ற அவள் நன்றி மொழிகள் அவளுடைய உள்ளத்தை எடுத்துக் காட்டின.


·SANFORIZED·
REGD TD MK
SHRUNK FABRIC
Arvind
QUALITY FABRICS
ஷர்டிங்குகள்
பாப்ளின்கள்
கோட்டிங்குகள்
மற்றும்
பல ரக கலர்
பிரிண்டுகள்
அரவிந்த் மில்ஸ் லிட்.
அஹமதாபாத் - 2


இதன் இனிமையான மணம்
உங்களை மகிழ்விக்கும்.
காஸ்டரோமாகூந்தல்தைலம்பிரான்ஸ்
தேசத்திலுள்ள வாசனை மிக்க புஷ்பங்
களிலிருந்து தயார் செய்யப்படுகிறது.
இம் மாதிரி வாசனை மிக்க வதைலம்
இது நாள் வரை நீங்கள் உபயோகம்
செய்திருக்கமாட்டீர்கள். தினமும் காஸ்
டரோமா உபயோகிப்பதால் தீவிரமாக
கேச வளர்ச்சி ஏற்படுவதுடன், கேசத்
திற்கு புது வாழ்வும் கிடைக்கிறது.
கண்ணுக்கும் குளிர்ச்சி தருகிறது.
கருமையானதும், அழ
கானதும், நீளமானது
மான கேசத்திற்கு
காஸ்டரோமா
வாசனை தைலம்
BOCIL
ஸ்டாண்டர்ட் சைஸ் பாட்டில்
ரூ 1/10
பெரிய சைஸ் பாட்டில் ரூ 3/12
(உள் நாட்டு வரிகள் தனி)
போஸில்
தபால் பெட்டி நீ. 1611,
பம்பாய்-1.
BOCIL BOCIL
இனம்
டோக்கன்
K/5/10
5 டோக்கன் பிடிக்கப்பட்ட காஸ்ட
ரோமா பாட்டில் இனமாக கிடைக்க,
எட்டு அணா தபால் தலைகளுடன், உங்
கள் பெயர், விலாஸத்தை இந்த டோக்
கனுடன் சேர்த்து போஸில் தபால்
பெட்டி 1611, பம்பாய்-1க்கு அனுப்பவும்.
TAL DOC.36.1
டிஸ்ட்ரிபியூட்டர்கள் :
மெஸர்ஸ் கெனடர்ஸ், அவிநாசி ரோடு, கோயமுத்தூர்
மெஸர்ஸ் டேவிட் & கம்பெனி, (பிரைவேட்) லிமிடெட்
310/311, லிங்கி செட்டித் தெரு, சென்னை

தீபாவளி



ஆண்டிற் கொன்றும் தீபாவளி
அருமை மிக்க தீபாவளி
வாண்டு முதலாய் பெரியவரும்
வாழ்த்தும் இனிய தீபாவளி

அசுரத் தனத்தால் சீரழிந்த
அரக்கன் ஒழிந்த தீபாவளி
அசுரத் தனங்கள் ஒழிந்திடவே
அறிவைப் புகட்டும் தீபாவளி

எண்ணில் அடங்காப் பட்சணங்கள்
ஏற்ற ஆடை அத்துடனே
வண்ண வண்ண மத்தாப்பு
வழங்கும் அருமைத் தீபாவளி

அன்பு வேண்டும் மனிதர்க்கு
அதுவே வழியாம் உய்வதற்கு
என்றே விளக்கிடும் தீபாவளி
இதனைப் போற்றி மகிழ்வோமே!

தி.வி. அரிகிருஷ்ணன்



ஊமை ராஜா

துரோணன்

9. எத்தர்களுக்கு எத்தன்!

மாந்தோப்பில் அமர்ந்திருந்த நால்வரும் மங்கலான நிலவொளியில் துணிப் பையிலிருந்து கீழே விழுந்த நாணயங்களை எண்ணத் தொடங்கினர். முக்காடிட்ட உருவம் இன்னும் அவர்களது நடவடிக்கையைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தது. அதன் தலையிலிருந்த முண்டாசுக் கட்டும், போர்த்தியிருந்த போர்வையும் அவ்வுருவை ஏதோவொரு கரும்பூதம் போலவே வேஷமிட்டிருந்தது.

நாணயங்களை எண்ணிக் கொண்டே ஒருவன், "அரண்மனையிலிருந்து வருவதற்கு ஏன் இவ்வளவு நேரமாயிற்று?" என்று துணிப்பையைக் கொண்டு வந்தவனைக் கேட்டான்.

"அரண்மனையிலிருந்து காவலாளிகளெல்லாம் தூங்கும் சமயமாகப் பார்த்துத்தானே அரண்மனைக்குப் போயிருந்த நாங்கள் இருவரும் புறப்பட முடியும். அதனால் காலதாமதமாகிவிட்டது!" என்றான் பணப்பையைக் கொண்டுவந்தவன்.

"யாரும் உங்கள் இருவரையும் கவனித்து விடவில்லையே? அரண்மனைச் சேவகர்களின் கையில் நாம் சிக்கிவிட்டால் நம்பாடு அதோகதிதான்!" என்றான் ஒருவன்.

"அட போடா, பயந்தாங்கொள்ளி! ராணியே நமக்கு உதவி செய்யும்பொழுது அரண்மனைச் சேவகர்களால் நம்மை என்ன செய்து விட முடியும்?" என்றான் அவர்களில் ஒருவன்.

இதற்குள் நாணயங்கள் எண்ணி முடித்து, அவர்கள் பங்கு பிரித்துக் கொள்ள ஆரம்பித்தனர்.

அவர்களுக்குள் 'கசமுச' வென்று இரகசியமான பேச்சுக்கள் ஆரம்பித்தன. பின்னர், ஒருவருக்கொருவர் கொஞ்சம் மனத்தாங்கல்களுடனேயே பேசிக்கொண்டனர். அதன் முடிவாகத்தான், அவர்களது சம்பாஷணைகள் சற்று உரத்துக் கேட்கத் தொடங்கின! மரத்தடியில் ஒரு ஐந்தாமவன், முக்காடிட்டவன் பதுங்கியிருந்தானல்லவா? அவனது கூர்மையான செவிகளுக்கு இப்பொழுதுதான் அவை கேட்டன!

ஒருவன் சற்றுக் கடுமையுடன் கூறினான்:— "ஏய்! நீங்களெல்லாம் நன்றி கெட்ட பசங்கள்! இன்றைக்கு நான் முயற்சி செய்யாவிட்டால் ராணியார் மான இதைக் கொடுத்திருப்பார்களா? அன்றைக்கு இரவு எத்தனை கஷ்டங்கள் பட்டிருக்கிறோம்? மஞ்சத்தைத் தூக்கிக் கொண்டு, இருபது காததூரமல்லவா ஓடியிருக்கிறோம்? அன்றைக்குத் துரத்திக்கொண்டு வந்த புலி நம்மைக் கொன்

திருந்தாலும் கொன்றதுதானே? இந்தக் கஷ்டங்களையெல்லாம் நீங்கள் யாராவது மகாராணியம்மாளிடம் சொன்னதுண்டா? வாயை மூடிக் கொண்டு, அவர்கள் கொடுத்த நாலு கழஞ்சியையும் வாங்கிக் கொண்டீர்களே? இன்றைக்கு நான் முயற்சி செய்யக் கொண்டுதானே இவையெல்லாம் கிடைத்தன? ஆகையினாலே, இதிலே சரிபாதிப்பங்கு எனக்குச் சேர்ந்தது! பாக்கியைத்தான் நீங்கள் மூன்று பேரும் எடுத்துக் கொள்ள வேண்டும்.''

''நீ ரொம்பப் பேராசைக்காரன்! நாம் நாலு பேரும் தானே கஷ்டப்பட்டோம்? நம் நாலு பேரையும் சமமாக எடுத்துக் கொள்ளும்படி தானே மகாராணி கொடுத்தாங்க?—'' இவ்வாறு கூறியபடியே மற்றொருவன் அந்த நாணயங்களையெல்லாம் தன் பக்கமாக நகர்த்திக் கொண்டான்.

மூன்றாமவன், ''ஏய், ஜாக்கிரதை! இதை நாலு பங்கு போடுகிறதுதான் நியாயம். வீணாக எங்கள் கோபத்தைக் கிளப்பாதே!'' என்றான்.

''போடா பயந்தாங் கொள்ளி! நீ சொல்கிறபடி கேட்காவிட்டால் என்னை என்ன செய்து விடுவாய்?'' என்றான் முதலில் பேசியவன்.

அவர்களது வாக்குவாதங்கள் முற்றிக் கொண்டிருந்தன. அந்த முதல்வன் பரபரப்புடன் கீழிருந்த நாணயங்களை வாரி மீண்டும் பைக்குள் போட்டு மூட்டையாகக் கட்டி வைத்தான். இப்பொழுது தான், முக்காடிட்டு மரத்தடியில் பதுங்கியிருந்த புதியவன் கனைத்துக் கொண்டவாறு, அவர்கள் எதிரே வந்து நின்றான்! அடுத்தகணம், அந்நால்வரும் விழித்தவாறு அவனை வியப்புடன் நோக்கினர்.

புதியவன் தன் தொண்டையைக் கனைத்த வண்ணம், ''என்ன அண்ணே, இப்படிச் செய்து விட்டீங்க?—'' என்று கூறினான்.

அவர்களில் ஒருவருமே சற்று நேரம் வரையில் பதிலளிக்கவில்லை. ஒருவன், ''நீ யார்? எங்கே வந்தாய்?—'' என்றான் அதட்டலாக.

''சரியாய்ப்போச்சு! இருபது நாட்களுக்கு முன்னே மகேந்திரபுரியிலேயிருந்து இங்கே வந்து வேலைக்கு அமரவில்லையா?—'' என்றான் புதியவன்.

''சரி, இப்போ எங்கே வந்தாய்?—'' என்று அந்நால்வரும் ஒருமிக்க அவனிடம் கேட்டனர்.

''எங்கே வந்தேனா? ராணியம்மாள் வரச் சொல்லித்தான் வந்திருக்கிறேன். மூட்டையைக் கையிலே வாங்கிக் கொண்டதும் ஓட்டமாக ஓடி வந்து விட்டீர்களே! உங்களை எங்கேயெல்லாம் தேடிக் கொண்டு அலைந்தேன் தெரியுமா? அன்றைக்கு நீங்கள் மஞ்சத்தைத் தூக்கிக் கொண்டு போவதற்கு என்னுடைய ஒத்தாசையில்லாமற் போனால் முடியுமா? நான்தானே விளக்கையெல்லாம் அணைத்து, கதவையெல்லாம் திறந்து வைத்து—ஏற்பாடெல்லாம் செய்தேன்? இப்போது ராணியம்மாள் உங்களிடம் கொடுத்த மூட்டையில் எனக்கும் பங்கு உண்டு. அதைப் போடுங்க ஐந்து பங்கு!'' என்றான் அந்தப் புதிய மனிதன்.

அவர்கள் நால்வரும் பிரமித்தவாறு ஒருவரையொருவர் பார்த்தபடி உட்கார்ந்திருந்தனர். அப்பொழுது அவர்கள் நால்வர் மனத்திலும், எப்படி இவனை ஏமாற்றலாமென்பதைப் பற்



நிபய தீவிரமான சிந்தனைகள் எழுந்து கொண்டிருந்தன. நின்று கொண்டிருந்த அந்தப்புதியவன், அவசரத்துடன் தன் மடியைத் துழாவி, அதிலிருந்த பொட்டலத்தை யெடுத்துக் கொண்டான். எல்லாம் ஒரே விநாடிக்குள், கண்மூடிக் கண் திறப்பதற்குள் நடந்து விட்டன. அடுத்த கணம்-அங்கு 'கூகூ'வென்ற கூச்சல்கள் எழுந்தன! கீழே அவர்களின் நடுவேயிருந்த மூட்டையைச் 'சரே'லெனப் பாய்ந்து எடுத்துப் புதிய மனிதன் சிட்டாய்ப் பறந்தான்!

கண்களில் விழுந்த மிளகாய்ப் பொடியின் எரிச்சலைத் தாள மாட்டாது, அந்த நான்கு மனிதர்களும் ஒருவரை யொருவர் அடித்துக் கொண்டனர். (தொடரும்)

உலோகத்தின் ராஜா!

உலகில் பல இரும்புச் சுரங்கங்கள் இருக்கின்றன. அவற்றில் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஸ்வீடன், இங்கிலாந்து ஆகியதேசங்களில் இரும்பு அதிகமாகக் கிடைக்கிறது. இங்கிலாந்துக்கு அடுத்தபடியாக இந்தியாவில் அதிக இரும்பு கிடைக்கிறது. மைசூர் ராஜ்யம், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா முதலிய இடங்களில் இரும்புச் சுரங்கங்கள் இருக்கின்றன.

இரும்புச் சுரங்கங்களுக்கு அருகில் சென்று பார்த்தால் அங்குள்ள மண் சிவப்பாகக் காணப்படும்.

இந்தச் சிவப்புப் பொருள் எப்படி இரும்பாக மாறுகிறது? சுரங்கத்திலிருந்து கொண்டு போகும் இந்தச் சிவப்பு நிற இரும்பை எப்படி அசல் இரும்பாக மாற்றுகிறார்கள்?

சுரங்கத்திலுள்ள இந்த இரும்பு சிந்தூரத்தில் பிராணவாயு (Oxygen) கலந்திருக்கிறது. இரும்பு சிந்தூரத்திலுள்ள பிராணவாயுவை அகற்றி விட்டால் அது அசல் இரும்பாக ஆகிவிடும்.

இந்த இரும்புசிந்தூரத்தைத் தொழிற்சாலையில் உள்ள ஒரு பெரிய குகை போன்ற உலையில் வைத்துக் காய்ச்சுவார்கள். உஷ்ணம் அதிகரித்ததும்



பிராணவாயு சிந்தூரத்திலிருந்து நீங்கி விடும். பிராணவாயு நீங்கியதும் இரும்பு தனியாக உருவாகி விடும். ஆறு மணிக்கு ஒரு தடவை எரித்து உருவாக்கப்பட்ட இரும்பை வெளியே எடுத்துக் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள்.

உலையில் வைத்து எரிக்கப்பட்ட இரும்பை உருக்கு இரும்பு என்று கூறுகிறோம். இதனைப் பலவிதமாக உபயோகிக்கலாம். பல உருவங்களில் வார்ப்படங்களாகவும் செய்யலாம்.





இப்படிச் செய்வதற்கு வார்ப்பு இரும்பு என்று கூறுகிறோம். அநேகமாக எஃகு செய்வதற்கு உருக்கு இரும்பை மேலும் நன்றாகச் சுத்தப் படுத்துவார்கள். சுத்தப் படுத்துவதனால் மீண்டும் அதை உலையில் வைத்துக் காய்ச்சி இதிலுள்ள வேண்டாத அம்சங்களை விலக்கி விடுவார்கள். இப்போது இது ஸ்டீல் என்றும் எஃகு என்றும் கூறப்படுகிறது. உருக்கு இரும்பைவிட எஃகு மிகவும் கடினமானது.

எஃகை மறுபடியும் காய்ச்சித் தகடாகவும், கம்பங்களாகவும் பல உருவங்களில் செய்வார்கள். ரயில் என்ஜின், ஆகாய விமானம், மோட்டார், டிராக்டர், தண்டவாளம், பாலம் முதலியவை எஃகிலிருந்தே தயாராகின்றன. இரும்பை உலோகங்களின் ராஜா என்று கூறிய போதிலும், அது பல வகைகளில் நமக்கு உபயோகப்பட்ட போதிலும், அதனிடம் ஒரு குறை இருக்கிறது. அது துருப் பிடிக்கும் தன்மை வாய்ந்தது என்பதே அந்தக் குறை. ஆனால் [illegible]றின் மீது வர்ணம் பூசித் துருப் பிடிக்காமல் காப்பாற்ற முடியும்.

இரும்பில் ஏன் துருப்பிடிக்கிறதென்று உங்களுக்குத் தெரியுமா? காற்றோ ஈரமோ இரும்பின் மீது பட்டால் துருப் பிடிக்கும். நமது வீடுகளிலும், தோட்டங்களிலும் உபயோகப்படும் இரும்பு மீது எண்ணெய் பூசிவிட்டால் ஈரமோ, காற்றோ பட்டாலும் துருப் பிடிக்காது. வர்ணம் பூசுவதும் இதற்காகத்தான்!


வாய்நாற்றத் தொல்லைக்கு முற்றுப்புள்ளி!
ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த
அற்புதமான பச்சை 'கோலினாஸ்'
★ வாய் நாற்றத்தை அகற்றுகிறது
★ பற்களை சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது
★ ஈறுகளுக்குப் பலமளிக்கிறது
★ பற்களைச் சுத்தமாயும் பிரகாசத்துடனும் வைக்கிறது
Kolynos
Chlorophyll
'கோலினாஸ்' நுரை
தனிச் சிறப்பு வாய்ந்தது





'அனஸின்'

நான்கு மருந்துகள் அடங்கியுள்ளது.

'அனஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனஸினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் —

1. கொயினா: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்கடிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளது.

அனஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனஸின்' இருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனஸினையே கேட்டு வாங்குங்கள்.



லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

A.1



7. பழைய நினைவுகள்

சமணத் துறவி நின்ற இடத்துக்கு வந்தான் சித்திராங்க பூபதி. மலைச் சரிவில் அந்த மகிழ மரத்தின் அடியில் நின்று துறவி சுட்டிக் காட்டிய திக்கை நோக்கினான்! தொலைவிலே குதிரையில் சில வீரர்கள் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

''என்ன இளவரசே! தலை சுற்றுகிறதா? குங்கும மாளிகையிலிருந்து தப்பித்து வந்திருக்கிறீர்கள். தங்களைப் பின்தொடர்ந்து வலை வீசுகிறது போல ஒரு பெரும் படை வருகிறதே என்று திகைக்கிறீர்கள்! அப்படித்தானே?'' என்று கேட்டார் துறவி.

''பெரியவரே! இனிமேல் யார் படையெடுத்து வந்தாலும் சரி; எனக்குக் கவலையில்லை. சாருகேசியின் வீர வரலாற்றைக் கேட்ட பிறகு, என்னுடைய உயிரில் எனக்கு இருந்த மோகம் முற்றிலும் நீங்கிவிட்டது. எனது புண்ணியத் தாய் நாட்டுக்காக அந்த உத்தமப் பெண்மணி எத்தனை மகத்தான தியாகம் செய்திருக்கிறாள் என்பதை எண்ணும்போது, இதுவரை நான் எவ்வளவு கோழையாக இருந்து விட்டேன் என்று அவமானப்படுகிறேன். எந்தப் பேரியாழுக்காக அந்த உத்தமி தனது உயிரையே அர்ப்பணம் செய்தாளோ அதே பேரியாழுக்காகத்தான் நான் இந்தத் தமிழ் நாட்டுக்கு வந்திருக்கிறேன்! என்னுடைய அந்த இலட்சியத்தை மறந்துவிட்டு இதுவரை நான் பொழுதெல்லாம் வீணாகக் கழித்திருக்கிறேன். அந்தப் பேரியாழ் எங்கேயிருக்கிறது என்ற இரகசியத்தைத் தெரிந்து கொண்ட பிறகுங்கூட, நான் உயிருக்குப் பயந்து இப்படி மாறுவேடத்திலே தப்பித்து வந்திருக்கிறேன்! இதைவிட அவமானம் வேறு என்ன உண்டு! இதைவிடக் கோழைத்தனமான காரியம் இந்த உலகில் இருக்கிறதா!''

வீராவேசத்தோடு பேசினான் பூபதி. சமணத் துறவி சிரித்தார்.


''இளவரசே! தங்களுடைய கையும் காலும் உணர்ச்சியினால் ஆடுவதைப் பார்க்கும்போது, எனக்குப் பயமாக இருக்கிறது! கால் சறுக்கிவிடக் கூடாதே என்று அஞ்சுகிறேன். மெதுவாக நடந்து செல்லுவோம். அந்தக் குதிரைப் படை எதிரிகளின் படையில்லை! எதிரிதான் உங்களைப் பின் தொடர்ந்து வருகிறான் என்று நினைத்து வீணாக வீராவேசம்

அடைகிறீர்களே! அந்த வீரத்தையெல்லாம் உறையிலே செருகிவையுங்கள். சந்தர்ப்பம் வரும்போது பயன்படுத்திக் கொள்ளலாம்! இப்பொழுது மெதுவாக என்னோடு நடந்துவாருங்கள். இந்த மலைச் சரிவைக் கடந்து சென்று நம்முடைய குகைக்குப் போய் விடுவோம். அந்தக் குதிரைப் படையும் அங்கேதான் வந்து சேரும்!''

இப்படிச் சொல்லிக் கொண்டே துறவி மேலே நடந்தார். அவரைப் பின் தொடர்ந்து கொண்டே சித்திராங்க பூபதி கேட்டான்.

''பெரியவரே! அப்படியானால் இந்தக் குதிரைப் படை யாருடையது? இந்த வீரர்கள் எல்லாரும் எதற்காக இங்கே வருகிறார்கள்?''


''இளவரசே! எதற்காக வருகிறார்கள் என்ற கேள்வியே அனாவசியம். வேறு எதற்காக வருவார்கள்! வலம்புரித் தீவின் இளவரசராகிய உங்களைப் பார்க்கத்தான் வருகிறார்கள்! இன்று தமிழ் நாட்டின் அரசியற் கொந்தளிப்பிலே உங்களுடைய வலம்புரித் தீவு அல்லவா முக்கியமான ஸ்தானத்தை வகிக்கிறது! நந்திவர்மனுடைய கட்சியிலும், எதிரியாகிய சித்திரமாயனின் கட்சியிலும் — இரண்டு கட்சியிலும் — இப்பொழுது வலம்புரித் தீவின் ஒத்துழைப்பை அல்லவா எதிர்பார்க்கிறார்கள்! எனவே படை வீரர்கள் எல்லாம் உங்களைப் பார்க்கத்தானே வருவார்கள்!''



சமணத் துறவி இவ்வாறு சொல்லி விட்டு ஓரக்கண்ணால் சித்திராங்க பூபதியைப் பார்த்தார். பூபதியோ பதிலே பேசாமல் மலைச் சரிவில் நடந்து கொண்டிருந்தான். அவனுடைய உள்ளம் சமணத் துறவி குறிப்பிட்ட அரசியற் கொந்தளிப்பைப் பற்றியே சிந்தனை செய்து கொண்டிருந்தது.


அத்தனை தூரம் சித்திராங்க பூபதியின் சிந்தனையைக் கிளறிய அரசியற் கொந்தளிப்பு என்ன என்பதை நாமும் இங்கே நினைவு படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

பல்லவ அரசன் பரமேசுவர வர்மன் தனக்குப் பின் அரசாளுவதற்குச் சந்ததியில்லாமல் மடிந்தான் என்பது ஏற்கனவே நமக்குத் தெரியும். அதன் பிறகு நடந்த சம்பவங்களை இந்தக் கதையின் தொடக்கத்திலேயே பார்த்தோம். அதாவது பல்லவ வம்சத்தின் பிரதானிகளும், அரசியற் பிரமுகர்களும், உதய சந்திரன் என்ற சேனைத் தலைவரும் ஒன்று கூடி, இனி அரச பீடத்தில் யாரை அமர்த்துவது என்று யோசித்தார்கள். அந்த யோசனையின் முடிவில், பல்லவர்களின் தாயாதியான இரணியவர்மரைப் போய்ப் பார்த்து அவரையே அரசராகும்படி வேண்டிக் கொள்ளலாம் என்று தீர்மானித்தார்கள். அவ்விதமே இரணிய வர்மரிடம் சொன்னார்கள். அவரோ தமக்கு வயதாகி விட்டது என்று சொல்லி அரசாட்சிப் பொறுப்பை ஏற்க மறுத்துவிட்டார். பிறகு அவருடைய புத்திரர்களைக் கேட்டார்கள். முதல் மூன்று புத்திரர்களான ஸ்ரீமல்லன், ரணமல்லன், சங்கராம மல்லன் ஆகியோரும் அரசாட்சிப் பொறுப்பு தங்களுக்கு ஒத்து வராது என்று கண்டிப்பாகக் கூறி விட்டார்கள்! உதய சந்திரன் என்ன செய்தார்? அப்படியே மனம் ஒடிந்து ஊருக்குத் திரும்பி விட்டாரா? இல்லை! இரணியவர்மரின் நான்காவது புதல்வனைப் போய்க் கேட்டார்! நான்காவது புதல்வன் அப்பொழுது என்ன செய்து கொண்டிருந்தான்? பன்னிரண்டு வயதுப் பையன், மாந்தோப்பிலே தன்னுடைய சகாக்களுடன் அரச விசாரணை நடத்திக் கொண்டிருந்தான்! தான் அரசனாகவும், தனது தோழர்கள் மந்திரிகளாகவும் நின்று மாந்தோப்பிலே அரசாட்சி நாடகம் நடத்திக் கொண்டிருந்தான், அந்தப் பன்னிரண்டு வயதுச் சிறுவன்! இதைப் பார்த்ததும் உதய சந்திரனுக்குக் கண் கலங்கியது. பிறக்கும் போதே அரசனாகப் பிறந்தவன் என்றால் இவன் தான் என்பதாகத் தீர்மானித்து, அந்தச் சிறுவனையே பல்லவ சாம்ராஜ்



யத்தின் பட்டத்தரசனாகத் தேர்ந்தெடுத்துக் காஞ்சிமா நகரத்துக்கு அழைத்து வந்தார்கள். யானைமேல் அம்பாரியிலே அழைத்து வரப்பட்ட அந்தச் சிறுவனே நந்திவர்மன் என்று பெயர் தரித்துச் சிம்மாசனம் ஏறினான்.

நந்திவர்மன் பட்டம் சூடியதும் குழப்பம் நின்றதா? இல்லை! பட்டத்துக்கு மனிதர்கள் இல்லை என்ற பெருங் குழப்பம் நின்று போவதற்குப் பதிலாக இப்பொழுது அதைவிடப் பெரிய ஒரு



புதிய குழப்பம் தலையெடுத்தது! இறந்துபோன பரமேசுவர வர்ம மகாராஜனுக்கு இன்னொரு தாயாதிக் குடும்பம் இருந்தது! அந்தத் தாயாதிக் குடும்பத்தில் சித்திரமாயன் என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். பரமேசுவர வர்மர் இறந்ததும் அரசாட்சி தனக்குத்தான் வரும் என்று எதிர்பார்த்தான் அந்தச் சித்திரமாயன்! ஆனால் இப்பொழுதுதான் எதிர் பார்த்ததற்கு விரோதமாக நந்திவர்மன் என்ற சிறுவன் அரசனாக மகுடம் தரித்ததும், சித்திரமாயனுக்கு அடங்காத கோபமும் ஆத்திரமும் ஏற்பட்டன! உதயசந்திரனே நந்திவர்மனுக்குப் பட்டம் சூட்டியதோடு நிற்காமல் சித்திரமாயன் அரசனாவதற்குத் தகுதி யில்லாதவன் என்ற விஷயத்தையும் பிரதானிகளிடம் எடுத்துச் சொல்லி வந்தார்! ''சித்திரமாயன் சாமர்த்தியம் இல்லாதவன். பல்லவ அரசாட்சியை நிர்வகிப்பதற்கு வேண்டிய வீரமோ, பெருமிதமோ, ஆற்றலோ சித்திரமாயனுக்குக் கிடையாது!'' என்று உதயசந்திரன் வெளிப்படையாகப் பொதுமக்களிடமும் பிரதானிகளிடமும் சொல்லி வந்தார். இது, சித்திரமாயனுடைய கோபத்தையும் ஆத்திரத்தையும் பன்மடங்கு அதிகப் படுத்தி விட்டது!

சித்திரமாயன் மனம் பொருமினான். எப்படியாவது நந்திவர்மனைச் சிம்மாசனத்திலிருந்து இறக்கி விட்டு அந்த மகத்தான பல்லவ பீடத்தில் தான்

அமர்ந்துவிட வேண்டும் என்று ஆத்திரப் பட்டான் அவன்! இந்த ஆத்திரத்தை நன்முக அறிந்து கொண்ட வீர விக்கிரமன் என்ற சூழ்ச்சியாளன் சித்திர மாயனுக்குப் பல சகாயங்கள் செய்ய ஆரம்பித்தான்.

வீர விக்கிரமனுடைய சூழ்ச்சிகளுக்கு எதிர் பாராத ஒரு உதவி அந்தச் சமயத்தில் கிடைத்தது! அதாவது அப்பொழுது மதுரையிலே அரசாண்டு வந்த பாண்டியர்கள் சித்திரமாயனுக்கு மிகவும் நெருங்கிய உறவினர்கள். தாய் வழியில் அன்னியோன்யமான பந்துக்கள் அவர்கள்! எனவே சித்திர மாயனை மதுரைக்கு அனுப்பினன் வீர விக்கிரமன்! அனுப்பிப் பாண்டியர்களுடைய ஒத்தாசையோடு ஒரு பெரிய படையை வலம்புரித் தீவை நோக்கிச் செலுத்திவிட்டான் வீர விக்கிரமன்!

இந்தச் சம்பவங்கள் எல்லாம்சேர்ந்து தான் அரசியற் கொந்தளிப்பாகத் தமிழ் நாட்டிலே அப்பொழுது குமைந்து கொண்டிருந்தன என்பது குங்கும மாளிகையிலிருந்து புறப்பட்டபோதே சித்திராங்கபூபதிக்குத் தெரியும். எனவே "அரசியற் கொந்தளிப்பு" என்று சமணத்துறவி குறிப்பிட்டதும், பூபதியின் மனம் இந்தச் சம்பவங்களைப் பற்றியே எண்ணி எண்ணி வட்டம் சுற்றிக் கொண்டிருந்தது. இதைக் கவனித்த சமணத் துறவி பூபதியைப் பார்த்துச் சொல்லுவார்:

"இளவரசே! இத்தனை கொந்தளிப்புக்கு மத்தியில் உங்களுடைய வலம்புரித் தீவில் என்ன நடந்தது, உங்கள் அன்னையின் மன நிலை என்ன ஆகும் என்றெல்லாம் நீங்கள் கவலைப்படுவது இயல்பு தான். இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்களுடைய கவலையெல்லாம் நீங்கி விடும் என்று உறுதி கூறுகிறேன். குகைக்குப் போய்ச் சேருவதற்குள் வலம்புரித் தீவின் நடப்புகள் இரண்டொன்றை மட்டும் உங்களுக்குச் சொல்ல வேண்டியது என்னுடைய முக்கிய கடமையாகும்!"

இவ்வாறு தொடங்கி வலம்புரித் தீவுக்கு உதயசந்திரன் அனுப்பிய தூதுவர்கள் என்ன ஆனர்கள் என்ற விவரத்தைக் கூற ஆரம்பித்தார் துறவி.

எட்டாம் அத்தியாயம்

குதிரைப் படை

"சித்திராங்க பூபதி! சித்தன்ன வாசல் குகைக்குள்ளே போனதும் நீங்கள் ஒரு முக்கியமான கேள்விக்கு முடிவு சொல்ல வேண்டிய நிலை ஏற்படும். ஆகையினல் இப்பொழுதே எச்சரிக்கை செய்து விடுகிறேன். உங்களுடைய திருமணத்தைப் பற்றிய முடிவு தான் அது!" என்றுர் துறவி.

"பெரியவரே! என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? என்னுடைய திருமணத்தைப் பற்றியா? அதற்கும் அதோ தெரிகிற அந்தக் குதிரைப் படைகளுக்கும் என்ன சம்பந்தம்?" என்று திகைப்போடு கேட்டான் பூபதி!

"நிறைய சம்பந்தம் இருக்கிறது! அது மட்டுமில்லை. இன்றைய அரசியற் கொந்தளிப்புக்கும் உங்களுடைய திருமணத்துக்குமே ஒரு நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது!" என்று ஒரு போடு போட்டார். பூபதிக்கு ஆத்திரம் வந்தது! துறவி சொன்னர் :—

"இளவரசே! உங்களுடைய வலம்புரித் தீவை நாடி இரண்டு கட்சியாளர்களும் தூது சென்றிருக்கிருர்கள். முதலாவது கட்சி இப்பொழுது அரசாள்கிற நந்திவர்மரின் கட்சி. அதாவது உதயசந்திரன் அனுப்பிய தூதர்கள்! அவர்கள் உங்களுடைய வலம்புரித் தீவுக்குச் சென்று திருமண உறவு பேசியிருக்கிருர்கள். முத்தரையர்களின் அரசகுமாரியை உங்களுக்கு மணம் செய்து கொடுப்பதாகவும், உங்கள் அரச குடும்பமும், முத்தரையர் குடும்பமும் ஒன்ருகி விட்டால் தமிழ் நாட்டுக்கே அது நன்மையாக முடியும் என்றும் உதயசந்திரன் சொல்லியனுப்பியிருக்கிருர்!"

துறவி இப்படிச் சொல்லும்போதே பூபதி குறுக்கிட்டான்: "அதாவது முத்தரையர்கள் இப்பொழுது நந்திவர்மரின் கட்சியில் இருக்கிருர்கள். அது தானே விஷயம்?"

"ஆமாம். முத்தரையர்கள் இப்பொழுது சித்திரமாயனுக்கு எதிராக நந்திவர்மரின் கட்சியில் உதயசந்திரனுக்குப் பக்க பலமாக நிற்கிருர்கள்."

துறவியின் இந்த வார்த்தைகளைப் பூரணமான கவனத்தோடு செவியில் வாங்கிக் கொண்டான் பூபதி. பிறகு சமணத் துறவியிடம் கேட்டான்: "பெரியவரே, இரண்டாவது கட்சியார்களும் வலம்புரித் தீவுக்குச் சென்றிருப்பதாகச் சொன்னீர்களே, அவர்களுடைய நோக்கம் என்ன?"

இதற்கு விடை சொல்லும் முன்பு துறவி முதலாவது தூதுக்கு வலம்புரித் தீவிலே என்ன மறுமொழி கிடைத்தது என்பதை வர்ணித்தார்.

"பூபதி! உதயசந்திரன் அனுப்பிய தூதுவர் தமது தூதை முடித்துக் கொண்டு வெற்றியோடு தமிழ் நாட்டுக்குப் புறப்பட்டார். உங்களுடைய அன்னை முத்தரையர்களின் திருமண உறவுக்குச் சம்மதம் கூறியதோடு, உங்களுடைய சம்மதத்தைப் பெறுவதற்காக உங்கள் மந்திரநாயகத்தை இங்கே அனுப்பியிருக்கிறார், அந்தத் தூதுவர்களோடு! எனவே உங்கள் மந்திர நாயகத்திடம் நீங்கள் உங்கள் சம்மதத்தைத் தெரிவித்தாக வேண்டிய நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது!" என்றார் துறவி. "அதிருக்கட்டும். சித்திர மாயனின் தூதுவர்கள் என்ன நோக்கத்தோடு சென்றிருக்கிறார்கள்? அதைச் சொல்லாமல் நீங்கள் வேறு எதையெல்லாமோ சொல்லி என்னைக் குழப்புகிறீர்களே!" என்று ஆத்திரமாகப் பேசினான் சித்திராங்கன்.

"இளவரசே! பொறுமையை இழக்காதீர்கள்! திருமணத்தை நினைவு படுத்தும் போதே, இத்தனை ஆத்திரம் வருகிறதே! எதிரிகள் என்ன நோக்கத்தோடு போயிருக்கிறார்கள் என்பது நமக்கு எப்படித் தெரியும்? சூழ்ச்சிக்காரர்களின் திட்டம் என்ன என்பதை யூகிப்பது யாருக்குமே கஷ்டம் தான்! ஆனாலும் நான் என்ன நினைக்கிறேன் என்றால், பேரியாழும் பேரியாழோடு ஒரு நங்கையும் தருவதாகத் தூது சொல்லி யனுப்பியிருக்க வேண்டும், வீர விக்கிரமன்! உங்களுடைய அன்னையின் உள்ளத்தைக் குழப்பி, ஒரு மனமாற்றத்தை உண்டாக்க வேண்டும் என்றால் அதற்கு வேறு மார்க்கம் கிடையாது!" என்றார் துறவி.

மௌனமாக நடந்தான் சித்திராங்க பூபதி. திடீரென்று ஏதோ எண்ணியவனைப் போல் துறவியிடம் கேட்டான்: "பெரியவரே! சந்திரசூடனுடைய வரலாறு வீர விக்கிரமனுக்குத் தெரியுமோ? உங்களுக்கு இத்தனை விரிவாகத் தெரிந்திருப்பது போல் வீர விக்கிரமனுக்கும் தெரிந்திருக்குமானால், தொலைந்தது காரியம்! அன்னையின் மனத்தை எப்படியாவதுமாற்றிவிடுவான்அவன்!"

"இளவரசே! அந்த ஒரு பயம் மட்டும் உங்களுக்கு வேண்டாம்! சந்திரசூடனுடைய வரலாறு வீர விக்கிரமனுக்குத் தெரியாது! கொடும்பாளூர் வேளிர் குடும்பத்திலிருந்து சந்திரசூடன் கடல் கடந்து சென்றான் என்று மட்டும் தெரியுமே தவிர, அவன் என்ன ஆனான், வலம்புரித் தீவில் என்ன நடந்தது என்ற விவரங்களெல்லாம் தமிழ் நாட்டில் யாருக்குமே தெரியாது!"

"அப்படியானால், இப்பொழுது வீர விக்கிரமனுடைய தூதர்கள் தாங்கள் கொடும்பாளூரைச் சேர்ந்தவர்கள் என்றுதானே என் அன்னையிடம் சொல்லப் போகிறார்கள்?"

"ஆமாம். அதுமட்டுமில்லை. பாண்டியர்களின் பிரதிநிதிகளும் அவர்களோடு சென்றிருக்கிறார்கள். ஆகையால் பாண்டியர்களும் வேளிர்களும் சேர்ந்து அனுப்பிய தூதர்கள் என்றே உங்கள் அன்னையிடம் சொல்லுவார்கள்!"



"பெரியவரே! அப்படியானால் கவலையே இல்லை. கொடும்பாளூர் வேளிர்கள் என்றால் என் அன்னைக்கு இரத்தம் கொதிக்கும்! சந்திரசூடன் செய்த துரோகத்தை அவள் எப்படி மறக்க முடியும்! அதோடு பாண்டியர்கள் வேறு சேர்ந்திருக்கிறார்கள்! பாண்டியர்கள் செய்த அழிவை வலம்புரித் தீவு எப்படி மறக்கும்! எனவே இந்தத் தூதர்களுக்குச் சரியான பாடம் கற்பித்து அனுப்புவார்கள். கவலை வேண்டியதில்லை. ஆனால் ஒன்று கேட்கிறேன். சந்திரசூடனுடைய வரலாறு இந்தத் தமிழ் நாட்டில் வேறு யாருக்குமே தெரியாது என்று சொன்னீர்களே. அப்படியானால் உங்களுக்கு மட்டும் எப்படி இத்தனையும் விவரமாகத் தெரிந்தது?" என்று கேட்டான் சித்திராங்கன்.


"பூபதி! என்னைத் தவிர இந்த விவரங்கள் அனைத்தும் அறிந்தவர்கள் வேறு இருவரும் உண்டு!" என்றார் துறவி.

"அந்த இருவர் யார் என்று எனக்குச் சொல்லலாமா?"

"நிச்சயம் சொல்ல வேண்டும். அந்த விவரங்களைப் பரிபூர்ணமாக அறிந்த இருவரில் ஒருவர்தான் நேற்று மாலை உங்களோடு இசையைப் பற்றித் தர்க்கம் பண்ணி வேடிக்கை பார்த்தாரே, அந்தத் துறவி!"

"பெரியவரே! என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்? இத்தனை விவரங்களையும் தெரிந்து வைத்துக் கொண்டுதானா, அத்தனை அவநம்பிக்கையோடு என்னிடம் தர்க்கம் செய்தார்? கல்லின் மேல் அலைகள் தவழுவதாவது, அதிலிருந்து இசை ஒலிப்பதாவது என்று பரிகாசம் செய்தாரே?" என்று வியப்போடு கேட்டான் பூபதி.

"ஆமாம். அந்த இசைக் கல்லுக்குள்ளே ஒரு மென்மையான பாணன் மகளின் இதயம் பொதிந்து கிடக்கிறது



என்ற விவரம் உங்களுக்குத் தெரிந்திருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்காகவே அந்தமாதிரி உங்களைக் கோபமூட்டினார்! உங்களுக்கு அந்த விவரம் தெரியாது என்று புரிந்து கொண்டதும் மலைச் சரிவில் நின்றுவிட்டார்! நான் அந்த விவரங்களையெல்லாம் உங்களுக்குச் சொல்லவேண்டும் என்பதற்காக!"

இவ்வாறு சொல்லி மௌனமாக நின்றார் சமணத் துறவி. சித்திராங்கன் கேட்டான்: "பெரியவரே! இந்த வரலாற்றை நன்கு அறிந்த இன்னொருவர் யார்? அவர் எங்கே யிருக்கிறார்?"

பளிச்சென்று பதில்சொன்னார் துறவி: "அந்த இன்னொருவர்தான் உதயசந்திரன். அவர்தான் இன்று தமிழ் நாட்டு அரசியலில் கேந்திரமான மனிதர்! உங்களையும் உங்களுடைய கதையையும் அவர் மிக நன்றாக அறிவார்!"

"உதயசந்திரனா? அவர் ஒரே ஒரு தடவைதானே என்னைக் குங்கும மாளிகையிலே பார்த்திருக்கிறார்? அதுவும் யாழ் நங்கையின் இசை விருந்தின்போது தான் பார்த்திருக்கிறார். தனியாக நாங்கள் பேசியதே இல்லையே! என்னை எப்படி அவருக்கு நன்றாகத் தெரியும்?" என்று திகைப்போடு கேட்டான் பூபதி.

"இளவரசே! உதய சந்திரனுடைய திறமையைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. அதனால்தான் இப்படிக் கேட்கிறீர்கள். உண்மையில் உதயசந்திரன் பல தடவைகள் உங்களைப் பார்த்துப் பேசியிருக்கிறார்! உங்களுக்கே அது தெரியாது! வீணாக ஏன் குழப்பிக்கொள்ளுகிறீர்கள். 'விடிந்தால் தெரியும் வெளிச்சம்' என்று வசனம் சொல்லுவார்கள். இப்பொழுது விடிந்துவிட்டது. இனிமேல் தானாக வெளிச்சம் தெரியும். நீங்கள் கவலைப்படாதீர்கள்!"

இப்படிப் பேசிக் கொண்டே சமணத் துறவியும் பூபதியும் மலைச் சரிவில் இறங்கி வலது புறமாகத் திரும்பினார்கள். அங்கே ஒரு சிறிய குகை வாசல் தெரிந்தது.

"இதன் வழியாகச் செல்லுவோம். பயப்படாமல் உள்ளே நுழையுங்கள்!" என்றார் துறவி.


மலையின் சிறு நதி ஒன்று பாறைகளைக் குடைந்து கொண்டு சென்றிருந்தால் அந்தப் பாதை எப்படியிருக்கும்? அப்படியிருந்தது இந்த இரகசிய வழி. உள்ளே இருட்டாக இருந்தாலும், அங்கங்கே சூரியனுடைய வெளிச்சம் பாறைகளில் எப்படியெல்லாமோ நுழைந்து எதிர் அளித்துக் கொண்டு பொட்டுப் பொட்டாக மின்னியது. பாறையின் விளிம்புகளில் ஈரம் கசிந்து கொண்டிருந்தது! துறவியும் பூபதியும் மெதுவாக நடந்து சற்றுத் தூரம் செல்வதற்குள், சுரங்கப் பாதை முடிந்தது. பாறைகளின் பரப்புக்கு வந்து விட்டார்கள். சூரியன் வானத்தில் எழுந்துநின்று நல்ல பிரகாசத்தோடு ஒளிக் கற்றைகளைச் சிதறி வீசினான்!

"வந்து விட்டோம் சித்திரக் குகைக்கு!" என்று சொல்லி இடது பக்கம் திரும்பினார் சமணத்துறவி. என்ன ஆச்சரியம்! பூபதிக்கு அப்படியே மெய் சிலிர்த்தது! நேற்றிரவு அவன் தங்கியிருந்த அதே சித்தன்னவாசல் சித்திரக்குகை இப்பொழுது கண்ணுக்கு முன்னால் தெரிந்தது! அந்தக் குகைக்குச் சற்றுத் தொலைவில் குதிரைகள் நின்றன. பத்துப் பன்னிரண்டு வீரர்கள் சூழ்ந்து நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அருகிலே ராஜ கம்பீரத்தோடு நின்றவர் யார்? சித்திராங்க பூபதி கூர்ந்து பார்த்தான்! அவர் உதயசந்திரன்! (தொடரும்)

பற்களைப் பரிசுத்தமாக்கும்

மக்ளீன்ஸ்!

இம் மூன்று கோப்பைகளை பற்கள் என பாவனை செய்வீர்களானால் இவைகளின் வெளிப்புறம் மற்றும் உட்புறத்தைத் தவிர, ஊத்தை சேர்ந்து அபாயகரமான கிருமிகள் வசிக்கும் இடுக்குகளை சுத்தம் செய்வது மிகக் கடினம். பற்களைப் பாதுகாக்க விரும்புவோர், 'லைப்பாயிட்ஸ்'ஸினால் ஏற்படும் அபாயத்தை அறிய வேண்டியது அவசியம்.



மக்ளீன்ஸ் எளிதில் துலக்க முடியாத பற்களின் இடுக்குகளில் முண்டிப் புகுந்து துலக்குகிறது. எனவே

பற்சிதைவைத் தவிர்க்க சிறந்த சாதனமாக இருப்பது மக்ளீன்ஸ் ஒன்றே

பற்களின் மேல் படர்ந்திருக்கும் 'லைப்பாயிட்ஸ்' கலந்த பாசி பார்ப்பதற்கு அசிங்கமாயிருப்பதோடன்றி அபாயகரமானதுங்கூட என்று பல் டாக்டர்கள் நிரூபிக்கின்றனர். 'லைப்பாயிட்ஸை' எளிதில் சுத்தம் செய்ய முடியாது. இவை தவறாமல் சுத்தம் செய்யப்பட வேண்டும். இல்லையேல் இவைகளின் உட்புறத்தில் தங்கும் திராவகச் சத்து பற்களை அரித்தே விடுகின்றது. இத்தகைய 'லைப்பாயிட்ஸை' அறவே அகற்ற ஒரே வழிதான் உண்டு. அதாவது இதை கரையச் செய்ய வேண்டும். 'லைப்பாயிட்ஸை' கரைக்கக் கூடிய விசேஷமான திரவம் மக்ளீன்ஸில் இருப்பதால், வாயில் நுரை கூட்டாமல் மக்ளீன்ஸ் 'லைப்பாயிட்ஸை' லகுவாக ஜாக்கிரதையுடன் துரிதமாக கரையச் செய்கின்றது. பற்களின் சிதைவைத் தவிர்க்க இது மிகவும் முக்கியம்.

மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை தினந்தோறும் இருமுறை உபயோகியுங்கள். பற்கள் வெண்மையாகவும், ஆரோக்கியத்துடனும் விளங்கும்.

க்ளோரோபில் சேர்ந்த
வகையும் கிடைக்கும்



MTY-41 TAM

தேவியின் கடிதம்

நவராத்திரி

வசுமதி ராமசாமி

அன்பு மிக்க சுஜாதா,

நவராத்திரிப் பண்டிகை விஜயதசமி வரை பத்து நாட்களாக மிகவும் அமர்க்களமாக இருந்ததென எழுதியிருக்கிறாய். பண்டிகையை நன்றாகக் கொண்டாடிச் சந்தோஷப்பட்டாயா என்று என்னால் அறிய முடியவில்லை.

நாகரிகம் வளர்ந்து வருகிறது. சில நன்மைகளுடன் தீமைகளும் கலந்து வருகின்றன. நெல்லை மட்டும் அறுக்க முடிவதில்லை. கூடப் புல்லையும் சேர்த்துத்தானே அறுக்க வேண்டியதாக இருக்கிறது? நாகரிக வாழ்வு நாளடைவில் யந்திர வாழ்க்கையாகி விடுகிறது! இனைப்படி, அதிகப்படி, பண்டிகை, எல்லாவற்றிலுமே ரசமான உணர்வு குன்றி அலுப்புத் தட்டுகிறது. அதற்கு ஓரளவு அவரவர் மன நிலை மட்டுமல்ல; சூழ்நிலையும் காரணமாக அமைகிறது.

நேற்று அமெரிக்காவிலிருந்து ஒரு அம்மாள் என்னைப் பார்க்க வந்திருந்தார். அவருடைய கணவருக்குப் பத்து வருஷங்களாக அங்கே உத்தியோகம். நல்ல செழிப்பான நிலைதான். நான் அவர்களை விசாரித்துப் பேசியபோது அந்தம்மாள் சொன்ன வார்த்தைகளை அப்படியே எழுதுகிறேன். "சென்னை நகரத்தில் வாழ்பவர்களைப் பார்த்தால் எனக்குப் பொறாமையாக இருக்கிறது. இங்கே இயற்கை இன்பத்துடன் எளிமையாக இருக்கிறீர்கள். உங்கள் உன்னத வாழ்வுக்குத் தென்னாட்டில் கர்நாடக சங்கீதம் வேறு இருக்கிறது. இந்த நவராத்திரிப் பண்டிகையில் வீட்டுக்கு வீடு அழகான பொம்மைக் கொலுவுக்குப் போக முடிகிறது. ஆங்காங்கு இனிமையான சங்கீதம் கேட்கலாம். ஆனால் நாங்கள் யந்திரம் மாதிரி விருந்துக்குப் போவதும், நண்பர்களை அழைப்பதும் ஒரே மாதிரி வாழ்வு நடத்துகிறோம்" என்று அலுப்பாகச் சொன்னார்.

பக்தியும், கலை அழகும் நம் நாட்டைக் காப்பாற்றுகின்றன; வாஸ்தவம்தான். ஆனால் நாளடைவில் நாகரிகம் என்ற பெயரால் சில அநாகரிகங்கள் நம்மிடம் இருக்குமதி ஆகாமல் இருக்க வேண்டுமே!


தேவி மகிஷாசுரனை வதம் செய்கிற திருநாளாக இருந்தது. நவராத்திரி! அன்று அசுரத் தன்மை தனியாக உருப்பெற்று நின்றது. அதை அழிக்கும் நாளெல்லாம் பண்டிகைகளாக இருந்தது. இன்று நம்மிடையே ஊடுருவி இருக்கும் கெட்ட குணங்களைத் தவிர்க்கப் பூஜை செய்ய வேண்டுமல்லவா? நம் நாட்டில் நவராத்திரியை ஒவ்வொரு பகுதியிலும் ஒரு விதமாகக் கொண்டாடுகிறோம்.

சென்னை போன்ற நகரங்களில் அழைப்புகளுக்குப் போய் வருவது சிரம சாத்தியமாகத்தானிருக்கிறது. ஒரு இடத்துக்குப் போனால் அங்கு தெரிந்தவர்களுடைய எல்லா வீடுகளுக்கும் போய் வர முடியவில்லை. ஒவ்வொருவர் ஒரு தேதி வைத்திருக்கிறார்கள். அந்தத் தேதியில் போவதுதான் மரியாதை. ஓரிடத்திலும் இரண்டு நிமிஷங்களுக்கு மேல் நிற்பதற்கு அவகாசம் கிடையாது.

இம்மாதிரி தொந்தரவுகளிலிருந்து மீள, லலிதா வழக்கம் போல் யுக்தியெல்லாம் சொன்னாள். 'ஒரு பகுதியிலுள்ளவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து பொதுவாக ஓரிடத்தில் கண் காட்சி மாதிரி அலங்கரித்துக் கொலு வைத்து விடுவது. அவரவர்கள் தங்கள் அலங்காரப் பகுதிக்கு மேல் பெயரைப் போட்டுக் கொள்வது. எல்லோருமாகச் சேர்ந்து பஜனை பிரார்த்தனை செய்வது. செலவை ஒன்றாகப் போட்டுச் செய்வது. அல்லது சிறு சிறு பிரிவுகளாகச் சேர்ந்து ஒரு நாளையச் செலவை ஏற்றுக் கொண்டால் போயிற்று' என்றெல்லாம் வேடிக்கையாகப் பேசினாள். இவைகளெல்லாம் செயல் முறையில் வருவது சாத்தியமில்லையல்லவா?

நவராத்திரி பூஜை திருநாளாக இருந்தது. பிறகு அதை ஒட்டிக் கலைத் திருநாளாக மாறியது. அவரவர்கள் கை வேலைகளைக் காட்ட ஒரு வாய்ப்பாக இருந்தது. அம்பாளைத் துதித்துப் பாட ஒரு சந்தர்ப்பமாக இருந்தது. இப்பொழுது அந்தப் புனிதத் தன்மை மாறிச் சமூகப்போக்குவரவுக் கொண்டாட்ட நாளாக ஆகி விட்டது.

கொலு வைப்பதில் போட்டா போட்டியும் அதில் நாமும், நம்மைச் சேர்ந்தவர்களும் புத்திசாலித்தனமாக வைக்கும் ஆவலும் மிகுந்திருக்கின்றன. நலன் பெறப் பூஜிக்கும் நாளில் உலக மகா விஷயங்களைக் கொலு வைக்கிறார்கள். அதை மறுக்கவில்லை. காந்திஜியின் சரித்திரத்தில் எவ்வளவோ உள்ளத்தைத் தொடும் காட்சிகள் இருக்கின்றன. அவைகளின்றிக் கடைசிப் பிரார்த்தனைக் காட்சியை அமைக்கிறார்கள். அடுத்தபடியாக யுத்தச் செய்திகள்; ஒரு வீட்டுக் கொலுவில் பெரும் பகுதியில் அணுகுண்டு போட்டு அழிந்த நகரங்களை வைத்திருந்தார்கள். இவை நவராத்திரி நன்னாளில் தேவையா? நவநாகரிகம் வளர்ந்து விட்டதனால் நம் பண்பாட்டையே மறந்து விடுகிறோம். பிறரைத் திகைக்க வைத்துப் பெருமையடைய வேண்டும் என்ற ஒரு நோக்கமே இத்தகைய புதிய மோகத்துக்குக் காரணம்.



பண்டிகையின் தத்துவத்தை எண்ணிப் பார்த்தால் அழகும், பக்தியும் தோன்றும். பண்டிகை என்றால் குழந்தைகளுக்குக் குதூகலம். பண்டிகைகளை உரிய முறையில் கொண்டாடி உண்மையான ஆனந்தமடைய முயற்சி செய்யலாமல்லவா? இப்படிக்கு,

பூமாதேவி

முன்னும் பின்னும்

எஸ்.ஜி.ஆர்



மறுநாள் தீபாவளி!

அந்த வீட்டில் உள்ளவர்களின் ஒவ்வொரு உள்ளமும் ஒவ்வொரு விதத்தில் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தது.

உள்ளே, வேதனை நிரம்பிய மனத்துடன் பட்சணங்கள் செய்து கொண்டிருந்த பார்வதியின் எண்ணங்கள் முழுமையும் இரவு வரப் போகும் மாப்பிள்ளையைப் பற்றியும், மறுநாள் பொழுது நல்லபடியாக விடிய வேண்டுமே என்பதிலேயுமே லயித்திருந்தன.

வசந்தாவின் மனம் வேதனையிலும், ஆத்திரத்திலும் விண்டு விரிந்து கொண்டிருந்தது. விடிந்தால் அவளுக்குத் தலை தீபாவளி.

மணமாகி அவளுக்கு இரண்டே மாதங்கள்தான் ஆகின்றன. திருமணத்துக்குப் பிறகு அவள் கணவனைச் சந்தித்து மகிழப் போவது அந்தத் தலை தீபாவளியின் போதுதான். அந்தச் சந்தோஷத்தில் மண்ணைப் போட்டு விடாமல் இருக்க வேண்டுமே 'இது.'—இப்படி வசந்தா கவலைப்பட்டாள்.

* * *

ஐம்பது வயதுக்கு மேல் ஒருத்தி இவ்வுலகில் வாழ்ந்தால், அதுவும் கணவன் இல்லாத கைம் பெண்ணாக வாழ்ந்தால் அவள் படாத பாடுபட வேண்டும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினாள் அலமேலு.

கணவர் இருந்த வரைக்கும் அந்த வீட்டிலே அவள் வைத்ததே சட்டமாயிருந்தது அவள் சொன்னதைச் செய்யக் காத்துக் கொண்டு நின்றனர், மருமகளும் பிள்ளையும். ''அம்மா, அம்மா'' என்று சதா மருமகள் குழைந்து குழைந்து கூப்பிடுவதைக் கண்டு அளவற்ற பெருமிதம் கொண்டது அந்தப் பேதை உள்ளம்.

ஆனால்....?

அவள் கணவர் மறைந்தார். அத்துடன் அவளுக்கிருந்த மதிப்பு, செல்வாக்கு எல்லாமே மறைந்து போயின. அவள் இடுப்பிலிருந்த கொத்துச் சாவி



மருமகளின் இடுப்பைச் சரணடைந்தது. அவளுக்கு அன்று வரையில் இருந்து வந்த அந்தஸ்து, அதிகாரம் எல்லாம் அவளை உதறிவிட்டு மருமகளிடம் ஒட்டிக் கொண்டு விட்டன.

பிறகு....?

அவள் அந்த வீட்டிலே நடைப்பிணமாகத்தான் உலாவி வரத் தொடங்கினாள். முன்பு எடுத்ததற்கெல்லாம், "அம்மா, அதைச் செய்யலாமா? அம்மா, இதைச் செய்யலாமா?" என்று எல்லாவற்றையும் அவளைக் கேட்டுக் கேட்டுச் செய்து வந்தான் பெற்ற மகனான சுந்தரம். ஆனால் இப்பொழுது, "உனக்குத் தான் வயசாயிடுத்தே..ஏன் இந்த நப்பாசையெல்லாம்? பேசாமல் விழுந்து கிடவேன்" என்று எரிந்துவிழத் தொடங்கினான்.

மருமகளோ அவளைச் சிறிதும் லட்சியம் செய்வதேயில்லை. பெற்றோர்களைப் பார்த்துத்தானே குழந்தைகள் எல்லாவற்றையும் கற்றுக் கொள்ளுகின்றன! வசந்தாவுக்கும் கிட்டுவுக்கும் பாட்டி லட்சியமே இல்லை.

இந்தச் சமயத்தில்..?

வசந்தாவின் திருமணம் நெருங்கிக் கொண்டிருந்தது. கல்யாணத்தைப் பற்றியோ வரப் போகும் மாப்பிள்ளையின் யோக்யதாம்சங்களைப் பற்றியோ, செய்யப் போகும் சீர்செனத்திகளைப் பற்றியோ அலமேலுவுக்கு ஒன்றும் தெரியாது.

தங்கள் வீட்டுக்குப் பெரியவள் என்ற விதத்திலாவது, அல்லது தன்னைப் பெற்றவளாயிற்றே என்றாவது வசந்தாவின் திருமணத்தைப் பற்றி மகன் அவளிடம் கூறியிருக்க வேண்டுமா, வேண்டாமா....?

ஆனால் அவர்களோ?

அவளை உயிருள்ள, பாசபந்தங்கள் நிறைந்த ஜீவனாக மதித்து ஒரு வார்த்தை கூடக் கேட்க வில்லை. அஞ்ஞானம் தாளாமல் 'அவளே' வலுவில் சென்று கேட்டதற்கு, "உனக்கு ஏன் இந்த வம்பு? எங்களுக்குத் தெரியாதா? நீ பேசாமல் ஒரு மூலையில் விழுந்து கிட...." என்று மகன் கோபமாகக் கூறினான். அவன் கோபத்தீயிலே எண்ணெய் வார்ப்பதுபோல மருமகளும், "இதோ பாருங்கள், நமக்குச் சம்பந்தியாக வரப் போகிற இடமோ பெரிய இடம். அவர்களெல்லாம் வந்து கல்யாணம் நடந்து திரும்பிப் போகும் வரையில் உங்கள் அம்மாவையும் அவள் வாயையும் கட்டிக் காப்பது உங்கள் பொறுப்பு. நாளைக்கு அவர்களெல்லாம் வரும் பொழுது 'அமங்கள'மாக அவர்கள் எதிரில் ஏதாவது...." என்று தூபம் போட்டாள்.

அதன் பலன்?....

அவளுக்குச் சிறைவாசம். மணம் முடிந்து சம்பந்தி வீட்டார் திரும்பிப் போகும் வரையில் புறக்கடை அறையை விட்டு அவள் வெளியே வரக் கூடாது. பெற்றவளுக்கு மகனும், மாமியாருக்கு மருமகளும் அளித்த பரிசு, அவள் பேத்தியின் மணத்தைக் கண் குளிரக் காணக் கூடாது என்பதுதான்.

அவள் விதியை நொந்து கண்ணீர் விடுவாளா? அவர்களிடம் வகையாக மாட்டிவிட்டு, தாம் மட்டும் மறைந்து



இப்பொழுது நரம்புத் தளர்ச்சியால் தடுமாற்றம் கிடையாது!



நீங்கள் வீட்டிலோ ஆபீஸிலோ வேலை செய்யும் போது சில சமயங்களில், வேலையில் தாறுமாறுகள் ஏற்படுவதுண்டு. இத்தகைய கோளாறுகளை நிவர்த்திக்க உறுதியான நரம்புகள் தேவை. ஓவல்டினை சாப்பாட்டுடன் அல்லது படுக்கப் போகுமுன் அருந்தினால் நரம்புகள் வலுவடைந்து சக்தியும் எடையும் ஏறுகிறது. நேர்த்தியான இயற்கை உணவுப் பொருள்களிலிருந்து தயாரிக்கப்படும் இந்த ருசியான பானத்தில் பி & டி விடமின்கள் அடங்கியிருக்கின்றன. அது இலகுவில் ஜீரணமாகி இதர உணவுகளும் ஜீரணமாக உதவுகிறது. 'ஓவல்டின்' வேண்டுமென்று கேளுங்கள்.

ரேடியோ ஸிலோனில் ஓவல்டின் அமெச்சூர் நிகழ்ச்சி ([illegible] 41.72 மீட்டர்கள்) சனி மாலை 8 to 8-30; ([illegible]-9520 கிலோசைக்கிள்ஸ், 31 மீட்டர்கள்) ஞாயிறு மாலை 8 to 8-30.

ஒவ்வொரு டப்பியிலும் ஆரோக்கியம்

ஓ வ ல் டி ன்

விநியோகஸ்தர்கள்:

கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.



IV. 496

விட்ட கணவரை நினைத்துக் கவலைப்படு வாளா? மனைவியின் கைப்பொம்மையாகி, அவள் பாட்டுக்குத் தாளம் போட்டுக்கொண் டிருக்கும் பெற்றவனை நினைத்துக் கவலைப்பட் டுக்கொண் டிருப்பாளா? என்ன செய்வாள்?

ஒரு வழியாகக் கல்யாணம் முடிந்தது. 'பெரியவளின்' ஆசி யில்லாமலேயே மாப் பிள்ளை மூன்று முடிச்சுகளை வசந்தாவின் கழுத்திலே போட்டு, அவளைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு சென்று விட்டான்.

தீபாவளிக்கு இன்னும் மூன்றே தினங்கள் இருந்தன. அன்று பார்வதி சமையலறையில் கைக்காரியமாக இருந்தாள். வசந்தா, தனது கணவன் தீபாவளிக்கு முன்னாள் இரவு வருவதாக எழுதியிருந்த கடிதத்தை நூற்றி யோராவது முறையாகப் படித்து இன்புற்றுக் கொண்டிருந்தாள். கிட்டு, தீபாவளிக்கு என்று வாங்கிய வெடிகளில் சிலவற்றை அம்மாவுக்குத் தெரியாமல் எடுத்துச் சென்று தன் சக நண்பர்களுடன் வெடித்துக் கொண் டிருந்தான். சுந்தரம் அப்பொழுதுதான் ஆபீசிலிருந்து வீட்டுக்கு வந்திருந்தான்.

அந்தச் சமயத்தில் புறக்கடையிலிருந்து 'தடால்' என்ற சத்தமும், அதைத் தொடர்ந்து. "ஐயோ!" என்ற அலமேலு வின் குரலும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து எழுந்தன.

பார்வதி, சுந்தரம், வசந்தா மூவரும் புறக் கடைக்கு ஓடினர்.

அங்கே அலமேலு புறக்கடை வாசற்படிக்கு அருகில் குப்புற விழுந்து துடித்துக் கொண் டிருந்தாள். பெரியதா யிருந்த அந்த வாயிற் படி அவள் காலைத் தடுக்கிக் குப்புறக் கவிழ்த் துக் கீழே தள்ளி விட்டது.

பார்வதியும் சுந்தரமுமாகச் சேர்ந்து அல மேலுவைப் புறக்கடை அறையில் கொண்டு வந்து படுக்கவைத்தனர்.

"உம்....ஓடுங்கள், ஓடுங்கள்.....சீக்கிரம் போய் டாக்டரை அழைத்து வாருங்கள். ஐயோ, கஷ்டமே! போயும் போயும் இந்தச் சமயம் பார்த்துத்தானா விழுந்து தொலைக்க வேண்டும்!" என்று ஓலமிட்டாள் பார்வதி.

சுந்தரம் டாக்டர் வீட்டை நோக்கிப் பறந்தான். பத்தே நிமிஷத்தில் டாக்டர் பின்தொடர உள்ளே நுழைந்தான்.


டாக்டர் அலமேலுவைப் பரிசோதித்தார். ஒரு ஊசி போட்டார்.

"இவங்க வயசானவங்க. அதிர்ச்சி வேறு பலமாகத் தாக்கி இருக்கிறது. இரண்டு நாள் போனால்தான் எதுவும் சொல்ல முடியும்" என்று கூறி விட்டுப் போய் விட்டார் அவர்.

இரண்டு நாட்கள் பறந்து சென்றன.

அலமேலுவின் உடல் குணமாவதற்குப் பதில் அதிகமாகிக் கொண்டே சென்றது. கொஞ்சம் நம்பிக்கையைக் கொடுத்த டாக்ட ரும் கையை விரித்து விட்டார்.

விசாரமும் வேதனையும் பிடுங்கித் தின்ன, அந்த வீட்டிலுள்ள மூன்று உள்ளங்களும் புறக்கடையிலே ஸ்மரணையற்றுப் படுத்துக் கொண்டிருந்த ஜீவனை வாய் ஓயாமல் திட்டிக் கொண்டிருந்தன. அதைத் தவிர அவர்களால் செய்யக் கூடியது அந்தச் சமயத்தில் வேறு எதுவும் கிடையாதல்லவா?



கடலூர் 'கல்கி' ஏஜண்டு எஸ். ராஜ கோபாலன் அவர்களின் இளைய சகோதரி செள. வஸந்தாவுக்கும், சிரஞ்சீவி என். சேதுராமனுக்கும் சென்ற மாதத்தில் கடலூரில் சிறப்பாகத் திருமணம் நடந் தேறியது. வாழ்க மணமக்கள்!

இரவு மணி பத்து. வாசலில் கார் 'ஹாரன்' சப்தம் கேட்டது. புறக்கடையில் தாயாருக்கு அருகில் அமர்ந்திருந்த சுந்தரமும், கூடத்திலிருந்த வசந்தா, பார்வதி, கிட்டு மூவரும் வாசலை நோக்கி விரைந்தனர்.

புது மாப்பிள்ளையின் மிடுக்கோடு 'ஜம்' மென்று டாக்ஸியிலிருந்து இறங்கி உள்ளே நுழைந்தான் மாப்பிள்ளை மனோகர்.

உற்சாகமும் வேதனையும் உள்ளத்தை மூட்ட மாப்பிள்ளையை வரவேற்றனர், சுந்தர மும் பார்வதியும். கணவனைப் பார்த்த மறு விநாடி தன் அறையில் தஞ்சம் புகுந்தாள் வசந்தா, அவன் வரவை எதிர்நோக்கி.

"இரண்டு நாட்கள் முன்னாலேயே வரும் படி கடிதம் போட்டேனே, நீங்கள்..." என்று சம்பிரதாயத்துக்காகக் கூறி வைத் தான் சுந்தரம்.

"நான் என்ன செய்யட்டும்? எனக்கு லீவு கிடைப்பது அவ்வளவு கஷ்டம். ஒரு நாள் கூட லீவு கொடுக்க மாட்டேன் என்று சொல்லி விட்டான். நாளைக்கு மாலையிலேயே நான் கிளம்பிப் போக வேணும்" என்று, தான் முன்பே கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததை ஒப்பித்தான் மாப்பிள்ளை மனோகர்.

'நாளை மாலை வரைக்கும் என்ன? இன்று இரவு தன்னுடைதே...' என்று சுந்தரத்தின் மனம் தவித்துக் கொண்டிருந்ததை மாப் பிள்ளை எப்படி அறிவான்?

விடிய இன்னும் வெகு நேரம் இருந்தது. அதற்குள்ளாகவே அக்கம் பக்கத்து வீட்டுச் சிறுவர்களும், பெரியவர்களும் நீராடிவிட்டு, புத்தாடை உடுத்தி, பட்டாசுகள் வெடிக்கும் சத்தம் செவிகளைத் துளைத்தது.

சுந்தரமும் பார்வதியும் இரவு முழுவதும் இமையோடு இமை மூடவில்லை. அபாயம் தங்களை நெருங்கிக் கொண்டிருக்கிறது என் பதை உணர்ந்த அவர்கள் வயிற்றில் நெருப் பைக் கட்டிக் கொண்டு கிழவி அருகிலேயே கவலையுடன் அமர்ந்திருந்தனர்.

திடீரென்று அலமேலுவுக்குப் பெருமூச்சு வாங்கும். அதைக் கண்டதும் அவ்விருவரும் துடிதுடித்துப் போய் விடுவார்கள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மூச்சு நிதானத்துக்கு வரும். இப்படியே அவர்களை மாற்றி மாற்றி இரவு முழுவதும் படாதபாடு படுத்தி வைத்து விட்டாள் அலமேலு.

வெளியே ஆரவாரம் எழுந்ததுமே வேதனையோடு எழுந்தாள் பார்வதி. மாப்பிள்ளையையும் பெண்ணையும் எண்ணெய் ஸ்நானத்துக்கு எழுப்பி விட்டு, வெந்நீர் போடுவதில் முனைந்தாள். சுந்தரம் தன் தாயாரை விட்டு அகலவேயில்லை.

விடிந்தது. அலமேலுவுக்குப் பெருமூச்சு எழுந்து எழுந்து தணிந்து கொண்டிருந்தது. இரவு தாண்டியதே ரொம்பவும் ஆச்சரியம் தான். இனி எந்த நிமிஷத்திலும் அலமேலுவுக்கு எதுவும் நேரலாம்.

ஆபத்து தங்களை இவ்வளவு நெருங்கி வந்து விட்ட போதிலும் அவர்கள் மாப்பிள்ளை மனோகரிடம் இதைப் பற்றி மூச்சே விடவில்லை.

கடிகாரத்தின் முள் மேலே மேலே ஏறிக் கொண்டே சென்றது. புறக்கடையிலே இந்த உலகை விட்டு எந்தக் கணமும் பிரிந்து விடத் தயாராயிருந்த ஒரு ஜீவனைப் பற்றிய விஷயம் எதுவும் தெரியாமலேயே மாப்பிள்ளை, மாமனார் தனக்கு வாங்கிக் கொடுத்த வைர மோதிரத்தை அணிந்து கொண்டு, பட்டு வேஷ்டியைக் கட்டிக் கொண்டு இவ்வுலகை மறந்து தனது மனைவியிடம் உரையாடிக் கொண்டிருந்தான்.

சுந்தரம் புறக்கடையிலேயே பழியாகக் கிடந்தான். பார்வதியோ முழுக்க முழுக்க மாப்பிள்ளையைக் கவனித்துக் கொண்டாள்.

ஆயிற்று. மணி இதோ ஐந்தடித்து விட்டது. அடேடே! பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே ஆறும் ஆகி விட்டது. ஏழு மணி ரயிலுக்குச் செல்ல வேண்டிய மாப்பிள்ளை, மனைவியைப் பிரிய வேண்டுமே என்று துடிக்க, மாப்பிள்ளை போகும் வரையில் எதுவும் நேர்ந்து விடக்கூடாதே என்று மற்றவர்கள் துடிக்க, மொத்தத்தில் தீபாவளித் திருநாளான அன்று அவ்வீட்டில் எல்லோரும் துடித்துக் கொண்டிருந்தனர்.

மணி ஆறரை. இதோ மாப்பிள்ளையும் கிளம்பி விட்டார். கிட்டுவைப் புறக்கடையில் இருக்கச் சொல்லிவிட்டு மாப்பிள்ளையை வழியனுப்ப வெளியே வந்தான் சுந்தரம்.

டாக்ஸி வந்தது. மாப்பிள்ளை விடைபெற்றுக் கொண்டு டாக்ஸியில் ஏறி உட்கார்ந்தான். வண்டி ஒருதரம் உறுமிவிட்டு, புழுதியைக் கிளப்பியவண்ணம் கிளம்பிச் சென்றது.

டாக்ஸி பத்து கஜ தூரம் சென்றிருக்காது. எல்லோரும், "அப்பாடா!" என்று வேதனையையும் கவலையையும் பெருமூச்சு மூலம் வெளியேற்றிய அந்தச் சமயத்தில் கிட்டுவின் குரல் புறக்கடையிலிருந்து அபாய அறிவிப்பாக ஒலித்தது.

"அம்மா.. அப்பா..சீக்கிரம் ஓடி வாருங்களேன். பாட்டி....பாட்டி.... எனக்குப் பயமாக இருக்கிறதே!.."

எல்லோரும் புறக்கடையை நோக்கிப் பாய்ந்தனர். அதற்குள் கூட்டை விட்டுக் கிளி பறந்து விட்டது.

"அம்மா! பாட்டி 'என்னைக் கூப்பிட்டுச் சைகைமூலம், 'அத்திம்பேர் போய்விட்டாரா' என்று கேட்டாள். கார் புறப்படுகிற சத்தம் கேட்டதும் நான், 'போய் விட்டார்' என்றேன். உடனே பாட்டி என்னை விழித்துப் பார்த்துவிட்டுத் தலையைத் திருப்பிக்கொண்டு விட்டாள்" என்று கிட்டு கூறிக் கொண்டே போனதைக் கேட்டனர் அம்மூவரும்.

"அப்படியென்றால் மாப்பிள்ளை ஊருக்குப் புறப்படும் வரையில் சிரமப்பட்டு அவள் தன்னுடைய உயிரைக் கையிலே பிடித்து வைத்திருந்தாளா..?"

"சத்தியவானுக்காக யமனிடம் வாதாடி வெற்றி பெற்ற சாவித்திரியைப் போல் மாப்பிள்ளையின் பொருட்டு, குடும்பக் கௌரவத்தின் பொருட்டு, யமனுடன் வாதாடி இவ்வளவு நேரம் தன்னுடைய உயிரை நிறுத்தி வைத்திருந்தாளா?"

"அம்மா! பாட்டி!" என்ற குரல்கள் எல்லோருடைய வாயிலிருந்தும் ஒரே சமயத்தில் எழுந்தன.

"அம்மா! நீங்கள் தெய்வம். நீங்கள் உயிருடன் இருந்த வரையில் உங்களைக் கொடுமைப்படுத்திய பாவி நாங்கள். எங்களை மன்னித்து விடுங்கள்!" என்று கேவிக் கேவி அழுதனர் சுந்தரமும் பார்வதியும்.

வசந்தாவின் கண்களிலிருந்தும் கிட்டுவின் கண்களிலிருந்தும் நீர் தாரை தாரையாகப் பெருகி வழிந்து கொண்டிருந்தது.



எல்லோருக்கும் தெரியும் —
ப்ரூக் பாண்ட் தேயிலையின் மேன்மை யான புத்தம் புதிய தன்மைக்குக் காரணம் அது துரிதமாக கடைகளுக்கு அனுப்பப்படுவதே
ஒவ்வொரு ப்ரூக் பாண்ட் தேயிலை பாக்கெட்டிலிருந்தும் உங்களுக்கு அதிகப்படியான, ருசியான தேநீர் கிடைக்கிறது
ஒவ்வொரு நாளும் 24,90,496 ப்ரூக் பாண்ட் தேயிலை பாக்கெட்டுகள் விற் பனையாகின்றன
ஆகையால்தான் மற்றெந்தத் தேயிலையையும் விட அதிகப்படியான ஜனங்கள்
ப்ரூக் பாண்ட் தேயிலையையே
அருந்துகிறார்கள்!



இந்தியன் பாங்க் லிட்.

(ஸ்தாபிதம்: 1907)

தலைமை ஆபீஸ்: வடக்கு பீச் ரோட், சென்னை 1

உள்ளூர் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், சௌகார்பேட்டை, எழும்பூர், சேத்துப்பட்டு, திருவல்லிக்கேணி, மவுண்டு ரோட், ராயப்பேட்டை, ஆள்வார்பேட்டை, தேனாம்பேட்டை, மைலாப்பூர், காந்திநகர், தியாகராயநகர், கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், பெரியமெட் & ராயபுரம்.

தென்னிந்தியா முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புது டெல்லி, கொழும்பு, சிங்கப்பூர், F.M.S. முதலிய இடங்களில் கிளை ஆபீஸ்களிருக்கின்றன.

மூலதனம்

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	ரூ.	1,00,00,000
வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ.	62,02,615
ரிசர்வு மற்றும் இதர நிதிகள்	...	ரூ.	79,75,000
டிபாசிட்டுகள் (30-6-56)	...	ரூ.	32.08 கோடி

வெளிநாட்டு பரிவர்த்தனை உள்பட சகலவிதமான பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.



D. P. பார்த்தசாரதி.
B.A. (Hons.), B.L.
ஆக்டிங் செக்ரட்டரி.



புது வாழ்வு

ராமு

முதல் வகுப்பில் பட்டு மெத்தையில் ஒயிலாக உட்கார்ந்திருந்தாள் ஜனகம். அவள் உள்ளம் குழம்பிக் கிடந்தது. புது இடத்துக்குச் செல்கிறாள். அதுவும் தனிமையில் வாழப் போகிறாள். புதிய சூழ்நிலை எப்படி இருக்குமோ? அவளுக்கு நிம்மதியைக் கொடுக்குமா? அல்லது மறைக்க முயலும் மன வேதனையைத் துளிர்விடச் செய்யுமா?

"ஜனகம்! போய்ச் சேர்ந்ததும் கடிதம் போடு. உன்னை அழைத்துப் போக ஸ்டேஷனுக்கு வேலைக்காரன் வந்திருப்பான். என்னமோ எனக்கு நீ வேலைக்குப் போவது துளிக்கூடப் பிடிக்கவில்லை. கடைசியில் நான் என்ன சொல்லி என்ன பயன்? உன் பிடிவாதம்தான் வெற்றி பெற்றது." கிழவர் மகளின் செய்கையைக் குத்திக் காட்டியபடி பேசியவண்ணம் பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தார்.

அவள் பதில் பேசவில்லை. அசுவாரசியமாக அவர் சொல்வதைக் காதில் வாங்கிய வண்ணம் எங்கோ வெறித்து நோக்கிக்கொண்டிருந்தாள் ஜனகம்.

"ஜாக்கிரதையாகப் போய் வா. வெள்ளிதோறும் எண்ணெய் தேய்த்து முழுக மறந்துவிடாதே. வாரத்துக்கு ஒரு கடிதம் போட வேணும், தெரிந்ததா?" வண்டியைப் பிடித்துக் கொண்டே கொஞ்ச தூரம் நடந்து சென்றவர், வாத்சல்யத்துடன் அன்பு ததும்ப மகளையே பார்த்த வண்ணம் செயலிழந்து நின்று விட்டார். அவர் கண்களிலே கண்ணீர் முட்டி நின்றது.

ஊர்ந்து சென்ற ரயில் வேகம் எடுக்க ஆரம்பித்தது.

அவள் ஆசனத்துக்கு எதிரில் உட்கார்ந்திருந்த அம்மாள் மெல்லப் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தாள்.

"எது வரைக்கும் போறீங்க?" கனிவு சொட்டக் கேட்டாள் அந்த அம்மாள்.

"திருச்சி."

"கணவன் வீட்டுக்கா, அம்மா?"

இந்தக் கேள்விக்கு அவள் என்ன பதில் சொல்லுவாள்? எந்த ஒன்றை மனத்தின் அடியில் போட்டு அமுக்க முயன்றாளோ, அதைச் சுற்றியே பேச்சு கிளம்பிய பொழுது அவள் உள்ளம் குமைந்தது; குன்றியது. உடல் கூட இலேசாக நடுங்கியது.

"ஏன் அம்மா! நான் கேட்டதற்கு நீங்கள் பதிலே சொல்லவில்லையே?" என்று உரிமையோடு அந்த அம்மாள் பேசுவதைக் கண்டு ஜனகம் வியப்புற்றாள்.

"கணவன் இருந்தும் அவருடன் வாழக் கொடுத்து வைக்காத பாவி அம்மா, நான்! என் வாழ்வும் ஒரு கைம்பெண்ணின் வாழ்வும் ஒன்றுதான். அவளுக்கு இறந்த கணவனின் நினைவிலேயே வாழ்க்கை ஓடுகிறது. நான் இருக்கும் கணவனை நினைந்து நினைந்து, உருகி உருகி வாழ்வை ஓட்டுகிறேன். அவள் வாழ்ந்த நாட்களை எண்ணி எண்ணிப் பெருமூச்சு விடுகிறாள். நான் வருங்கால வாழ்வை, அதன் பயங்கரத்தைக் கற்பனைக் கண்ணால் கண்டு கதி கலங்குகிறேன். அவள் முகர்ந்து கருகியவள். நான் முகராமலேயே கருகப் போகிறவள்..." அவள் வாயிலிருந்து சொற்களா வெளிவந்தன? இல்லை, இல்லை; இதயக் குமுறல், உள்ளத் துடிப்பின் பிரதிபலிப்பு,—இவைகளல்லவோ வெளிவந்தன!

அந்த மூதாட்டிக்கு என்ன தோன்றிற்றோ? நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு ஜனகத்தையே வைத்த விழி பிறழாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் உள்ளத்தை அப் பேச்சு தாக்கியிருக்க வேண்டும். இல்லாவிடில் அம்மாளின் கண்களில் கண்ணீர் வருவானேன்? ஜனகத்தைத்தான் அப்படி மூக்குக் கண்ணாடியைத் தூக்கி நன்றாக உற்றுப் பார்ப்பானேன்?

ஜனகத்துக்கு அவளிடம் தன் கதையைச் சொன்னால் நெஞ்சை அழுத்தும் பாரம் குறையும் என்று தோன்றியது.

பட்டணத்துச் சீமான்களுள் பத்மநாபனும் ஒருவர். அவருக்கு இரண்டடுக்கு மாடி வீடு ஒன்று மாம்பலத்தில் இருந்தது. நான்கு தலைமுறைக்கு வரும் ஆஸ்தி; அதை அவருக்குப் பிறகு அநுபவிக்க ஒரே ஒரு பெண். அவர் உயிரே அவள்மேல்தான் இருந்தது.

மகளை அன்புடன் பேணி வளர்த்தார். படிக்க வைத்தார். பாட்டு சொல்லிக் கொடுத்தார். ஜனகத்தின் அழகும் வயதும் வளர்ந்தன. பருவத்தின் முதற்படியில் காலை வைத்துவிட்டாள். அவள் தந்தைக்குக் கவலை பற்றிக் கொண்டது.

என்றுமே அவள் அவருடன் இருக்க முடியுமா? என்றாவது ஒரு நாள் கணவன் வீடு செல்ல வேண்டியவள் தானே; அதுதானே நியதி? ஆனால் பெற்ற மனம் அவளைப் பிரிந்து வாழ இடம் கொடுக்கவில்லை.

யோசித்து யோசித்து அவர் ஒரு முடிவுக்கு வந்தார். வரும் மருமகனைத் தம் வீட்டிலேயே வைத்துக் கொண்டு விட்டால் போயிற்று என்ற தீர்மானம்தான் அது.

வரன் தேடிக்கிடைக்காமல் மனம் சோர்ந்து இடிந்து போய்விட்ட நிலையில், ' மதுரையில் ஒரு பையன் இருக்கிறான். ஏழைப் பையன்; பி. ஏ. பட்டதாரி. பெற்றோர்களை இழந்தவன். குணக்குன்று. போய் விசாரித்துப் பாருங்களேன் '—என்று அவருடைய நண்பர்களில் ஒருவர்தான் அந்தச் செய்தியைக் கொண்டு வந்தார்.

அடுத்த ரயிலிலேயே மதுரை போனார் பத்மநாபன். பையனைப் பார்த்தார். திருப்திகரமாகவே இருந்தது. நம்பிக்கையான மனத்துடன் திரும்பி வந்தார். பையன் வந்து பெண்ணைப் பார்த்து விட்டுச் சென்றான். பிறகு என்ன? அந்த வருஷம் தை மாதம் அவர் வீட்டில் கெட்டி மேளம் கொட்டியது.

விவாகம் முடிந்த மறுநாளே மாப்பிள்ளை ரங்கநாதன் மதுரைக்குக் கிளம்ப ஆயத்தமானான். மாமனார் சொன்னார்: " மாப்பிள்ளை! எனக்கு இருக்கும் சொத்தை வைத்துக்கொண்டு, கட்டிக் காத்து அநுபவித்து வந்தாலே போதும். உங்களை நான் மருமகனாக ஆக்கிக் கொண்டதின் முக்கிய நோக்கம், நீங்கள் இங்கேயே இருப்பீர்கள் என்ற எண்ணத்துடன்தான்..." மனத்திலுள்ளதை ஒளிவு மறைவின்றிக் கூறினார் கிழவர்.

"நீங்கள் தவறாக என்னை எடை போட்டதற்காக நான் மிக மிக வருந்துகிறேன். நான் உங்கள் வீட்டில் இருக்க முடியாது. தங்கள் மனத்தில் இப்படிப்பட்ட எண்ணம் இருக்கும் என்று எனக்கு முன்பே தெரிந்திருந்தால், அல்லது தெரியப்படுத்தி யிருந்தால் நான் இந்தத் திருமணத்துக்குச் சம்மதித்திருக்க மாட்டேன்." அவனும் தன்னுடைய மனத்தைத் திறந்து காட்டி விட்டான்.

கிழவர் அந்தப் பேச்சைக்கேட்டுச் சிலையென நின்றார். அவர் நெற்றி நரம்புகள் புடைத்து எழுந்தன. ஏமாற்றம் அவர் நெஞ்சை வறுத்தெடுத்தது. பாசத்தின் முன் அவருக்கு எல்லாமே துச்சமாகத்தான் பட்டது. அவர் தம் அறிவை இழந்தார். யாரிடம் பேசுகிறோம் என்பதையும் மறந்தார்.

"மாப்பிள்ளை! உங்களுக்கு என் பெண் வேண்டுமா? அப்படியென்றால் நீங்கள் இந்த வீட்டில் இருந்துதான் ஆகவேண்டும். இல்லையேல் என் பெண்ணை உம்முடன் நான் அனுப்பத் தயாராக இல்லை. அவளுக்குக் கல்யாணம் செய்யவில்லை என்று எண்ணிக் கொள்கிறேன். என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்காத மாப்பிள்ளை எனக்குத் தேவையில்லை."

" தாராளமாக வீட்டிலேயே பெண்ணை வைத்து அழகு பார்த்து ஆரத்தி சுற்றிக் கொட்டுங்கள். போகுமுன் உங்களுக்கு ஒரு எச்சரிக்கை விடுகிறேன். நான் இந்த வீட்டில் காலடி எடுத்து வைப்பேன் என்று கனவிலும் எண்ண வேண்டாம். தங்கள் பெண்ணின் வாழ்விலே சலனத்தை ஏற்படுத்தியதற்காக என் இதயம் கனிந்த அநுதாபத்தை அவளுக்குச் சொல்லவும். வருகிறேன்." திரும்பிக் கூடப் பார்க்காமல் விடுவிடு என்று சென்று விட்டான் அவன்.

பாவம், ஜனகம் அங்கே நடந்த சம்பாஷணையை ஒன்றுவிடாமல் கேட்டுக் கொண்டு தான் இருந்தாள். ஆனால் அவள் என்ன செய்வாள்? அச்சமயம் அவளுடைய மூளை மரத்தல்லவோ போய் விட்டது!

ஒரு வருடம் எப்படி ஓடியது? அவளுக்கே ஆச்சர்யமாக இருந்தது. தந்தையிடம் அவள் வாதாடினாள். நயமாகச் சொல்லிப் பார்த்தாள். கெஞ்சினாள்; கத்தினாள். அவருக்கு உறைக்கும்படியாகவும் கடச்சுட ஏதேதோ சொன்னாள். ஆனால் வைரம் பாய்ந்த அவர் உள்ளத்திலே அவள் பேச்சு பதியவில்லை.

துன்பத்தைத் துணையாகக் கொண்டு ஜனகம் வாழ்ந்தாள். எவ்வித சலனமுமின்றிக் காலம் ஓடியது. ஜனகத்தால் அந்த வீட்டில் கூண்டுக்கிளியென அடைபட்டுக் கிடக்க முடியவில்லை. எங்கேயாவது கண் காணாத இடத்துக்கு ஓடிவிடலாமா என்று கூடச் சிற்சில சமயம் எண்ணுவாள். அந்த வேதனை தாளாத நிலையில்தான் தகப்பனாரிடம் வாதாடித் தான் வேலைக்குப் போக உத்தரவு பெற்றாள் ஜனகம். உடனே அவளுக்குத் திருச்சியில் ஒரு வேலையும் கிடைத்தது. திருச்சிக்குப் போய் அவள் வேலை பார்ப்பதில் கிழவருக்குச் சம்மதம் இல்லா விட்டாலும், அவள் பிடிவாதத்துக்குப் பயந்து அவளை வேலைக்கு அனுப்பி வைக்க அவர் இணங்கினார்.

திருச்சியில் கிழவருக்கு ஒரு வீடு இருந்தது. ஜனகம் கிளம்புவதற்கு முன்னால் வேலைக்காரனைத் திருச்சிக்கு அனுப்பி வீட்டைச் சுத்தம் செய்ய ஏற்பாடு செய்தார். ஓட்டல் சாப்பாடு அவர் பெண்ணுக்கு ஒத்துக் கொள்ளுமா? சமையற்காரி ஒருத்தியையும் ஜனகம் புறப்





படுவதற்கு முதல்நாளே, திருச்சிக்கு அவர் அனுப்பி வைத்தார்.

* * *

விடியற்காலை. இரவு முழுதும் கண் கொட்டாமல் விழித்திருந்த ஜனகம் அப்பொழுதுதான் சற்றுக் கண்ணயர்ந்தாள். வண்டி திருச்சி சந்திப்பில் வந்து நின்று வெகு நேரம் ஆகி விட்டது. ஒரே சந்தைக் கடை இரைச்சல், போர்ட்டர்கள் சாமான்களைத் தூக்கும் கடபுடாச் சத்தம் எல்லாமாகச் சேர்ந்து ஜனகத்தைத் தூக்கத்திலிருந்து விழிப்புறச் செய்தன. திடுக்கிட்டு விழித்த அவள் அவசரம் அவசரமாக எழுந்தாள். பெட்டி படுக்கைகளை யெல்லாம் எடுத்து வெளியே கொண்டுவந்து வைத்தாள். வேலைக்காரன் அப்பொழுதுதான் ஓடோடியும் வந்து அவள் முன்னே நின்றான். சாமான்களை யெல்லாம் அவன் தூக்கிச் செல்ல ஜனகம் அவனைப் பின் தொடர்ந்து சென்றாள்.

மறுநாள்காலை. ஜனகம் குளித்துச்சாப்பிட்டு விட்டு வேலையை ஏற்றுக் கொள்ளக் கிளம்பி விட்டாள். வேலை ஒன்றும் கடினமானதாக இல்லை. பொழுது போவதே தெரியவில்லை. அதுதானே அவளுக்கு வேண்டியது?

அவள் வேலைக்கு வந்து, ஒரு மாதம் ஓடிவிட்டது. தந்தை ஒரு தடவை திருச்சி வந்து மகளைப் பார்த்துவிட்டுச் சென்றார்.

அன்று காரியாலயம் விட்டு வீடு நோக்கி வந்து கொண்டிருந்தாள் ஜனகம். அவள் மனம் குமம்பிக் கிடந்தது. கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ விடாமல் தடுக்கும் தந்தையை நினைத்தபொழுது அவளுக்கு அழுகைதான் வந்தது. ஏமாற்றத்தின் எல்லையில் அவள் உள்ளம் தவித்துத் துடித்தது.

வரும் வழியில் எதிர்பாராச் சம்பவம் ஒன்று நிகழப் போவதை அவள் கண்டாளா, என்ன? தெருத் திருப்பத்தில் அவள் யாரைச் சந்தித்தாள்? அச் சந்திப்பு உண்மைதானா? கனவு அல்லவே! அவள் கண்கள் பலமுறை கொட்டிப் பிறகு நிலைத்து நின்று விட்டன.

எதிரே ஆஜானுபாகுவாய் ஆறடி உயரத்துக்கு அவள் கழுத்தில் மங்கல நாண் ஏற்றிய மகானுபாவன் வந்து கொண்டிருந்தான்.

'' ஆ! நீங்களா ?''— வியப்பின் எல்லைக்கு இழுத்துச் செல்லப்பட்டாள் ஜனகம்.

'' ஆம், நானேதான்.''

'' தங்களைச் சந்திப்பேன் என்று நான் நினைக்கவில்லை. தயவு செய்து என்னுடன் வீட்டுக்கு வாருங்கள். அப்பா வீட்டில் இல்லை. சென்னையில்தான் இருக்கிறார். நான் ஏன் இங்கு வந்தேன் என்று உங்களுக்குத் தெரிய வேண்டாமா? அன்று அப்பாவிடம் கோபித்துக் கொண்டு போனீர்களே? என்னிடம் ஒரு வார்த்தையாவதுபேசினீர்களா? நான் உங்கள் அடிமை; உங்களுடைய சொத்து. தாங்கள் செல்லும் இடமெல்லாம் நான் நிழலெனத் தொடர வேண்டியவள்தானே? அதுதானே என் கடமை? அன்றே உங்களுடன் கூட வந்திருப்பேன். தாங்கள்தான் கோபத்தின் ஆவேசத்தில் ஓடியே விட்டீர்கள்.'' கண்களிலே கண்ணீர் வேலி கட்ட அவனை அன்புடன் நோக்கினாள் அவள்.

அவனுக்கு என்ன தோன்றிற்றோ, தெரியவில்லை. அவளைப் பின்தொடர்ந்து அவள் வீட்டுக்குச் சென்றான். அன்றிரவு அவனுக்கு இன்ப இரவு. வாழ்விலே கண்டிராத புதுமையான நாள். மணிக் கணக்காக அவளுடன் பேசினான். சிரித்து மகிழ்ந்தான். அவன் அந்த ஊரிலே ஒரு கம்பெனியில் 'அக்கௌண்டெண்டாக' வேலை பார்த்து வருகிறானாம்.

ஜனகம் வற்புறுத்தி அவனை அந்த வீட்டிலேயே தங்க வைத்தாள். நாட்கள் நகர்ந்து மாதத்துக்கு வழிவிட்டன. ஆயிற்று; புது வாழ்வு ஆரம்பித்து மூன்று மாதங்கள் முடிந்து விட்டன. ஜனகத்துக்கு இப்பொழுது வேலைக்குச் செல்லவே பிடிக்கவில்லை. ஒருநாள் கால் கடுதாசியை எழுதி அனுப்பிவிட்டு வீட்டிலேயே உட்கார்ந்து விட்டாள். கணவன் சம்பாதிக்கிறான், வீட்டிலேயே குடும்பக்காரியங்களைக் கவனிக்கப் பொறுப்புள்ள ஆள் அவளைத் தவிர வேறு யார் இருக்க முடியும்? சமையல்காரிக்குச் சீட்டு கிழிக்கப்பட்டது.

அவள் கணவனுடன் குடும்பம் நடத்துவதை அப்பாவுக்கு எழுதவேயில்லை. இடையில் ஒரு சமயம் தகப்பனார் வந்தபொழுது நல்ல வேளையாகக் கணவன் வீட்டில் இல்லை. வந்த ஒரு மணி நேரத்தில் கிழவர் கிளம்பிச் சென்று விட்டார். அவள் பிழைத்தாள்! இல்லாவிடில் பெரிய பூகம்பமே ஏற்பட்டிருக்கும்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ரங்கநாதனுக்கு விடுமுறை நாள். மாடியறையில் உட்கார்ந்து அவன் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான். ஜனகம் உள்ளேவேலையாக இருந்தாள். வாசல் கதவுதட்டும் ஓசை கேட்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தாள் அவள்.

அவள் அப்பா!

அவளுக்கு மூச்சே நின்றுவிடும்போல் இருந்தது. கதவைக்கூடத் திறக்காமல் அப்படியே திகைத்து நின்று விட்டாள்.

"ஏனம்மா, என்னைப் பார்த்துவிட்டு அப்படி நின்றுவிட்டாய்! கதவைத் திற."

சுய உணர்வு பெற்றுக் கதவைத் திறந்தாள். உள்ளே நுழைந்த தகப்பனார் ஹால், முன் அறை எல்லாவற்றையும் ஒரு தடவை நோட்டம் விட்டார்.

"சமையல்காரி எங்கே? நீ ஏன் அம்மா சமையல்செய்து உடம்பைக் கெடுத்துக்கொள்கிறாய்?" என்று பரிவுடன் விசாரித்தார்.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "இல்லேப்பா......அவளுக்கு உடம்பு சுகமில்லை, அதனாலே.." என்று இழுத்தாள்.

தகப்பனார் கைகால் சுத்தம் செய்யப் புறக்கடைப் பக்கம் சென்றார். திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தவளாய் முன் அறைக்கு வந்து எட்டிப் பார்த்தாள். 'அவருடைய' சட்டைகள் ஸ்டாண்டை அலங்கரித்திருப்பதைக் கண்டதும், முன் அறையை இழுத்துப் பூட்டினாள். அதற்குள் தகப்பனாரும் புறக்கடையிலிருந்து உள்ளே வந்தார்.

"வாருங்கள், அப்பா. காப்பி கொண்டு வந்து தருகிறேன்."

"காப்பியைக் கொடு. குடித்துவிட்டு மாடியறையில் கொஞ்ச நேரம் படுத்துத் தூங்கிவிட்டு வருகிறேன். அந்த அறையில்தான் காற்று சுகமாக வருகிறது."

அப் பேச்சைக் கேட்டு அவள் இதயம் ஓர் கணம் நின்று பிறகு இயங்க ஆரம்பித்தது.

"அப்பா! அந்த அறையில் போய்ப் படுக்க வேண்டாம்! அந்த அறையில் ஒரே தூசி. பெருக்கி ரொம்ப நாளாகிறது. வாசல் வராந்தாவில் சாய்வு நாற்காலியைப் போடுகிறேன். படுத்துக் கொண்டு இருங்கள். சமையல் ஆகிவிடும். குளித்துவிட்டுச் சாப்பிடலாம்" என்றாள் ஜனகம்.

"சரி. ஆபீஸ் எப்படி இருக்கிறது? உனக்கு இந்த வேலை பிடித்திருக்கிறதா?"

"ஓ!" என்றாள் தலையசைத்தபடியே.

வராந்தா பக்கம் சென்றவர், "இந்த வேட்டியும் பனியனும் யாருடையது?" என்று கேட்டார். 'அவருடைய' வேட்டியையும் பனியனையும் சோப்புப் போட வேண்டுமென்று மூலையில் போட்டிருந்தாள். இப்பொழுது அப்பாவின் கண்களில் பட்டு விட்டனவே! என்ன செய்வது? ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "இந்த வேலைக்காரனுக்கு என்ன சொன்னாலும் தெரிவதில்லை. அவன் துணி மணிகளை வீட்டினுள்ளே கொண்டு வர வேண்டாம் என்று எத்தனை தரம் சொன்னாலும், கேட்டால்தானே?" — இவ்வாறு ஜனகம் சொல்லிவிட்டு மாடிக்கு விரைந்தாள். கணவனைச் சரி செய்ய வேண்டுமே!

"அப்பா வந்திருக்கிறார் போலிருக்கிறது: கீழே வரட்டுமா?" அவன் உதடுகளில் குமட்டுச் சிரிப்போடு கேட்டான்.

"போதுமே உங்கள் சிரிப்பு. தயவுசெய்து இருந்த இடத்தை விட்டு அசையாமல் இருங்கள். உங்களுக்குக் கோடிப் புண்ணியம். உங்கள் தலை தெரிந்தால் போதும், பிறகு பிரளயம்தான்" என்று கூறிவிட்டு விடுவிடு என்று கீழே இறங்கி வந்து விட்டாள் அவள்.

பிறகு ஒருவாறு கிழவர் கிளம்பிச் சென்றார். ரங்கநாதனுக்கு அளவுகடந்த கோபம் ஏற்பட்டது. "ஜனகம்! இப்படிப் பயந்து பயந்து என்றால் வாழ்க்கை நடத்த முடியாது. அடுத்த தடவை உன் அப்பா வரும் பொழுது நான் அவர் எதிரில்தான் நடமாடப் போகிறேன். எதற்காக அவருக்கு நாம் பயப்படவேண்டும்?" அவன் கண்களில் கோபக் கனல் தெறித்தது.

மறுநாளுக்கும் மறுநாள். அவன் ஆபீஸுக்குக் கிளம்பிச் சென்று விட்டான். அவன் தலை மறைந்ததும் தபால்காரனின் தலை தெரிந்தது. அவள் தந்தையிடமிருந்து கடிதம்வந்திருந்தது.

அன்புள்ள ஜனகத்துக்கு,

ஆசீர்வாதங்கள். நான் இரண்டு நாட்களுக்கு முன்பு அங்கு வந்திருந்தபொழுது நீ என் வரவினால் மிகுந்த அதிர்ச்சியுள்ளாகி விட்டாய். இல்லையா? நீ குடும்பம் நடத்துவதைக் காண வேண்டுமென்றுதான் வந்தேன். ஆனால் நீ சாமர்த்தியமாக நடித்து என்னை ஏமாற்றி விட்டதாக நினைக்கலாம். ஏமாந்தது யார், தெரியுமா? நீயும் அல்ல, நானும் அல்ல. உன் கணவர்! ஆமாம். அவருக்குத் திருச்சியில் கம்பெனி ஒன்றில் அக்கௌண்டெண்டாக வேலைகிடைத்ததே! அது அவருடைய சொந்த முயற்சியினால் கிடைத்தது என்று உன்னிடம் சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால் அது என் சிபாரிசு மூலம்தான் கிடைத்தது என்பது நாளது வரைக்கும் அவருக்குத் தெரியாது. தவிர, 'என் வீட்டு வாசற்படி ஏறமாட்டேன்' என்று வீரம் பேசினாரே அன்று. இன்று அவர் உன்னுடன் குடும்பம் நடத்துவது யாருடைய வீட்டில்? என் வீட்டின் அல்லவா? எப்படியோ என் எண்ணம் ஒரு விதத்தில் நிறைவேறிவிட்டது. நீ வேலையை ராஜிநாமா செய்துவிட்ட விஷயம் எனக்கு என்றோ தெரியும். என்னுடைய பிடிவாதத்தினால் உன் வாழ்வைக் கெடுப்பேனா? மாதத்துக்கு ஒருமுறை வந்து உன்னை, இல்லை, உங்களைப் பார்த்து விட்டுச் செல்கிறேன். உனக்கு இது எத்தனை மாதம்? நான் வந்த பொழுது வாந்தி எடுத்தாயே! இப்படிக்கு,

பத்மநாபன்.

மாலை கணவன் வந்ததும், அப்பா கடிதம் போட்டிருந்தார் என்று அவனிடம் சொன்னாளே ஒழியக் கடிதத்தைக் காட்டவில்லை. 'என்ன எழுதியிருக்கிறார்?', என்று அவன் கேட்டதற்கு, "நாம் இருவரும் குடும்பம் நடத்துவது அவருக்குத் தெரிந்து விட்டது! அதற்காக அவருக்கு இப்பொழுது கோபம் இல்லை" என்று சொன்னாளே தவிர, மற்ற விஷயங்களைப் பற்றி மூச்சு விடவில்லை. 'ஒரு வேலை வேதாளம் மறுபடியும் முருங்கைமரம் ஏறிவிட்டால்....?' என்ற பயத்தினால் அவள் அந்த இரண்டு விஷயங்களையும் மூடி மறைத்து விட்டாள். எப்படியோ, அவளுடைய வாழ்விலே மலர்ச்சி ஏற்பட்டதே. அதற்காக அவள் கடவுளுக்கு அஞ்சலி செலுத்தித்தான் ஆக வேண்டும்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam


Rexona
இப்பொழுது...
ரெக்ஸோனாவில்
முன்னைவிட மிக அதிக நறுமணம்!
RP. 144-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

